OLIARAZI

மாத சஞ்சிகை

# ஒளிஅரசி

இல்லத்தரசிகளின் தோழி

ඔලිඅරසි

நல்லதொரு குடும்பம்

ஒளி - 01 இதழ் - 11
ஒக்டோபர் 2014
பக்கங்கள் : 100


அன்பு + அறிவு + அழகு + திறன் + போட்டி + வாழ்த்து + பொழுதுபோக்கு

அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு





PUBLIC LIBRARY
JAFFNA



அழகுக்கலை ஆலோசகர்கள், அழகுக்கலை சுயாதீன முகாமையாளர்களை உருவாக்கிய சுவீடன் நாட்டு நிறுவனத்தின் யாழ். சேவை நிலையத்தினால்

- துரித ஒரு மாத கால அழகுக்கலைப் பயிற்சி
- டிப்ளோமா அழகுக்கலைப் பயிற்சிகள்
- கேக் ஐசிங் பயிற்சிகள் அனைத்தும் 30 % கட்டணக்கழிவில் ஆரம்பமாகவுள்ளன.

# அழகுக் கலைப் பயிற்சி

அனைத்து பயிற்சிகளும் கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று ஒவ்வொரு மாணவர் மீதும் தனித்தனியாகக் கவனம் செலுத்தப்பட்டு பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**பிரிவு 1 : 13.10.2014 அன்று 10.30 மணிக்கு (ஒவ்வொரு மாதமும் முதல் திங்கள்)**

**பிரிவு 2 : 18.10.2014 அன்று 10.30 மணிக்கு (ஒவ்வொரு மாதமும் முதல் சனி)**


குறிப்பு : அழகுக்கலைப் பயிற்சி, கேக் ஐசிங் பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு மாதமும் முதல் திங்கள் மற்றும் முதல் சனி அன்று 10.30 மணிக்கு புதிய பிரிவுகள் ஆரம்பம். வகுப்புகளில் தனியாகவும் குழுவாகவும் இணைந்துகொள்ளலாம். குழுவாக இணைந்துகொள்பவர்களுக்கு மேலும் விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்.


**Skin Type Testers** மூலம் சருமம் பரிசோதிக்கப்பட்டு பருக்கள், கரும்புள்ளிகள் மற்றும் கண் கரு வளையங்கள், முடி உதிர்வு, பொடுகு, பித்தவெடிப்பு, உடல் பருமன் கூட்டுதல், குறைத்தல் போன்ற பல வகையான அழகு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படும்.

## ஒறிபிளேம்

616, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (வேம்படி சந்தியில்)

தொடர்புகளுக்கு: 077 2288243 / 021 4546026





# M.J. TEXTILE

## கர்ப்பிணித்தாய்மார்களுக்கு தேவையான அனைத்து பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.



- சீத்தை
- பெட் ஜெக்கெட்
- ப்பீடிங் பிராஸ்
- கிடி சூட்ஸ்
- நெப்பீஸ்
- நெப்பீ பின்ஸ்
- டவல்
- வூல் சூட்ஸ்
- வூல் கெப்ஸ்
- பெனல் பிலெங்கட்ஸ்
- பவுடர் பப்ஸ்
- பேபி சோப் கேஸ்
- கொட் சீட்
- றப்பர் சீட்ஸ்
- பிலெங்கட்ஸ்
- வெட் டிஸ்யூ
- மெட்ரஸ்
- பிலோ கேஸ்
- க்லோத் ஹங்கர்
- க்லோத் க்ளிப்
- பீடிங் போத்தல்
- மொஸ்கிடோ நெட்ஸ்
- பாத் பேசின்
- மமா பேக்ஸ்
- பேபி பாஸ்கட்ஸ்
- பேபி றெக்ஸ்
- பேபி கொமட்ஸ்
- கொட்டன் வூல்
- கொட்டன் பட்
- பேபி ஹெயார் பிரஷ்
- பேபி டோயிஸ்
- பெட்டிகோட்
- ஸ்கூல் பேண்டி
- அன்டர்வெயர்
- சாரி உள்பாவாடை
- பேட்ஸ் பெக்கட்ஸ்

**No . 196/22 & 196/6, J.B. Super Market, keyzer Street, Colombo - 11**
**Tel: 0112 452 969, 072 2927 036, 077 6447274**

PUBLIC LIBRARY JAFFNA
PUBLIC LIBRARY JAFFNA

# நுழைவாயில்

## ஆன்மிகம்

திருக்கோணேஸ்வரம்........................30
சூரிய பகவான்..............................62
மாவிட்டபுரம் காங்கேயமூர்த்தி........81
அனுமன் செய்த தியாகம்..................84


## கவிதைகள்

இருட்டுத் தேசம்..........................10
தாயும் சேயும்..............................40
மறக்க முடியா மழை நாள்..............83


## சிறுகதைகள்

பழிக்குப் பழி..............................21
கல்யாணம்...................................36
தாய்மைக்குத் தண்டனை..................55
ஓர் அபலையின் வாழ்க்கை..................66


## நேர்காணல்கள்

நட்சத்திர இல்லத்தரசி....................22
ஜுனியர் சுப்பர் ஸ்டார்....................56


## கட்டுரைகள்

ஒளியட்டும் நரகாசுரர்கள்....................07
தெய்வத் திருமகள்............................12
ரொமன்ஸ் இரகசியம்..........................18
ஆண்களை வசப்படுத்துங்கள்.................48
சாமுத்திரிகா இலட்சணம்....................76


## சினிமா

மறக்கமுடியாத சித்திரம்....................86
சினிமா விமர்சனம்............................90
'ஐ' இன் பிரம்மாண்டம்........................91
சர்ச்சைக்குள்ளான 'கத்தி'....................91


## மருத்துவம்

மறைமுக வில்லன்.............................58
நீங்கள் நலமா?.................................74
விக்கல் வருவது ஏன்?........................80


வாசகர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும் எமது தீபாவளித் திருநாள் வாழ்த்துக்கள்...



Shape Instantly...
10 % Discount
PUBLIC LIBRARY JAFFNA.
The BodyKerves®
International
Internationally recognized Bodykerves
gives you a stunning attractive figure instantly...
BK24L
Slim and Tone Legging
BK16B
Slim lift Bamboo
BK 24A
Highwaist Panty
BK16
Slimlift Supreme
BK20BS
Convertible Bra
BK22H
Hip-Enhancer
BK22D
Hip and Back Panty
Available Sizes : M,L,XL,XXL
Rs 2500 Above......
HOME DELIVERY HOTLINE 0777 700 798
ODYKERVES ARE SEAMLESS AND WILL KEEP YOU
COMFORTABLE THROUGHOUT
Available at
dykerves International
9, Stratford Avenue,
Colombo 05
No 617, Negombo Road,
Mabole Wattala
Tel: 011 494 494 1
Our Dealers:
Anuradhapura-Tharindu Enterprices
Abstract - Welisara,Race Course
Anamaduwa - Veenus Palace
Athurugiriya - Salon Senelle
Ambalangoda - Salon Dineli
Anuradhapura - Salon Thejani
Battramulla - LV'S Nail Studio
Boralasgamuwa - Salon Thanuja Jagoda
Batticaloa - Nilam Trades
Colombo 15 - Salon Nimali
Colombo 06 - Nalani's Beauty Parlour
Dalugama - Salon Lorel
Gampaha - Salon Nels
Galle - Salon Dineli
Kurunegala - Salon Manali
Kurunegala - Salon Splendid
Kelaniya - Lak Roo Beauty Salon
Kottawa - Sisara Brideal
Kiribathgoda - Salon Sha
Kaduwela - Salon Jeewani
Matara - Salon Ruweththi
Maharagama - Salon Dhammi
Moratuwa - Salon Sheela
Negombo - Salon Nature
Nugegoda - Salon Nilmini Tennakoon
Nugegoda - Panasonic
Nittambuwa - Queens Salon
Piliyandala - Beauty Gedara
Rajagiriya -Salon Nisuki
Trincomalee - Nawa milas

# “ஒளி அரசி”

இல்லத்தரசிகளின் தோழி

**மாதம் ஒரு முறை**
**ஒக்டோபர் 1 - 31, 2014**

நியூ விஷன் மீடியா சின்டிகேற் பிறைவேட் லிமிட்ட் - ஆசிரியர் குழுவால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

**வடிவமைப்பு:**
எஸ். கஜரூபன், ஆர். கிரிஷாந்

**தொலைபேசி:** 011 5738003,
071 8628360, 071 8628361

தொலைநகல்: 011 5517945
ஆசிரியர் குழு: 011 5738003
E-mail: oliarazi33@gmail.com
editoroliarazi@gmail.com

**விளம்பரப் பிரிவு :**
கொழும்பு : 078 8864730, 071 4114997
வட மாகாணம் : 0215671111

**விநியோகப் பிரிவு :**
கொழும்பு : 011 5737592, 071 8628379
வட மாகாணம்:
021567222, 0776569617, 071 6182182
**சந்தா விபரம்:** ( ஒரு வருடம்) 1000/=
(தபால் செலவு உட்பட)

**கடித தொடர்புகளுக்கு :**
ஆசிரியர், ‘ஒளிஅரசி’
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.



**வாசகர் விழிப்பு:**
விளம்பரங்களின் உண்மைத்தன்மை தொடர்பாக கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் போது ஆவணங்களை சரியாக பரிசோதித்து பார்ப்பது வாசகர்களின் கடமையாகும்.


**போட்டிகளில் பங்குபற்றும் வாசகர்களுக்கு ஒரு முக்கிய அறிவித்தல்**

தங்களுக்கான பரிசில்களை அனுப்பி வைப்பதில் உள்ள சிரமங்களை தவிர்ப்பதற்காக தயவுசெய்து தங்களின் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு போட்டிக்குரிய விடயங்களை அனுப்பவும். அத்துடன், போட்டிகளில் வெற்றிபெற்று இதுவரை பரிசு கிடைக்காத வாசகர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
071-6850005, 078-2825009

# தீபாவளி மலரட்டும்!

அன்பான வாசகர்கட்கு,

தீபாவளி சிறப்பிதழுடன் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். நூறு பக்கங்களுடன் சிறப்பான கட்டுரைகள் பலவற்றைத் தாங்கிய வண்ணம் இந்த இதழ் வெளிவந்துள்ளமை சிறப்பான அம்சமாகும். கடந்த இதழில் குறிப்பிட்டதைப் போல் இலங்கையில் இருந்து வெளிவருகின்ற தமிழ் சஞ்சிகை தீபாவளிக்கென ஒரு சிறப்பிதழை வெளியிடுவது இதுவே முதல்முறையாகும். அந்தப் பெருமை ‘ஒளி அரசி’யையே சாரும் எனலாம். ‘ஒளி அரசி’யின் இந்தச் சாதனைக்கு ஆதாரமாய் அல்லது காரணமாய் அமைந்தவர்கள் வாசகர்களாகிய நீங்களே! இதுவரை காலமும் நீங்கள் தந்துகொண்டிருக்கின்ற அன்பும், ஆதரவும், ஊக்கமும், பின்னூட்டல்களுமே ‘ஒளி அரசி’யின் இதழ்களை சிறப்பாக வெளிக்கொணர்வதற்கு எங்களைத் தூண்டும் சக்தியாக அமைந்துள்ளது என்றால் அது மிகையல்ல. இலங்கையில் அதிகம் விற்பனையாகும் மாதாந்த சஞ்சிகை என்ற பெருமையை அடைந்துள்ள ‘ஒளி அரசி’ உங்கள் பேராதரவால் அதனைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்வாள் என நம்புகிறோம்.

தீபாவளி சிறப்பிதழாக வெளியிடுவதன் காரணமாக ‘ஒளி அரசி’யின் இந்த இதழில் சில மாற்றங்களைச் செய்துள்ளோம். வழமையாக வெளிவருகின்ற அழகுக்குறிப்பு, சமையல் குறிப்பு, பட்டுச்சேலை கட்டுரைப் போட்டி, கவிதைப்போட்டி, விந்தை உலகம் போன்றவற்றை இந்த இதழில் நிறுத்தியுள்ளோம். அதேநேரம், திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் போன்றவற்றின் தல வரலாறுகளையும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வாழ்க்கை பற்றி கட்டுரையையும் இணைத்ததோடு அதிக கவிதைப் பக்கங்கள், சிறுகதைகள், இலக்கிய பக்கங்கள், சினிமா செய்திகள் போன்றவற்றையும் இந்த இதழில் இணைத்துள்ளோம்.

இது ஒரு தீபாவளி சிறப்பிதழாக வெளிவருவதன் காரணமாக ஆன்மீகம் பற்றிய விடயங்களை அதிகமாகச் சேர்த்துள்ளோம் என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். அதேவேளை, வழமைபோல அனைத்து விடயங்களையும் சமஅளவில் தாங்கியவண்ணம் ஒளிஅரசியின் அடுத்த இதழ் வெளிவரும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

நிறைவாக, வாசகர்களாகிய உங்களது வாழ்வில் தீமைகள் விலகி, நன்மைகள் பெருக எமது தீபாவளி திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- ஆசிரியர் குழு -**

# ஒழியட்டும் நரகாசுரர்கள்: மலரட்டும் தீபாவளி!

தமிழர்களின் குறிப்பாக, இந்துக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றாக தீபாவளி திகழ்கின்றது. காக்கும் கடவுளாகிய திருமாலின் அவதாரமான கிருஷ்ணர் தியவன் நரகாசுரனை அழித்த நாளை இந்துக்களாகிய நாம் தீபாவளி எனக் கொண்டாடுகின்றோம். இலங்கையில் உள்ள இந்துத் தமிழர்கள் மாத்திரமன்றி, இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள இந்துக்களும் ஏனைய நாடுகளில் உள்ள சமணம் போன்ற வேறுசில சமயத்தவர்களும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதாக அறிய முடிகின்றது. இலங்கையில் உள்ள நாமும் தென்னிந்தியாவைச் சேர்ந்த இந்துக்களும் நரகாசுரனை அழித்த நிகழ்வை நினைவுகூர்ந்து தீபாவளியைக் கொண்டாடும் அதேவேளை, வடநாட்டைச் சேர்ந்த இந்தியர்கள் தீபாவளிக்கு வேறு காரணங்கள் கூறுகின்றனர். ஆயினும், எப்பாகத்தில் உள்ளோர் இத் தீபாவளியை கொண்டாடினாலும் அங்கு காணப்படக்கூடிய பொதுவான சிந்தனை தீமைகள் அழிந்து நன்மைகள் உண்டாகட்டும் என்பதாகக் காணப்படுகின்றது.

நாம் ஆண்டுதோறும் தீபாவளியைக் கொண்டாடினாலும் தீமைகள் என்னவோ அழிந்து போவதாகத் தெரியவில்லை. மாறாக அதிகரித்துக்கொண்டிருக்கிறது. வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு, தினம் தினம் நரகாசுரர்கள் உருவாகிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால், கிருஷ்ணர்களைத்தான் காணமுடியவில்லை. கலிகாலத்தைக் குறைகூறுவதைத் தவிர, வேறு என்ன செய்யமுடியும் என நொந்துகொள்வோரும் உள்ளனர்.

ஆனால், கிருஷ்ணர்கள் அவதரிப்பார்கள் என்று காத்துக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. நாங்கள் கிருஷ்ணர்களாக உருவாகவேண்டும். எமது அன்றாட வாழ்வில் வீட்டிலோ, தெருவிலோ, காரியாலயத்திலோ அல்லது பொது இடங்களிலோ நரகாசுரர்களைக் காண்கின்ற போது அவர்களை எதிர்க்கப் பழகிக்கொள்ளவேண்டும். எம்மால் நரகாசுரர்களை வதம் செய்யமுடியாதுதான். ஆனால், ஆகக் குறைந்த பட்சம் நரகாசுரர்களோடு சமரசம் செய்யாமலாவது இருக்கலாம் தானே?

இன்றைய துரதிர்ஷ்டம் என்னவென்றால் நரகாசுரர்கள் பணம், பதவி, செல்வாக்கு என்கின்ற எல்லாவகையிலும் பலம் மிகுந்தவர்களாக இருக்கின்றார்கள். அப்பாவிகள் மட்டுமே நல்லவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அதனால்தான் பெண்மையைப் பேணி மதித்து போற்றிவந்த இந்நாட்டில் பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகங்களும் வன்முறைகளும் நித்தம் நித்தம் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. நரகாசுரர்களிடமிருந்து இவர்களைக் காப்பாற்ற எந்த கிருஷ்ணரும் இங்கு வருவதாகத் தெரியவில்லை. இருக்கின்ற கண்ணன்களுக்கும் அது முடிவதில்லை.

என்றைக்கு இந்நாட்டில் பெண்களும், குழந்தைகளும் நலிந்த வரும் அச்சமன்றி வாழும் வகையில் அனைத்து நரகாசுரர்களும் அழித்தொழிக்கப்படுகின்றார்களோ அன்றுதான் உண்மையான தீபாவளி. காத்திருப்போம் மலரும் அந்த உண்மையான தீபாவளிக்காய்!



# ஆசிச்செய்தி

தீமைகள் விலகி நன்மைகள் ஓங்கிட உலகெல்லாம் தீபாவளி கொண்டாடப்படுகிறது. தீபாவளி என்றால் ''தீபங்களின் வரிசை' என்று அர்த்தம் கொள்வோரும் உள்ளனர். இந்தியாவில் தீபாவளி தினத்தன்று தீபங்களை ஏற்றி கொண்டாடுகின்றனர். ஆனால், இலங்கையர்களாகிய நாம் கார்த்திகை விளக்கீட்டு தினத்தில் தான் தீபங்களை ஏற்றுவது வழமை.

இந்தத் தீபாவளி எதற்காக ஏற்படுகிறது? ஏன் நாம் இதைக் கொண்டாடவேண்டும்? என்ற கேள்வி எழுவது இயல்பே.

ஸ்ரீகிருஷ்ண பகவான் நரகாசுரனை வதம் செய்தார். கடைசி காலத்தில் ஸ்ரீகிருஷ்ணரால் கொல்லப்பட்டமையால் அவனுக்கு ஞானோதயம் ஏற்பட்டது. ''நான் இருந்த காலத்தில் உலகத்துக்கு எவ்வளவோ கஷ்டங்களை உண்டாக்கினேன். நீங்கள் என்னை சம்ஹாரம் செய்த இந்தத் தினமானது உலகத்துக்கு நன்மையையும் சந்தோசத்தையும் கொடுக்கும் தினமாக இருக்கும்படி அருள்புரிய வேண்டும். இருட்டு இருக்கக்கூடாது. எங்கும் வெளிச்சமாக, பிரகாசமாக இருக்கவேண்டும்'' என்று பிரார்த்தித்துக் கொண்டான். அவனுடைய பிரார்த்தனையினால் இந்தத் தீபாவளியானது ஒரு புண்ணிய காலமாக ஏற்பட்டது என ஆன்மிக நூல்கள் கூறுகின்றன.

''நியாயம், தர்மம், நீதி இவையெல்லாம் நமக்குக் கிடைத்தால், நாம் மகிழ்வோம்தானே. கிடைக்காவிட்டால், துவண்டு கதறி அழுவோம். அப்படியானால் அதே நியாயமும், தர்மமும், நீதியும் இந்த உலகம் முழுமைக்கும் தேவை என்பதை நாம் உணரவேண்டும். அநியாயம், அநீதி, அதர்மம் ஆகிய திசையின் பக்கம் ஒரு அடி கூட எடுத்துவைக்காமல் தர்மத்தின் பாதையே நம் பாதையாக நியாயத்தின் வழியே நம்முடைய வழியாக இருக்கவேண்டும்.

செயல்கள் அனைத்திலும் இறைச்சக்தி நிறைந்திருக்கிறது என்பதைப் நாம் அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும்.

ஒரு மனிதனுடைய வாழ்வில் இல்லறம் நல்லறமாக இருக்கவேண்டும். ஆனால், அதில் சிக்கல்களும், பிரச்சினைகளும் தற்போது அதிகரித்துவிட்டன. விவாகம் என்பது இந்தக் காலத்தில் ஆடம்பரம் நிறைந்ததாகிவிட்டது. எல்லாமுமே அவசர அவசரமாக நடைபெறுகிறது. எத்தனை வேகமும் பரபரப்புமாகக் கல்யாணங்கள் நிகழ்கிறதோ, அதற்குச் சற்றும் குறையாத பரபரப்புடன் அடுத்தடுத்த நிகழ்வுகள் நடந்து முடிகின்றன. கணவனை மனைவியும், மனைவியைக் கணவனும் ஏமாற்றி, வேறொரு இரகசிய வாழ்க்கை நடத்துகிற வேதனை அதிகரித்து வருகின்றது. இதனால், விவாகங்கள் இரத்து ஆகிற மோசமான நிலை உருவாகியுள்ளன. தர்மத்தை உடைக்கவோ, மீறவோ, மாற்றவோ நமக்கு எந்த அதிகாரமும் அருகதையும் இல்லை. அப்படியானவற்றை செய்யவும் கூடாது.

நல்ல இல்லறத்தின் விளைவுகள், மணிமணியான குழந்தைச் செல்வங்கள். ஒவ்வொரு வீட்டுக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் தேவையான விடயம் நமது வாரிசுகள். நாம் நல்ல செயல்களைச் செய்தால்தான் அதைப் பார்த்து வளர்கிற நமது குழந்தைகளும் அவ்விதமே செயல்படுவார்கள். எனவே, நல்ல விடயங்களை வெறுமனே போதனையாக மட்டுமல்லாமல் அதன்படி வாழ்ந்து காட்ட வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அப்போதுதான் குழந்தைகள் எனும் நாளைய தலைமுறைகள் நமது கலாசார, பண்பாடுகள் கெடாமல், கெடுக்காமல், அதை அடியொற்றி வாழ்வார்கள். நமது பண்பாடும் கலாசாரமும், இறைவழிபாடுகளும் மிகமிக உன்னதமானவை. எனவே, நாம் இவற்றை ஒருபோதும் கைவிடக்கூடாது.

**பண்டிகைகள் என்பவை வெறும் குதூகலத்துக்கான கொண்டாட்டம் மட்டுமல்ல, இந்து தர்மத்தின்படி உறவுகளிடத்தும் உலகில் உள்ள மனிதர்களிடத்தும் அன்பைப் பரிமாறிக் கொள்வதற்கான அற்புத நிகழ்வாகவே அவை திகழ்கின்றன.**

பண்டிகைகள் என்பவை வெறும் குதூகலத்துக்கான கொண்டாட்டம் மட்டுமல்ல, இந்து தர்மத்தின்படி உறவுகளிடத்தும் உலகில் உள்ள மனிதர்களிடத்தும் அன்பைப் பரிமாறிக்கொள்வதற்கான அற்புத நிகழ்வாகவே அவை திகழ்கின்றன.

பண்டிகைகளில் புனித நீராடுவதும், புத்தாடை அணிவதும், உடலையும், மனதையும் மலர்ச்சிப்படுத்தும் உறவுகள், தோழமைகள் என எல்லோருக்கும் வாழ்த்துச் சொல்லியும், பலகாரங்களையும் பரிமாறியும், சந்தோசத்தைப் பகிர்ந்துகொள்கிறோம். இல்லாதவர்க்கு முடிந்தளவு உதவிசெய்வதும், இருப்பதை எல்லோருக்கும் பகிர்ந்துகொடுப்பதுமான மனோபாவத்தை நமக்குள் விதைப்பவை பண்டிகைகளே. நமக்குள்ளே நல்ல விடயங்கள் விதைக்கப்பட்டால் அது நம் குழந்தைகளிடம் விருட்சமென வளரும். பல்கிப் பெருகும்.

இந்து தர்மத்தின் தார்ப்பரியத்தைப் பேணிக்காத்து, பண்டிகையைக் கொண்டாடுங்கள். பரஸ்பரம் அன்பை விதைத்து, அதனை இன்னும் இன்னும் வளர்த்து விருட்சமாக்குங்கள்.

அனைவருக்கும் எனது ஆசீர்வாதங்கள்! அனைவர் வாழ்விலும் மங்களம் உண்டாகட்டும்.

ஓம் சாந்தி

**பிரம்மஸ்ரீ இராமச்சந்திரக்குருக்கள் பாபு சர்மா**

ஜனாதிபதியின் இந்து சமய விவகாரங்களுக்கான இணைப்பு செயலாளர்.

# இருட்டுத் தேசம்

ஓரசுரன் மாண்டதற்காய் உதித்தது
இந்தத் தீபாவளி
பாரதில் இன்றெங்கும் அசுரர்கள்
பாற்படும் நிலைமையன்றோ?

ஒன்றை அழித்ததன்மூலம் இன்னொன்றா
இல்லை ஓராயிரம்!
தன்னைப் படைத்தது தானேகண்ட
தாற்பரிய மென்போம்.

நரகாசூரன் காலத்தில்கூட இப்படி
இருந்திரா உலகம்
பரக்கக் காணும்பகைமை முடிக்கும்
பரிதவிப்பே இன்றாம்.

முதியோரைக் கனம் பண்ணாததோர்
இளமை முறிக்கு
எதிலும் அவசரம் எதற்கெடுத்தாலும்
எடுப்பது கோடரி.

நியாயம் என்பது எங்குமேயில்லை
நிட்டூழியம் அரசோச்சும்
தயாபரம் கொண்டாளும் இருட்டுத் தேசம்
தீபாவளி என்றால்...?

குடிப்பது நடுவீதி நின்றே நட்டாந்திரம்
கூத்தாடுதல் மனைவியை
அடிப்பது பிள்ளைகளை வீட்டைவிட்டுத்
துரத்துதல் தானாமே...?
தீயென்றால் நன்மை தீமை ரெண்டுஞ்செய்யும்
தீண்டிப் பார்த்தால்
பாவென்றால் கவிதை பாவத்துக்கும்
முதலெழுத் தென்கையில்.

தீபாவளி இரண்டையும் தோற்றுவிக்கும்
தீபங்களின் வரிசையை
தீபாவளி என்பது புராணக்கதைகள்
'தீபா' கறிவிலைக் கூவல்!
ஒவ்வோர் ஆண்டும் தீபாவளி கொண்டாடி
உற்பத்தி ஆக்கியமை
பல்லிய அசுரர்களைத் தானென்பதால்
பாறணைக்குத் தயாராவோம்.
கந்தசஷ்டி விரதத்தை ஆறுநாட்களும்
விந்தைமிக ஒருவேளை
பந்தியதில் பால்குடித்தே அனுபவிப்போம்
சிந்தை குளிர இனியாவது!




New
Ambiha
Fancy Emporium
Dealers in :
Costume, jewellery Cosmetics, Saree Borders and fancy Goods Etc.
216 C, Main Street, Colombo - 11.
Tel. 2421759


Jeni Driving School
NO: 49A, George R.D. Silva mawatha, Colombo - 13
Tel: 011 2932339
Mobil: 071 0961406, 072 3828456
Hot line: 077 535531
Ladies for Lady Instracator
L
CELICA
L



**டாக்டர்:-** ''உங்க கணவருக்கு தலையில ஆபரேஷன் பண்ணினா எல்லாம் மறந்துவிடும்.... பரவாயில்லையா?''

**நோயாளியின் மனைவி:** ''பரவாயில்லை டாக்டர்... ஆனா சமையல் பன்றது மட்டும் ஞாபகம் இருக்கிற மாதிரி ஏதாவது பண்ணுங்களேன்.''



**ஆசிரியர்:-** உன் பேரு என்ன?

**மாணவர்:-** ''கவிக்குமரன்''

**ஆசிரியர்:-** வீட்ல உன்னை எப்படி கூப்பிடுவாங்க.....?

**மாணவர்:-** ''தூரமா இருந்தா சத்தமா கூப்பிடுவாங்க. பக்கத்துல இருந்தா மெதுவா கூப்பிடுவாங்க.''



**நர்ஸ்:-** ''ஏங்க .... மூச்சை இழுத்து விடுங்க.''

**நோயாளி:-** ''விளையாடாதீங்க நர்ஸ். உங்களை பார்த்ததில இருந்து அதைத்தானே செய்துகிட்டு இருக்கேன்.''



**ஒருவர்:-** ''அழகு நிலையங்கள் பெரும்பாலும் ஏன் பெண்களுக்கு மட்டுமே உள்ளன?''

**மற்றவர்:-** ''ஆண்கள் இயற்கையிலேயே அழகானவர்கள் என்பதால் தான்.''



**டாக்டர்:-** ''உங்க கணவருக்கு இப்ப ஓய்வு ரொம்ப முக்கியம். இந்தாங்க தூக்கமாத்திரை...''

**மனைவி:-** ''ஒரு நாளைக்கு எத்தனை தடவை கொடுக்கணும் டாக்டர்?''

**டாக்டர்:-** ''இது அவருக்கில்லை... உங்களுக்கு.''



**அரசன்:-** நேற்றிரவு போர்க்களத்தில சண்டையிடுவது மாதிரி கனவு கண்டேன்.

**அரசி:-** கட்டில் தேப்பலாய் நனைஞ்சிருந்தப்பவே நினைச்சன்.

# 'தெய்வத்திருமகள்' 'சிவத்தமிழ்ச் செல்வி' தங்கம்மா அப்பாக்குட்டி



இலங்கையில் உள்ள இந்து ஆலயங்கள் எல்லாம் சமயப் பணியுடன் தம்மை மட்டுப்படுத்தியிருந்த காலத்தில் ஆலயங்களும் சமூகப்பணியில் ஈடுபடலாம் என முன்மாதிரியாக செய்து காட்டி அமைதியாக ஒரு ஆன்மிகப் புரட்சியை நிகழ்த்தி ஈழத் திருநாட்டின் சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெண்மணி என்கின்ற பெருமைக்குரிய "சிவத்தமிழ் செல்வி" தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடைய வாழ்க்கை வரலாறு பற்றி இன்றைய இளந்தலைமுறையினரும் அறியும் வண்ணம் தீபாவளி சிறப்பிதழிலே நோக்குதல் சாலப் பொறுத்தமுடையதோன்றாகும்.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக சொற்பொழிவுப்பணி, எழுத்துப் பணி, ஆலய அறங்காவல் பணி, குழந்தைகளுக்கும், முதியோருக்கும் வாழ்வளிக்கும் மக்கள் பணி என்பவைகளை சிறப்பாகச் செய்து எம்மண்ணில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் தெய்வத்திருமகள் - சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி.

யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழை என்னும் கிராமத்தில் 1925ஆம் ஆண்டு தை மாதம் 07ஆம் நாள் பிறந்த சிவத்தமிழ்ச் செல்வி, மல்லாகத்தில் அமெரிக்கமிஷன் பாடசாலையிலும், விசாலாட்சி வித்தியாலயத்திலும், அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்திலும் தொடக்கக் கல்வியைக் கற்றார். சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலே இடைநிலைக்கல்வி பயின்று 1941 முதல் 1944 வரை இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றார். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்திய 'பண்டிதர்' தேர்விலும், சைவ சித்தாந்த சமாஜம் நடத்திய 'சைவப் புலவர்' தேர்விலும் வெற்றிபெற்றார். பண்டிதையாகவும், சைவப்புலவராகவும் திகழ்ந்த சிவத்தமிழ்ச் செல்வி, 1946 முதல் மட்டக்களப்பு சென்ற. சிசிலியா ஆங்கிலப் பாடசாலையிலும், 1949 முதல் கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலையிலும், பின்பு அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்திலும், 1964 முதல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் ஆசிரியப் பணி செய்துள்ளார்.

சிவத்தமிழ்ச்செல்வியின் சொற்பொழிவுப்பணி அவருடைய அறிவுத் திறனையும், புலமையையும் பெரிதும் வெளிப்படுத்தியது. சைவ இலக்கியம், சைவ

சித்தாந்தம், சமய ஒழுக்கம் முதலாகப் பல விடயங்கள் பற்றி இவர் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் பல இடங்களிலும் சொற் பெருக்காற்றினார். இவரது எளிமையான தமிழ், இனிமையான குரல் எல்லோரையும் வசீகரித் தன. ஒவ்வொரு சைவத் தமிழ் வீட்டிலும் 'தங்கம்மா' என்னும் பெயர் இடம்பெறலா யிற்று. 'தங்கம்மா அப்பாக்குட்டியிடம் படிக்கப் போகிறேன்' என்று கூறும் அளவிற்கு அவருடைய சொற்பொழிவுப் பணி சிறப்பாக அமைந்தது.

**சமயப் பணி**

நாவலர் பெருமானுக்குப் பின் யாழ். மண்ணி லிருந்து பாரெல்லாம் சமயப் பிரசாரம்செய்த பெருமைக்குரியவர் கலாநிதி தங்கம்மா அம் மையார். அவரின் பிரசாரப் பணிகளைப் பல ரும் பலவழிகளில் போற்றிக் கௌரவித்தனர்.

1966இல் மதுரை ஆதீனத்தில் 'செஞ்சொற் செம்மணி' என்ற பட்டம் அவருக்கு வழங்கப் பட்டது. 1970இல் ஈழத்துச் சிதம்பரத்தில் 'சிவத்தமிழ்ச் செல்வி' என்ற பட்டமும் பொன்னாடை, பதக்கமும் பெற்றார். 1971ஆம், 1972ஆம், 1974ஆம் ஆண்டுகளில் மலேசியா, சிங்கபூருக்குச் சொற்பொழிவுப் பயணம்செய்த அவருக்கு அங்கு 'திருவாசகக் கொண்டல்' என்ற பட்டம் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டது. 1973இல் தென்னிந்தியாவில் திருவிடை மருதூரில் நடைபெற்ற திருமுறை கருத்தரங்குக்குத் தலைமை தாங்கினார்.

இருபத்தியேழு சொற்பொழிவுகள், பத்துக் கட்டுரைகள், கந்தபுராணச் சொற்பொழிவுகள் என எட்டு நூல்களுக்கு இவர் ஆசிரியர். இவற்றுள் கந்தபுராணச் சொற்பொழிவுகள் 1978இல் சாஹித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. சமய இதழ்களிலும் கோயில் மலர்க ளிலும் பத்திரிகைகளிலும் பெருந்தொகையான கட்டுரைகளை எழுதியுள்ளார்.

**ஆலயப் பணி**

தெல்லிப்பழையில் சிறிதாக இருந்த ஒரு கோயில் பாரெல்லாம் போற்றப்படும் பெரும் திருத்தலமாக வளர்வதற்குக் காலாயிருந்தவர் சிவத்தமிழ்ச் செல்வி. ஆசிரியராகவும், சமய பிரசாரகாரர் ஆகவும் இருந்த அவருடைய செல்வாக்கு தெல்லிப்பழையில் இளைஞரும் முதியோரும் ஒருங்கிணைந்த ஒரு பெரிய தொண்டர் சபையை உருவாக்க காலாயிற்று. தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் வான ளாவ எழும்பியது. இந்த அன்னையினுடைய ஆளுமை அந்த ஆலயத்தின் வளர்ச்சியுடன் சமூக வளர்ச்சியையும் சேர்ப்பதற்கு வழிகாட் டிற்று. ஆலய அறங்காவற்பணியுடன் சிறுவர் முதியோர் நிறைவாழ்வுப் பணியும் இணைந் தன. தேவி உறையும் ஆலயம் மக்கள் சேவை செய்யும் நிறுவனமாக எப்படி அமையும் என்பதற்குத் தெல்லிப்பழை தேவஸ்தானமும் அதன் அரவணைப்பிலேயுள்ள துர்க்காபுர இல்லம் எல்லாம் சான்றுகளாக அமைகின்றன.

**விருதுகள்**

எங்கள் சமூகத்திலே ஒரு சாதாரண ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய ஒருவர் கல்வி கேள்விகளிலே வல்லவராகவும், ஆலய பணியையும், சமூகப் பணியையும் இணைத்து உலகளாவிய புகழ் பெற்றவராகவும், தனக்குப் பின்னே இப்பணியைச் செய்ய ஒரு பரம்பரை யையே உருவாக்கியவராகவும், சமயத் தொண் டுக்கும், சமூகத் தொண்டுக்கும் சைவ இலக்கிய சாஸ்திர சொற்பொழிவுத் தொண்டிற்கும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவராக வும் விளங்கிய சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டிக்கு யாழ். பல்கலைக் கழகம் கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கி கௌரவித்தது. அமெரிக்கா ஹாவாய் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆச்சிரமம் 2005ஆம் ஆண்டுக்கான சிறந்த இந்துப்பணி விருதை வழங்கி கௌரவித்துள்ளது. அமெரிக்காவி லிருந்து இங்குவந்த வணக்கத்திற்குரிய தொண்டுநாதன் சுவாமிகள் அன்னையை நேரிலே தரிசித்து கௌரவச் சின்னத்தை வழங்கிக் கௌரவித்தமையும் குறிப்பிடத்தக் கது. இவர் அகில இலங்கை இந்து மாமன்றத் தின் துணைத் தலைவராகவும், பின்னர் இறுதிமூச்சுவரை அறங்காவலர் சபை உறுப்பி னராகவும் இருந்துள்ளார்.

**சமூகப் பணி**

ஆலயப் பணியுடன் மட்டுமல்லாது ஆதரவற்ற சிறுமிகள் மற்றும் முதியவர்களுக்கு என துர்க்க புரம் ஆதரவு இல்லத்தை உருவாக்கி அவர்களை கருணையுடன் பராமரித்து வந்தார். வடக்கை குண்டு மழைகளும் கொடும் யுத்தமும் உலுக் கிக் கலக்கிய போதும் தான் வளர்த்துவரும் பிள்ளைகளை உயிரிலும் மேலாக நினைத்து தன் உயிரைத் துச்சமாக மதித்துக் காப்பாற்றி

னார். பல இடங்களுக்கு இடம்பெயர்ந்து அவர்களை வாழ வைக்க நேரிட்டபோதும் மனத்துணிவுடன் செயலாற்றிய துணிவுமிக்க பெருமாட்டி அவர். 'மக்கள் சேவையே மகேஸ் வரன் பூசை' என்ற புனித வாக்கிற்கு உண்மையில் உயிர் தந்தார் சிவத்தமிழ்ச் செல்வி. இது ஏனைய ஆலயங்களுக்கும் அதன் நிர்வாகிகளுக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

இவரின் சொற்பொழிவுகளை தமிழ் கூறும் நல்லுலகம் சிறப்பாகச் சைவ உலகம் நன்கு அறி யும். இவர் பெரிதும் பேச்சுத்திறமை படைத் தவர். சைவ சாஸ்திரங்களில் துறை தேய்ந்தவர். சைவ ஒழுக்கத்தையும் பெரிதும் பேணி நின்றவர். சைவத்தொண்டொன்றே இலட்சிய மாக 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது குறிக்கோளாகச் சைவத் தொண்டிற்கே தம்மை அர்ப்பணித்துச் சைவ வாழ்வு வாழ்ந்து வந்தவர். தம்மிடம் சிறந்து விளங்கும் சொற் செல்வத்தை இறைவன் புகழ் பரப்புவதற் காகவே செலவு செய்தவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி செய்துவந்த இத்திருத்தொண்டின் தரம் அளப்பரியது.''

சகலரும் போற்றி வணங்கும் வண்ணம் எங்கள் சமுதாயத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய ஓர் ஆன்மீக அன்னையாக அறி வொளியாக ஒளிபரப்பி எங்களுக்கு வழிகாட்டி மிளிர்ந்தார். அவர் ஒரு வரலாற்று நாயகி. அந்த ஒளிவிளக்கு 15.06.2008 இல் அணைந்தது. வேத னைகளும் சோதனைகளும் வாட்டி வதைத்த ஒரு சகாப்தத்தில் அன்னையின் இழப்பு இந்துக்களுக்கு ஒரு பேரிடியாக அமைந்தது.

தெல்லிப்பழை துர்க்காபுர அம்மன் தேவஸ் தான புண்ணிய பூமியிலிருந்து பாரெல்லாம் ஆன்மீக ஒளிபரப்பிய ஞான விளக்கு அணைந்து விட்டாலும். அவர் எங்கள் ஒவ்வொரு வரினதும் உள்ளத்தில் ஏற்றிவைத்த அந்த ஆன்மீகச் சுடர் இன்னும் தொடர்ந்து ஒளிவீசும். அம்மையார் பூதவுடல் மறைந்துவிட்டாலும் அந்த புனித அன்னை எங்கள் இதயங்களிலும் ஒவ்வொரு எண்ணத்திலும் தொடர்ந்து வாழ் வார். வாழ்ந்து எங்களை வழிகாட்டி வருவார்.

அன்னை அவர்கள் விட்டுச் சென்ற சமய சமூகப் பணிகளை தொடர்வதே இவருக்கு நாம் செய்யும் நன்றியாக அமையும் என்பதை ஈழத் திரு நாட்டிலுள்ள ஒவ்வொரு இந்துக்களும் உணர்ந்துகொள்ளுதல் ஆவசியம்.

**''மேன்மை கொள் சைவ நீதி**
**விளங்குக உலகமெல்லாம்.''**



# பெயர் மாற்றம் அதிஸ்ரம் தருமா?


ஒருவர் தனது பெயரை மாற்றிக்கொண்டாலோ அல்லது தனக்கு உரிய அதிர்ஷ்ட எண்ணுக்கு ஏற்ப பெயரின் எழுத்துக்களை மாற்றிக் கொண்டாலோ, துயரங்களெல்லாம் நீங்கி, மகிழ்ச்சியான வாழ்க்கை அமைந்துவிடும் என்ற அடிப்படையிலான விளம்பரங்களையும் செய்திகளையும் அதிகளவில் காணக்கூடியதாக இருக்கிறது. இது உண்மைதானா? எமது பெயர்களை மாற்றும்போது எங்களது அதிஸ்டம் மாறுமா? என்பதை இக் கட்டுரை ஆராய்கிறது.

நாம் ஒருவருடைய பிறந்த திகதி என்று குறிப்பிடுவதே ஆங்கிலத் திகதியைத்தான். அதை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் ஒருவரது பிறந்த திகதியின் எண் கணக்கிடப்படுகிறது.

உதாரணமாக, ஜூன் 2, 1949-ல் ஒருவர் பிறந்திருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் தமிழரசன் என்றும் வைத்துக்கொள்வோம். இவருடைய பிறந்த நாளை, 2.6.1949 என்று குறித்துக் கொண்டு அதிலுள்ள எல்லா எண்களையும் கூட்டி, (2+6+1+9+4+9) என்று கணக்கிட்டால் கூட்டுத் தொகை 31 வருகிறது.

இதிலுள்ள இரண்டு எண்களையும் கூட்டினால் (3+1=4) நான்கு வருகிறது. எனவே, பிறந்த திகதிப்படி அவரது எண் 4 என்று வைத்துக்கொள்கிறார்கள். அதோடு பொருந்தும்படியாக அவருடைய பெயரை ஆங்கிலத்தில் TAMIL ARASAN என்று எழுதி, அதிலுள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் மதிப்பெண் போட்டு அவற்றை கூட்டி, மொத்தம் வருகின்ற எண், பிறந்த திகதியின் எண்ணுக்கு, அதாவது 4-க்கு பொருத்தமானதா என்று பார்க்கிறார்கள். பொருத்தமாக இல்லையென்றால் ஒரு எழுத்தை மாற்றியோ, அல்லது அந்தப் பெயரையே மாற்றியோ, அல்லது ஒரு எழுத்தை புதிதாகச் சேர்த்துக்கொண்டோ, அதிர்ஷ்டப் பெயர்களை உருவாக்குகிறார்கள். இதன்படி தமிழரசன் என்ற தமிழ்ப் பெயரை, TAMIZH AARASAN என்று ஒருவர் மாற்றி வைத்துக்கொண்டு, அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார். இது எவ்வளவு தூரம் சரியானது என்று சற்று சிந்தியுங்கள்.

தமிழரசன் என்பது ஒரு தமிழ்ப் பெயர். அதிலுள்ள ''ழ''கரமானது தமிழ் மொழிக்கே உண்டான தனிச் சிறப்பு. இதற்குச் சமமான எழுத்து வேறு எந்த மொழியிலும் கிடையாது. ஆங்கிலத்தில் எழுதும்பொழுது (TAMIL) என்று எழுதினாலும், (TAMIZH) என்று எழுதினாலும் அது தமிழுக்கு ஈடாக எழுதப்பட்டதாகச் சொல்ல முடியாது. இதைப்போலத்தான் சேஷன், அபிஷேக் போன்ற வடமொழிப் பெயர்களையும் அதற்கு இணையாக ஆங்கிலத்தில் எழுதுவது கடினம். ஓரளவு உச்சரிப்பையொட்டி எழுதலாம். எனவே, ஒரு பெயரை அதற்கு ஈடாக மற்றொரு மொழியில் எழுதிக்கொண்டு, அதற்கு எண்



மதிப்பீடு செய்வது எவ்வளவு தூரம் சரியாக இருக்கும் என்று கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

பொதுவாக தினசரி காலண்டரில் ஆங்கிலத் திகதி, தமிழ்த்திகதி, இஸ்லாமிய மாதப்படியான திகதி என்று மூன்று திகதிகள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

உதாரணமாக, மார்ச் 31, 2000 இல் பிறந்த ஒரு குழந்தையின் பிறந்த திகதியை ஆங்கிலத்தில் 31.3.2000 என்று குறித்தால், அந்த குழந்தையின் பிறந்த நாள் எண் 9 என்று வரும். அதே பிறந்த நாளை தமிழ் ஆண்டின்படி குறிப்பிட்டால், தமிழ் வருடத்தின் 13ஆவது ஆண்டான பிரமாதி வருடத்தின் பங்குனி மாதத்தின் 18 ஆம் நாள் ஆகிறது. எனவே, அந்தக் குழந்தையின் பிறந்த நாளை 18.12.13 என்றுதான் குறிக்க வேண்டும். 18 பங்குனி மாதத்தின் திகதி, 12 என்பது தமிழில் பன்னிரண்டாவது மாதமான பங்குனியைக் குறிக்கிறது. 13 என்பது 60 தமிழ் வருஷங்களில் 13 ஆவது வருஷமான பிரமாதி வருடத்தைக் குறிக்கிறது. அப்படியானால், அந்தக் குழந்தையின் பிறந்த எண் (18+12+13=43). அதாவது, பிறந்த

திகதியின் எண் மதிப்பு 7 (4+3=7) என்றுதான் வரும். இப்போது, அந்த குழந்தையின் பெயரை எந்த எண்ணை வைத்து மாற்றுவது? 9-ஐ வைத்தா? 7-ஐ வைத்தா?

இதையே திருவள்ளுவர் ஆண்டு 2031 என்று வைத்து, ஏன் கணக்கிடக்கூடாது? கலி வருடம் 5102 என்று ஏன் கணக்கிடக்கூடாது? மனிதன் தோன்றி, 2000 வருடம்தான் ஆகியுள்ளதா? அதற்கு முன் மனிதர்கள் வாழவில்லையா? சிந்தியுங்கள்.

''தமிழரசன்'' என்ற தமிழ்ப் பெயரை, தமிழாண்டு கணக்கில் கணக்கிட்டு, அதற்கேற்ப பெயர் வைப்பதுதானே நியாயமாகும்?

அப்படியில்லாமல் எல்லாவற்றையுமே ஆங்கிலத்தில் எழுதிக்கொண்டு, பெற்றோர் வைத்த பெயரோடு தொடர்பு இல்லாத உச்சரிப்பைத் தரும் எழுத்துக்களைச் சேர்த்துக் கொண்டு, அதிர்ஷ்டப் பெயர்கள் வைத்துக் கொள்வதை எப்படி நியாயப்படுத்த முடியும்?

உண்மையிலேயே ஒருவருடைய அதிர்ஷ்ட எண்ணைக் கண்டுபிடித்து, அதற்கு ஏற்ப அவரின் பெயரையோ, எழுத்துக்களையோ மாற்றி, அவரைக் குபேரனாக மாற்ற முடியுமானால், இந்த சாஸ்திரம் நமது நாட்டுக்கு மட்டுமல்ல, வறுமையில் வாடும் மக்கள் நிறைந்துள்ள எல்லா நாடுகளுக்கும் தேவைதான். அப்படி ஒரு சாஸ்திரம் இருக்குமானால், அதனை ஆராய்ந்து, முறைப்படுத்தி, நெறிப்படுத்தி, நாட்டு மக்கள் அனைவருக்கும் அதிர்ஷ்டமான பெயர்களை வைக்கும் பொறுப்பை, அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, அதற்காக ஒரு சட்டமியற்றி, அதன்படி ஒவ்வொரு குழந்தையும் பிறந்தவுடன், அதன் அதிர்ஷ்ட எண்ணைக் கண்டுபிடித்து, அதற்குரிய சரியான பெயரைத் தேர்ந்தெடுத்து, அதை எந்த மொழியில், என்னென்ன எழுத்துக்களால், எப்படி எழுத வேண்டும் என்றும் நிர்ணயித்துவிட்டால், நாட்டில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும், பெரிய டாக்டர்களாகவோ, இன்ஜினீயர்களாகவோ, தொழிலதிபர்களாகவோ ஆகி, செல்வமும், புகழும் பெற்று, சீரும் சிறப்புமாக வாழ்வார்கள் அல்லவா? அப்போது நாட்டில் வறுமையும், ஏழ்மையும் இருக்காதே! அனைவரும் கோடீஸ்வரர்களாக அல்லவா இருப்பார்கள்?!

இதை ஏன் இதுவரை யாரும் செய்யவில்லை? அதில் ஏதாவது அர்த்தம் இருக்குமா? நீங்களே சிந்தித்துப் பார்த்து ஒரு முடிவு செய்துகொள்ளுங்கள்.

அவரவர் கர்ம வினைப்படி பிறவி ஏற்படுகிறது. அவரவர் பிறந்த கால நேரத்தின்போது, கிரகங்கள் அமைந்துள்ள நிலவரப்படி, அவரவர் வாழ்க்கை நடக்கின்றது. ஆயினும், தெய்வத்தின் அருளாலும், அயராத முயற்சியாலும், இடர்களை எதிர்த்து முன்னேறிச் செல்லும் சக்தி மனிதனுக்கு தரப்பட்டிருக்கிறது. நமது வேதங்களும், சாஸ்திரங்களும் புராண இதிகாசங்களும் இதைத்தான் வலியுறுத்தி வருகின்றன.

ராமாயண, மகாபாரத காவியங்களிலும், நமது சரித்திர பாரம்பரியத்திலும், யாரும் தங்கள் பெயர்களை மாற்றி வைத்துக்கொண்டதால் வாழ்க்கையில் வெற்றி பெற்றதாகவோ, விதியை மாற்றியதாகவோ வரலாறுகள் கிடையாது.

ஒருவருக்குப் பல பெயர்கள் இருக்கின்ற உண்மையை வரலாற்றில் பார்க்கிறோம். ராமனுக்கு ரகுவரன், ராகவன், ராமச்சந்திரன் என்றெல்லாம் பெயர் உண்டு. கிருஷ்ணனுக்கு கண்ணன், கோபாலன், கோவிந்தன் என்று ஆயிரம் பெயர்கள் உண்டு. நாம் வழிபடும் தெய்வங்களுக்கெல்லாம் ஸஹஸ்ர நாமங்கள் உள்ளன. அவையெல்லாம் அந்த தெய்வத்தின் ரூபத்தையும், குணத்தையும் சக்தியையும் விளக்குவது.



ஒருவர் குணத்தையும், சக்தியையும் விளக்க, ஒன்றுக்கு மேற்பட்ட பெயரால் அறியப்படுவதும், அழைக்கப்படுவதும் மரபு. அதில் தவறில்லை. ஆனால், அந்தப் பெயரால், பரம ஏழை ஒருவன் மிகப் பெரிய செல்வந்தனாகிவிடுவான் என்பதற்குத்தான் சரியான ஆதாரங்கள் இல்லை. கோழையான ஒருவன் வீரனாகிவிடுவான் என்பதற்கும் ஆதாரங்கள் இல்லை.

எனவே இந்த எண்ணும், எண்ணுக்கேற்ற பெயரின் எழுத்தும் மாறி, அதனால் ஒருவரது விதியே மாறும் என்பது எவ்வளவு தூரம் சாஸ்திர அறிவுக்கும், உண்மைக்கும் ஒத்துவரக்கூடியது என்பதே ஒரு பெரிய கேள்விக்குறிதான். பெயரை மாற்றிக்கொண்டு, அதிர்ஷ்டம் வருமா, வராதா என்று போராடுவதைவிட, பெற்றோர்கள் வைத்த பெயருக்கேற்ப நல்ல குணாதிசயங்களை வளர்த்துக்கொண்டு, முயற்சியோடும், தெய்வ நம்பிக்கையோடும் உழைத்தால் நிச்சயம் வாழ்க்கையில் முன்னேற்றமும் மன நிறைவும் காணமுடியும். ■




> **இரு வேறு தனித்தனி மனிதர்கள்... தனித்தனி சிந்தனை உள்ளவர்கள்... தனிப்பட்ட கருத்துக்கள் உள்ளவர்கள்... ஒருவராவது சாத்தியமா? நிச்சயமாக சாத்தியம்தான்.**

கணவனும் மனைவியும் எப்படி வாழவேண்டும் என்பதற்கு அர்த்தநாரீஸ்வரரை விடவும் சிறந்த எடுத்துக் காட்டு உண்டா என்ன? ஆண் பாதி பெண் பாதியாக... ஆணே பெண்ணாக... பெண்ணே ஆணாக... ஆணும் பெண்ணும் சேர்ந்த ஒற்றை உயிராக... பிரித்தறிய முடியாமல் பிணைந்திருப்பதுதான் தாம்பத்யம்.

ஆனால், இரு வேறு தனித்தனி மனிதர்கள்... தனித்தனி சிந்தனை உள்ளவர்கள்... தனிப்பட்ட கருத்துக்கள் உள்ள வர்கள்... ஒருவராவது சாத்தியமா? நிச்சயமாக சாத்தியம் தான். தினசரி நாம் செய்யும் சமையலே இதற்கு மிகச் சிறந்த உதாரணம்.

மலையில் விளையும் ஏலக்காயும், வட இந்தியாவில் விளையும் பாஸ்மதி அரிசியும், கடல் தரும் உப்பும் இன்ன பிறவும் சேர்த்து பிரியாணி செய்கிறோமே. கமகமக்கும் அந்த பிரியாணியில் தனித்துத் தெரிவது அரிசியா? உப்பா? ஏலக்காயா? இவையெல்லாம் தனித்தனியே தெரிந்தால் அந்த பிரியாணிதான் வாயில் வைக்க சகிக்குமா?

வெவ்வேறு குணங்களும் மணங்களும் கொண்ட பொருட்கள் சேர்ந்து, தங்களின் சிறப்புகளையெல்லாம் கொடுத்து, முற்றிலும் புதிய சுவை கொண்ட பிரியாணியை உருவாக்குவது போலத்தான் வெவ்வேறு இடங்களில் பிறந்து, வெவ்வேறு எண்ணங்களும் செயல்களும் கொண்டு வளர்ந்த இரு மனிதர்கள் திருமணம் என்கிற பந்தத்தில் இணையும்போது முற்றிலும் புதிய ஒரே மனிதனாக அல்லது மனுஷியாக மாறுகிறார்கள்.

அத்தனை நாளும் பெண் பற்றி என்னென்னவோ நினைத்துக் கொண்டிருந்த ஆண்தான், மனைவி மாதவிடாய் சமயத்தில் துடிக்கையில் அவள் வயிற்றைக் கொஞ்சம் அழுத்திப் பிடித்து விடுகிறான். ''வீட்டு வேலை இன்னிக்கு நிறைய இருந்துச்சோ..'' விரல்களை மென்மையாய் சொடுக்கெடுக்கிறான். தன் வாரிசைச்சுமந்து தலை சுற்றி, வாந்தி எடுத்து மயங்கும் மனைவியைக் கரங்களால் தாங்கி வசதியாகப் படுக்கவைத்து, அந்த இடத்தையும் அருவருப்பு கொள்ளாமல் சுத்தம் செய்கிறான்.

**ஆணைப் பெண்ணாக மாற்றுகிறது காதல்!**

பிறந்த வீட்டில் எதற்கெடுத்தாலும் சிலிங்கி, கட்டெறும்புக்கும் கரப்பான் பூச்சிக்கும் பயந்து மருள மருள விழித்தவள்தான் சோர்ந்து போயிருக்கும் கணவனின் தலையைக் கோதிச் சொல்கிறாள், ''அலுவலகத்தில பிரச்சினையா? கவலைப்படாதீங்கப்பா. இந்த வேலை போனா என்ன? உலகத்துல பிழைக்கிறதுக்கா வழி இல்ல.



காலை வீசி எடுத்துவெச்சா வழியெல்லாம் பிழைப்புத்தான்.''

**பெண்ணை ஆணாகவும் மாற்றுகிறது காதல்.**

சிரிக்கையில் சிரித்து, அழுகையில் அழுது, நெகிழ்கையில் நெகிழ்ந்து, வியக்கையில் வியந்து, நீயாகவும் நானாகவும் அன்றி நாமாக வாழ்கிற அற்புதமான அனுபவமல்லவா கணவன் - மனைவி உறவு என்பது.

பிரியாவும் சங்கரும்கூட அப்படி ஒரு தம்பதிதான். கதை, கவிதை என்பது 'நேரத்தை வீணடிக்கும் செயல்' என்று சொல்லும் ரகம் சங்கர். பிரியாவோ அரிசி மூட்டையைக் கடித்துவிட்டு ஓடி ஒளியும் எலிக்குஞ்சை வீடே அடிப்பதற்குத் தேட, ''பிறந்த குழந்தை மாதிரி எவ்ளோ அழகு அந்த எலிக் குஞ்சு'' என்று அதை வர்ணித்துக் கவிதை எழுத வார்த்தைகளைத் தேடிக்கொண்டிருப்பாள்.

திருமணம் முடிந்து தேனிலவுக்கு போன இடத்தில் நாலு வரியைக் கிறுக்கி 'கவிதை' என்று கணவனிடம் கொடுத்தாள். சத்தியமாக அதில் ஒரு வார்த்தைகூட புரியவில்லை சங்கருக்கு. ஆனாலும் விடாமல் திரும்பத் திரும்ப வாசித்தான்.

கடைசியாக உதடு பிதுக்கி, அவள் அருகில் அமர்ந்து, தோள்களைப் பற்றி, ''நீ ஒருமுறை வாசி'' என்றான். தெளிவான உச்சரிப்பில் அவள் அதை வாசிக்க, அவள் முகத்தையே உற்றுப் பார்த்தவன், "உன்கவிதை அழகா இருக்கானு தெரியல... ஆனா, அதை வாசிக்கும்போது உன்னோட உதடு ரொம்ப அழகா இருக்கு'' என்று அவள் காதுகளுக்குள் இரகசியமாகச் சொன்னான்.

அன்று மாலையே அருகில் இருந்த புத்தகக் கடையிலிருந்து ஒரு கவிதைப் புத்தகம் வாங்கி வந்து பரிசளித்தான். அன்று உருகத் தொடங்கியவள்தான் பிரியா. இன்றுவரை அவர்களின் அன்பு ஊற்று உறைந்து போகவில்லை. இதோ! இன்றுகூட அவனுக்கு ரொம்பவும் பிடிக்கிற கர்நாடக இசைக் கச்சேரிக்கு 'சரிகமபதநி' மொத்தம் எத்தனை எழுத்து என்றுகூடத் தெரியாத பிரியா அழகாக உடுத்தி கிளம்பிக்கொண்டிருக்கிறாள்.

ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் ஆர்வம். இதைவிட கணவனையும் மனைவியையும் பசை போட்டு ஒட்டும்அம்சம்வேறென்ன? சொல்லுங்கள் பார்க்கலாம்.

**ரொமான்ஸ் தொடரும்...**

# Nayagara Salon & Acadeamy



No - 298, George r de silva mw, co.13, tel. 0112441212, 0114982691, No.135 jempata.st. co-13 tel. 0112448000, 0114265526 hotline.0779659500


எனது அழகுக்கலை நிலையம் 2006 ஆம் ஆண்டு சிறிய அளவில் ஆரம்பிக்கபட்டு இன்று இரண்டு சேவை மையங்களைக் கொண்ட சிறந்த சேவையினையும், அழகுக்கலை பயிற்சிகளையும் வழங்கும் ஒரு நிலையமாக வளர்ந்துள்ளது.

எனது நிறுவனமானது சேவையினை மட்டுமல்லாது அழகுக்கலை, சிகை அலங்காரம், மணப்பெண் அலங்காரம் போன்றவற்றிற்கான பயிற்சி வகுப்புக்களை நடத்துவதோடு சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கபட்ட IHB நிறுவனத்தின் சான்றிதழ்கள் வழங்கக் கூடிய வகுப்புக்களையும் நடத்துகின்றது என்பதையும் பெருமையுடன் கூறிக்கொள்கின்றேன். அத்துடன் இங்கு உங்களின் அழகுகளை மெருகூட்டும் வகையிலான Hair treatments, Body treatments, Nail art, மணப்பெண் அலங்காரம் மற்றும் Home care treatments போன்ற சேவைகளையும் வழங்கி வருகின்றது.

திருமதி. ஜெ. கயல்விழி - அழகுக்கலை நிபுணர்

# பழிக்குப் பழி

அன்று காலை. கொழும்பு வெள்ளவத்தை அருகே உள்ள அடுக்குமாடிக் கட்டிடம். அங்கு வெகு சமீபத்தில் குடியேறிய ஓர் உழைக்கும் வர்க்கம். அற்பமான பணத்திற்காகவும், பொருளுக்காகவும் மேலான ஒழுக்கத்தை விட்டுக்கொடுக்காத அந்த சமுதாயம். 'விடா முயற்சி விஸ்வரூப வெற்றி' என்ற புதுமொழிக்கு வழி வகுத்த அந்த கூட்டம். வியாபார தொடர்ச்சி முகாமைத்துவத்தை காலம் காலமாக அமுல்படுத்திவரும் அசத்திய அமைப்பு. இப்படியொரு சமுதாயத்திற்கு இந்த புது இடத்தில் ஒரு பேராபத்து! நேற்று முன்தினம் 150 பேர் இருந்த இந்த சமுதாயத்தில் இன்று வெறும் 148 உருப்படிகள் தான். 2 கொடூர கொலைகள். மேலும் ஒருவனுக்கு கால் துண்டிக்கப்பட்டுள்ளது. இவையனைத்திற்கும் தெரிந்தோ தெரியாமலோ காரணமாய் இருந்து வருவது ஒரு மூன்றரை வயதுக் குழந்தை - "அம்பர்".



அன்று மதியம். இந்த பிரளயத்தில் இருந்து இனத்தைக் காப்பாற்ற ஒரு அவசர குழு அமைக்கப்படுகிறது. நம் கதையின் நாயகன் 'உத்தமன்' ஒரு மனதாக தலைமை வகிக்க தேர்வு செய்யப்படுகிறான். உத்தமன் - புஜபல பராக்கிரமசாலி. கடும் உழைப்பாளி. தன்னை விட மும்மடங்கு எடையுள்ள மூட்டைகளையும் அசால்ட்டாக தூக்கி நடப்பவன். தெளிவாக திட்டமிடுவதில் பலே கில்லாடி! உத்தமனின் உயிர் தோழன் - 'சிபி' நேற்று கால் துண்டிக்கப்பட்டவனின் அண்ணன். சிபி வயதில் மூத்தவன். நல்ல உடல் வலு. ஆனால், முன்கோபக்காரன். இவர்கள் இருவரின் தலைமையில் ஆரம்பமானது ஆபேரஷன் - ''அம்பர்.''

அன்று மாலை சிபியும் உத்தமனும் நடந்து போய்க்கொண்டிருக்கையில் மௌனம் பொறுக்காமல் சிபி பொங்கினான்.

''அவனை ஏதாது பண்ணனும் உத்தமா. ரெண்டு நாள்ல ரொண்டு பேரு...''

''சும்மா இரு சிபி... எடுத்தோம் கவுத்தோம்னு பேசாத. நீ நினைக்கிற மாதிரி அம்பர அவ்ளோ சுலபமாக நெருங்க முடியாது. பெரிய எடத்து பிள்ளை. நம்மைத் தடுக்க ஆயிரம் வழி வெச்சிருப்பாங்க... யோசிச்சி தான்...''

''போதும் நீ யோசிச்சது... அடுத்த உயிர் போறத மொதல்ல தடுக்கணும்.''

''ம்ம்ம்... கவனிச்சி பாத்தன்னா... இந்த ரெண்டு கொலையுமே அம்பரோட விளையாட்டு அறையிலே சாயங்காலம் அஞ்சுல இருந்து ஏழு மணிக்குள்ள தான் நடந்துருக்கு... அவனா தேடி வந்து நம்ம ஆளுங்களக் கொல்லவில்லை... இவனுகளா போய் தான் சிக்கிருக்கானுங்க... மடப் பயலுவ... நீ மொதல்ல நம்ம ஆளுங்க யாரையும் இன்னும் ரெண்டு நாளைக்கு அந்தப் பக்கம் போக வேண்டாம்னு சொல்லிவை.''

''ஆகட்டும்... எனக்கு அவனோட கால் வேணும் உத்தமா... சின்னப் பையன்னு கூடப் பாக்காம ஏந் தம்பியோட கால்ல கார ஏத்திருக்கான் அவன்... அவங் காலைப் புடிச்சி கடிச்சி வெக்கிரனா இல்லையானு பாரு...'' உத்தமன் சிரித்தான். சிபியும் சிரித்தான்.

கதையில் திருப்பம். இருவரும் பேசிக்கொண்டே வந்திருப்பது அம்பரின் விளையாட்டு அறையின் வாசல். மின்னலென பாய்ந்தது அம்பரின் பொம்மை கார். சடாலென சிபி நகரவே, கார் உத்தமன் மீது ஏறியது. சிபியால் பொறுக்க முடியவில்லை. கண் முன்னே மூன்றாவது கொலை. உத்தமன் துடிதுடித்து செத்தான்.

அதைப் பார்த்த அம்பர் சிரித்துக்கொண்டே அம்மாவிடம் ஓடினான்... ''ம்மா... இன்னிக்கும் ஒரு எறும்பை கார் ஏத்தி கொன்னுட்டேன்.''

அவன் திரும்பி விளையாட்டு அறைக்குள் வருகையில் ஏதோ காலில் சுள்ளெனப்பட்டது. தட்டி விட்டு ஓடினான் அம்பர். அவன் காலைக் கடித்த சிபியின் முகத்தில் ஒரு உயிரற்ற புன்னகை. ■

# கல்விப் பெருஞ்சேவையில் பன்னெடுங்காலமாய்...

## நட்சத்திர இல்லத்தரசி

இலங்கைத் திருநாட்டில் எடுத்துக்காட்டாக இருக்கும் பெண்களின் பெருமைகளை ஒளிஅரசி மூலம் பிரசுரிக்கவே இப்பகுதி. அந்தவகையில் ஒக்டோபர் மாத நட்சத்திர இல்லத்தரசியாக திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி சுலோசனா ஜெயபாலன் அவர்களுடன் ஒரு நேர்காணல்.

முப்பத்தியிரண்டு வருட கால ஆசிரியர் பணியில் நிறைவான சேவைகள் பல செய்து தற்போது திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கும் திருமதி சுலோசனா ஜெயபாலன் அவர்களை இம்மாத நட்சத்திர இல்லத்தரசியாகத் தெரிவுசெய்து 'ஒளி அரசி' சார்பில் நேர்காணும் பொருட்டு அணுகினோம்.

நீண்ட ஆசிரிய சேவையினால் வந்த அனுபவ முதிர்ச்சியும் அதனால் உருவாகிய ஆளுமையும் கொண்ட இவர், மாணவர் சமுதாயத்தைத் தன்பால் ஈர்க்கும் ஆற்றல் உடையவராக விளங்குகிறார் என்பதை அவரைப் பார்த்த மாத்திரத்தில் புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. தன் வாழ்நாளில் எத்தனையோ மாணவச் செல்வங்களை அறிவாளிகளாகவும், உயரதிகாரிகளாகவும் உயர்த்திய ஒருவர் எம்முன்னே நிற்கிறார் என்கின்ற மரியாதை மேலோங்க உங்களைப் பற்றி சிறிது கூறுங்களேன் என்றவாறு எமது நேர்காணலை ஆரம்பித்தோம்.



மூதூர் கட்டைபறிச்சான் கிராமத்தைச் சேர்ந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை கட்டைபறிச்சான் விபுலானந்தாக் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை சேனையூர் மத்திய கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கற்றுக்கொண்டதுடன் பொருளியல் பாடத்தைச் சிறப்புப்பாடமாகக் கொண்ட கலைப்பட்ட தாரியாவார் பின்னர் தேசியக் கல்வி நிறுவகத்தில் 'பட்டப்பின் கல்வி டிப்ளோமா' கற்கைநெறியை மேற்கொண்டு தொழிற்றகமையையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

பாடசாலைக் காலத்தில் தமிழ்மொழிதினப்போட்டி, ஆங்கில தினப்போட்டி, கட்டுரைப் போட்டிகள் எனப் பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்றதுடன், வகுப்புத்தலைவியாக, மாணவத் தலைவியாக, சாரணத் தலைவியாக, இல்ல விளையாட்டுத் தலைவியாக இருந்து சகல ஆசிரியர்களினதும் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்ட ஓர் நன்மாணவராக திகழ்ந்துள்ளார். நல்ல ஆசான்களின் வழிகாட்டல்கள்தான் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, குருபக்தி, நேர்மை, பிறரை மதிக்கும் மனப்பாங்கு, தற்றுணிவு என்பவற்றை எனக்குக் கற்றுத்தந்தது என அவர் தனது ஆசான்களை அவ்விடத்தில் நினைவு கூர்ந்தார்.

**"என்னிடம் கல்விகற்ற மாணவர்களில் ஏராளமானோர் பல்கலைக் கழகம் சென்று இன்று உயர் பதவிகளிலும் உள்ளார்கள்."**

**அவருடைய ஆசிரிய சேவை பற்றி கோட்ட போது பின்வருமாறு கூறினார்.**

கஷ்டப் பிரதேசமான மல்லிகைத்தீவு மகாவித்தியாலயத்தில் 1982ஆம் ஆண்டு எனது கல்விப்பணியை ஆரம்பித்தேன். ஒரு வருடகாலந்தான் அங்கு சேவையாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. 1983 தொடக்கம் 1992 வரை நான் கல்விகற்ற சேனையூர் மத்தியகல்லூரியிலேயே ஆசிரியராகக் கடமையாற்றச் சந்தர்ப்பம் கிடைத்தமை எனக்கு மிகவும் சந்தோஷமாக அமைந்தது. நான் கல்விகற்ற ஆசான்களுடன் இணைந்து சேவையாற்றுவது மனதுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தினாலும் எனது ஆசிரியத் தொழிலை வளம்படுத்திக் கொள்வதற்கு நிறைய ஆலோசனைகளை அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டேன்.

அவர்களிடமிருந்து நிறையவே தலைமைத்துவப் பண்புகளையும் பெற்றுக்கொண்டேன். 1992 ஆம் ஆண்டு எனது கணவரின் இடமாற்றம் காரணமாக திருகோணமலை நகரின் புனித மரியாள் கல்லூரியில் ஆசிரியராக இணைந்து 9வருடங்கள் கடமையாற்றினேன். அன்பான - அர்ப்பணிப்பான ஆசிரியர்களுடன் இணைந்து கடமையாற்றியதுடன் அப்போது அதிபராகவிருந்த அருட்சகோதரி எஸ்.திரேஸ்ராணியின் வழிகாட்டலில் நிறைய விடயங்களைக் கற்றுக்கொண்டேன். அவரது வழிகாட்டலும் இன்றைய எனது நிலைக்குக் காரணமெனலாம். 2000ஆம் ஆண்டு பதவியுயர்வு பெற்று ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரிக்குப் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டேன். அதனைத் தொடர்ந்து 2009ஆம் ஆண்டு தி / ஸ்ரீ சண்முக இந்துமகளிர் கல்லூரியில் அதிபராகப் பொறுப்பேற்றுக்கொண்டேன் என்றார்.

**உங்களிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் உயர் பதவிகளில் இருப்பார்கள்; அவர்களை காணநேரிடுகின்ற சந்தர்ப்பத்தில் நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள் எனக் கேட்டபோது...**

உண்மையில் அது ஒரு மகிழ்வான தருனமே ஆகும். என்னிடம் கல்விகற்ற மாணவர்களில் ஏராளமானோர் பல்கலைக்கழகம் சென்று இன்று உயர்பதவிகளில்

உள்ளார்கள். அநேகமானோர் அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும் கடமையாற்றுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. பல மாணவர்கள் கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றி அகில இலங்கை மட்டத்தில் சாதனைகளை நிலை நாட்டியுள்ளனர். இவை எல்லாம் எனக்கு மகிழ்வையும் மனநிறைவையும் தரும் விடயங்களாகும்.

**ஆசிரிய சேவையில் நீங்கள் புரிந்துள்ள சாதனைகள் பற்றி சிறிது குறிப்பிடுவீர்களா எனக் கேட்டபோது சற்று நிதானித்து ஆரம்பித்தார்.**

1991ஆம் ஆண்டு அதிபர் சேவைப் போட்டிப்பரீட்சையில் வெற்றிபெற்று அதிபர் சேவையில் இணைந்துகொண்டேன். 1996 ஆம் ஆண்டு அதிபர் சேவைக்கு பதவியுயர்வு செய்யப்பட்டேன். 2013இல் இலங்கை அதிபர் சேவை தரம் 1 சேவைமூப்பு அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 111(SLEAS 111) பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளேன். எனினும், பாடசாலையின் தேவை கருதி தொடர்ந்தும் பாடசாலையிலேயே கடமையாற்றுகின்றேன். அதிபர் சேவையில் சிறந்த சேவைக்காக கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட 'பிரதீபா பிரபா' விருதை ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக் கொண்டமை, பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பவற்றால் அளிக்கப்பட்ட கௌரவிப்பு, சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பொதுப் பரீட்சைகளில் பெற்றுக்கொண்டமைக்காக பல்வேறு அமைப்புகளினால் கௌரவிக்கப்பட்டமை (சாயிசேவா சங்கம், MBSL, காப்புறுதி நிறுவனம், தரிசனம் அமைப்பு) திருகோணமலை நகரபிதாவினால் விருது வழங்கப்பட்டமை, மகளிர்தின விழாவில் திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலாளரினால் கௌரவிக்கப்பட்டமை, வலயக்கல்வி அலுவலகத்தால் கௌரவம் பெற்றமை என்பவற்றைக் கூறலாம். தனிப்பட்ட ரீதியில் இவ்விருதுகள் கிடைக்கப்பெற்றாலும் எனது மாணவர்கள் பரீட்சைப் பெறுபேறுகளிலும், இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் சாதனைகளைப் பெற்றுக் கொள்வதே உயர்ந்த விருதுகளாகக் கருதுகின்றேன்.



**நீங்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி வெற்றிகரமாக செயற்பட்டு வருகிறது என கூறப்படுகிறதே இதற்கு யார் காரணம் என நம்புகிறீர்கள்?**

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கும் - வெற்றிக்கும் நான் மட்டும் காரணம் என்று கூறமுடியாது. தனிமரம் ஒருபோதும் தோப்பாகாது. முகாமைத்துவக் குழாமினதும், ஆசிரிய குழாமினதும் அர்ப்பணிப்பான சேவை, மாணவர்களினது கடின உழைப்பு, கல்விசாரா ஊழியர்களது பங்களிப்பு, முன்னைய அதிபர்களது வழிகாட்டல்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பவற்றின் ஒத்துழைப்பு, கல்வித்திணைக்களத்தின் உதவி என்பவை இணைந்த வகையிலேயே இவ்வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

**ஆசிரியப் பணியில் மேன்மைபற்றி ஒரு வசனத்தில் கூறுவதாயின் எவ்வாறு கூறுவீர்கள் எனக் கேட்டபோது...**


ஒரு நாட்டில் நற்பிரஜைகளை உருவாக்குவது என்பது ஆசிரியர்களது கைகளிலேயே தங்கியுள்ளது. இந்தக் கைங்கரியத்தைச் செய்வதில் ஆசிரியர்கள் தங்கள் வாழ் நாளையே அர்ப்பணிக்கிறார்கள் என்றாவரிடம் நன்றிகளைத் தெரிவித்து விடைபெற்றோம்.


Make a Pick
WEDDINGS
திருமண ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
Cake Structures, Occasional Cakes,
Dressing of Brides and Hair Styles.
Classes
நவீன முறை Cake சோடனைக்கான வகுப்புக்கள்
International and general Cookery, சிகை அலங்காரம், witton sugar flowers,
Vegetable carving, Flower making, Mirror carving, Paper TTole and
Crystal Ornaments.
DR. மல்லிகா ஜோசப் - 11, St. Peters Place (opp. St. Peters College)
Bambalapitiya, Colombo - 04. Sri Lanka
Tel: 2584333, 0766444524 E - mail : Joseph.mallika@yahoo.com


HEMYS
BRIDAL &
BEAUTY CARE
89/2 1/1, Fussel's Lane, Colombo-06. 80/1, New Chetty Street, Colombo 13.
Contact : 011 434 6834, 011 485 8756 Hot Line 077 313 5585
Facebook: Hemys Bridal and Beauty ,email : hemy@hemysbridal.com

# காதலி தேடிக்கொடுத்த மனைவி

## அத்தியாயம் - 12



''பாதகி....! என் குடியைக் கெடுத்து விட்டாளே! இப்பொழுதே போய் அவளை அடித்துக் கொல்லவேண்டும்' என்னும் ஆத்திரம் ஏற்பட்டது. ஆனால், அதற்கு இப்போது நேரமில்லை. அவளைப் பழிவாங்கு வதில் தனது நேரத்தைச் செலவிடக்கூடாது.

தன் மனைவியின் முகத்தைப் பார்க்க வேண்டும். அவளுக்கு என்ன நடந்திருக்கிறது என்பதை அறியவேண்டும். அவன் பதறினான்.

முத்தம்மாவிடம் மீண்டும் கேள்வி கேட்டான். ஆனால், முத்தம்மாவைவிட இப்போது அவனுடைய குரலும் கம்மி யிருந்தது.

''முத்... முத்தம்மா... இப்போ தேன்மொழி எங்கே...?''

திக்கித் திணறித்தான் கேட்டான்.

''ஆஸ்... ஆஸ்பத்திரி...'' என்று அவள் சைகையால் காட்டினாள்.

இனியும் தாமதித்துக்கொண்டிருக்கக் கூடாது. உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் தன் மனைவியைப் போய் உடனே பார்க்க வேண்டும். உயிர் பிரியும் முன் அவளைப் பார்த்துவிட வேண்டும். அவளின் இறுதி வார்த்தைகளைக் கேட்டுவிட வேண்டும்.

இப்படி அவன் மனம் அழுதது.

அதேசமயம் அவன் மனதில் இன்னொரு நம்பிக்கையும் இருந்தது. அதாவது, தன்னைக் காணாமல் அவள் சாகமாட்டாள் என்ற நம்பிக்கைதான் அது.

கணவனையே தெய்வமாக நினைத்த அந்த உத்தமியின் சுயநலமற்ற ஆசையையாவது கடவுள் நிறைவேற்ற மாட்டாரா?

சுமங்கலியாகச் சாவதே பெண்ணுக்குக் கிடைக்கும் பெரும் பாக்கியம் என்று வாழ்ந்த அவளின் ஆசை நிறைவேறும் காலம் வந்துவிட்டதோ என்று நினைக்கையில் அவன் கண்கள் குளமாயின.

அவனுக்குக் கதறி அழவேண்டும்போல் இருந்தது. ஆனாலும் முயற்சி செய்து அந்த அழு கையை வரவிடாமல் தடுத்துக்கொண்டான்.

பொங்கிவரும் அழுகையைக் கஷ்டப் பட்டுத் தடுக்கும்போது மண்டையே வெடிப் பதுபோலிருந்தது. அதேவேளை, அவளைக் காணவேண்டும் என்னும் துடிப்பே அவனிடம் மிகையாக இருந்தது.

உடல் சக்தியிழந்து அவனை இயங்கவி டாமல் தடுத்தது.

தட்டுத்தடுமாறியபடி காரை நோக்கி நடந்தான். காரின் கதவைத் திறக்கக்கூட அவனுக்கு சக்தி இருக்கவில்லை.

எனினும், முயற்சி செய்து கதவைத் திறந்து உள்ளே ஏறி அமர்ந்துகொண்டான்.

இப்பொழுதுதான் அவனுக்குச் சிறிது தெம்பு ஏற்பட்டது.

காரை ஸ்டார்ட் பண்ணிய அவன் அதனை இயன்ற மட்டும் வேகமாகச் செலுத்துவதில் கவனத்தை ஈடுபடுத்தினான்.

தேன்மொழியைப் பற்றிய எண்ணம் அவனை நிலைதடுமாற வைத்தது.

'தேன்மொழி, நீ கொடுத்துவைத்தவள். சுமங்கலியாகச் சாகவேண்டும் என்னும் உன் ஆசையை நிறைவேற்றிக்கொண்டாய்.

நான்தான் சுயநலக்காரன். ஜாதகம் பலித்திருந்தால் அது விதி என்றாவது மனத்தைத் தேற்றிக்கொள்ளலாம். அநியாயச் சாவு. உனக்கு வர இடம் வைத்துவிட்டேனே!'

இப்படி நினைத்து அழுதவன் இயன்ற மட்டும் காரை வேகமாகச் செலுத்துவதில் முனைந்தான்.

கார் தரையிலா அல்லது ஆகாயத்திலா செல்கிறது என்பதைக்கூட அறியமுடியாத நிலையில் அவன் இருந்தான்.

ஏனென்றால், காரை வேகமாகச் செலுத்து வதில் மட்டும் அவன் கவனம் இருந்தது.

ரோட்டில் வருவோர் போவோரெல்லாம் அதன் வேகத்தைக் கண்டு அஞ்சி ஒதுங் கினார்கள். ஏதோ இராட்சத வாகனம் வருவது போல அதன் வேகம் அவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது.

எதிரில் வரும் வாகனங்கள் எல்லாம் தூரத்திலேயே அதற்கு வழிவிட்டு ஒதுங்கின.

அதேசமயம் லொறி ஒன்றும் எதிரில் வந்துகொண்டிருந்தது. அந்த லொறியும் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அசுர வேகத்தில்தான் வந்துகொண்டிருந்தது.

வேகமாக வந்த லொறி திலீபனின் காருடன் மோதக்கூடிய சூழ்நிலை. கணப்பொழுதில் சுய நினைவுக்கு வந்த திலீபன் ஸ்டியரிங்கை இடது பக்கமாக ஒடித்துத் திரும்பினான். அத்துடன் பிரேக்கையும் அவன் கால் அழுத்தியது. காரின் வலது பக்க சைட் கண்ணாடி மட்டும் லொறியுடன் மோதி சுக்கு நூறாகத் தெறித்தது.

லொறியும் பயங்கர சத்தத்துடன் போய் நின்றது. காரை நிறுத்திய திலீபன் யன்னல் ஊடாகப் பின்னால் பார்த்தான். லொறிச் சாரதி இறங்கி காரை நோக்கி வந்துகொண்டிருந்தார்.

தான் அவசரமாகப் போய்க்கொண்டிருப் பதாகவும் அதனாலேயே அதி வேகத்தில் வந்ததாகவும் காருக்கு ஏற்பட்ட சேதத்துக்காகத் தன்னை மன்னிக்கும்படியும் அவர் திலீபனிடம் கெஞ்சிக் குழைந்தார். பார்வைக்கு ஏழையா கவும் பரிதாபமாகவும் தெரிந்தது.

திலீபனுக்கு ஆளைவிட்டால் போதும் என்றி ருந்தது. அத்துடன் நடக்கவிருந்த விபரீதத்துக் குத் தானும் காரணம் என்பது அவனுக்குப் புரிந்தது. அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு காரை மீண்டும் ஸ்டார்ட் செய்தான்.

ஆனால், கார் இயங்க மறுத்தது. அவனுக்கு எதுவும் புரியவில்லை.

'கடவுளே! இது என்ன சோதனை? கார் நகரமாட்டேன் என்கிறதே. இப்பொழுது எப்படிப் போவேன்?' என்று கலங்கினான்.

விபத்து நடந்ததும்... கார் இயங்காமல் இருப்பதும் அவனுக்கு ஒரு கெட்ட சகுனமாகத் தோன்றியது.

வேறு ஏதாவது வாகனம் வருமா என்று பார்த்தான். தூரத்தில் ஒரு வாகனம் வருவது தெரிந்தது.

அதனை எப்படியாவது நிறுத்தி அதில் தொற்றிக்கொண்டு போய்விடவேண்டும் என்று நினைத்தான்.

அருகில் வந்ததும் கையை நீட்டினான். அந்த எதிர்பார்ப்பும் நிறைவேறவில்லை.

வாகனம் நிற்காமலேயே போய்விட்டது. வேறு வாகனங்களும் வருவதாகத் தெரிய வில்லை.

காரை பழுதுபார்ப்பதென்றால் அதற்கான பொறுமையும் மனநிலையும் அவனுக்கு இருக்கவில்லை.

மனமோ 'திக் திக்' என்று அடித்துக்கொண்டி ருந்தது.

வேறு வழியில்லை. காரை எப்படியாவது இயங்கவைக்க வேண்டும்.

காரின் பொனட்டைத் திறந்து துழாவிப் பார்த்தான். இயந்திரக் கோளாறு ஏதும் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அது என்னவென்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

கண்டபடி ஏதேதோ செய்தான். மீண்டும் பொனட்டைப் பூட்டிவிட்டு காருக்குள் ஏறி அமர்ந்தான்.

'கடவுளே, ஸ்டார்ட் ஆகவேண்டும்' என்று பிரார்த்தித்துக்கொண்டு காரை மீண்டும் ஸ்டார்ட் பண்ணிப் பார்த்தான்.

கார் உறுமிக்கொண்டு ஸ்டார்ட் ஆகியது. அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

காரை அவதானமாகச் செலுத்தினால்தான் மனைவியின் முகத்தையாவது பார்க்கும் வாய்ப்பு கிடைக்கும் என்று எண்ணினான். அதன்படி காரை வேகமாக அதேசமயம் அவதானமாக ஆஸ்பத்திரியை நோக்கிச் செலுத்தினான்.

ஆஸ்பத்திரியை அண்மிக்கையிலேயே அவனுக்கு ஒரு பய உணர்வு ஏற்பட்டது. மனைவியின் உயிரற்ற உடலையா அல்லது உயிருக்குப் போராடும் மனைவியையா காணப்போகிறோம் என்னும் பய உணர்வுதான் அது.

காரை நிறுத்திவிட்டு அவசரமாக இறங்கினான். பீதியுடன் கலந்த துடிப்பு அவனிடம் காணப்பட்டது. அந்தத் துடிப்பு அவன் நெஞ்சையே அடைப்பதுபோல இருந்தது. ஆஸ்பத்திரிக்குள் நுழையும் முன் தன்னுடைய மூச்சு நின்றுவிடுமோ என்றுகூட அவன் நினைத்தான்.

அதேசமயம் டாக்டரும் உள்ளிருந்து வெளியே வந்துகொண்டிருந்தார். அவர் திலீபனின் நண்பர்தான்.

திக்கற்றுத் தவிக்கும்போது ஒரு துணை கிடைத்தால் எப்படி இருக்கும்? அந்த உணர்வுதான் திலீபனுக்கு அவரைக் கண்டதும் ஏற்பட்டது. அந்த ஆறுதலும் நீடிக்கவில்லை.

காரணம்...? அவர் திலீபனைப் பார்த்த பார்வைதான்... அந்தப் பார்வையில் ஓராயிரம் அர்த்தங்கள் புரிந்தன.

'' ஏ... என்ன... டாக்டர்... எப்படி...?'' திலீபனின் வாயிலிருந்து வார்த்தைகள் தடுமாறி வெளிவந்தன.

''திலீபன்! ம்... மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்.''

இப்படி டாக்டர் சொன்னதும், '' டாக்டர்! என்ன சொல்கிறீர்கள்?'' என்று அலறினான் திலீபன்.

''என்ன செய்வது மிஸ்டர் திலீபன்... டாக்டர்களால் சிகிச்சைதான் அளிக்கமுடியும்... உயிரைக் கொடுப்பதும் எடுப்பதும் ஆண்டவனின் வேலை...''

அவர் தத்துவம் பேசினார்.

''டாக்டர்... ம்...?'' என்று திலீபன் கேள்விக்குறியுடன் பார்த்தான்.

''மிஸ்டர் திலீபன், நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தோம்.... ம்... என்ன செய்வது...? எங்களால் காப்பாற்ற முடியவில்லை.''

இப்படி அவர் கூறியதும்,

''தேன்மொழி...!'' என்று அலறினான் திலீபன்.

உள்ளே...! கட்டிலைச்சுற்றி யார்யாரோ நின்றிருந்தார்கள். அவர்கள் எவர் மீதும் அவன் கவனம் செல்லவில்லை.

தட்டுத்தடுமாறியபடி கட்டிலை நோக்கிச் சென்றான். அங்கு கூடியிருந்தவர்கள் ஒதுங்கி அவனுக்கு வழிவிட்டார்கள்.

கட்டிலை நெருங்கிய அவன் உயிரற்ற அந்த உடலைப் பார்த்தான். அந்த உடல்... வெள்ளைத்துணியால் போர்த்தப்பட்டிருந்தது.

பொங்கிவந்த அழுகையை எவ்வளவோ கஷ்டப்பட்டு அடக்கிப் பார்த்தான். ஆனால், முடியவில்லை. சத்தமிட்டு அழவேண்டும் போல் இருந்தது. அதனை அடக்க முயலும்போது மண்டை வெடிக்கப்போவதுபோல் வலி ஏற்பட்டது அவனுக்கு.

தாங்க முடியாமல் ''ஐயோ! ஐயோ!'' என்று குமுறினான்.

எவ்வளவோ முயன்றும் பொங்கி வந்த அழுகையை திலீபனால் அடக்கமுடியவில்லை. குமுறிக் குமுறி அழுதான். கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக விழுந்தது.

அப்பொழுது...!

அவனுடைய கரத்தைப் பற்றிப் பிடித்தது ஒரு மென்மையான கரம். அது அவனுடைய கண்ணீரையும் துடைத்துவிட்டது.

அந்தக் கரத்தின் மென்மையிலும் ஸ்பரிசத்திலும் அவன் அந்த நிலையிலும் சிறிது தடுமாற்றமடைந்தான். அந்தக் கரம் அவனுக்கு மிகவும் பரிச்சயமானது என்பது புரிந்தது.

அந்தக் கரத்துக்குரியது யாரென்று ஏறிட்டு நோக்கினான்.

அவன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. அங்கே நின்றவள் தேன்மொழியேதான்.

''தேன்... தேன்... தேன் மொழி... ம்... நீ... நீயா...?

அதிர்ச்சியாலும் மகிழ்ச்சியாலும் அவனால் பேசமுடியவில்லை.

''ஏன் அத்தான்?'' தேன்மொழிதான் கேட்டாள்.

''நீ... நீ... சாகவில்லை?''

''ஏன் அத்தான், நானும் சாக வேண்டுமா?''

''ஐயோ! தேன்மொழி நீ இறந்துவிட்டதாக நினைத்தல்லவா பதறித் துடித்து வந்தேன்.''

''இல்லை அத்தான். எனக்கு வந்த சாவு ஆள் மாறிப் போய் விட்டது.''

''என்ன! ஆள்மாறிப் போய் விட்டதா?''

''ஆமாம்.''

''அப்படியானால் இறந்தது...?''

கேள்விக்குறியுடன் திலீபன் அவளை நோக்க, அவள் சொன்னாள்.

''இறந்தது பிரேமினிதான்.''

''பிரேமினியா? எப்படி... எப்படி அவள் இறந்தாள்?''

தடுமாற்றத்துடனும் அதிர்ச்சியுடனும் கேட்டான் திலீபன். அவனது முகத்தில் சோகம் இழையோடியது.

''பிரேமினி, இன்று நம் வீட்டுக்கு வந்திருந்தாள். மிகவும் கலகலப்பாகத்தான் என்னுடன் பழகினாள். நீண்ட நாட்களுக்குப் பின் சந்திக்கிறோம் என்று அவளுக்கும் எனக்கும் தேநீர் போட்டுக்கொண்டு போனேன். எனக்குத் தெரியாமல் நான் குடிக்கவிருந்த தேநீரில் நஞ்சைக் கலந்திருக்கிறாள்.

அவளுடைய கெட்ட நேரம். தேநீர் எப்படியோ கைமாறி அவளுக்கே போய்விட்டது. தேநீர் அருந்திய சிறிது நேரத்திலேயே அவளின் கண்கள் மேலே சொருகி மயங்கிவிழுந்துவிட்டாள். நான் மிகவும் பயந்துபோய்விட்டேன். உடனே அவளை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்தேன். டாக்டர்கள் எவ்வளவோ பிரயாசை எடுத்தார்கள். ஆனாலும் அவளைக் காப்பாற்ற முடியவில்லை. உயிர் பிரியுமுன் அவளே தேநீரில் நஞ்சு கலந்த விஷயத்தைக் கூறிவிட்டாள்.''

இப்படி தேன்மொழி கூறினாள். அவள் கூறியதைக் கேட்டதும்,

'அடிப்பாவி... இவளுக்கு ஏன் எண்ணம் இப்படி வேலை செய்தது என்று கலங்கியவாறு பிரேமினியின் உடலுக்கு அருகில் சென்றான். போர்த்தப்பட்டிருந்த வெள்ளைத்துணியை அகற்றிவிட்டு அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

அந்த முகத்தில் இப்பொழுது களங்கம் எதுவும் தென்படவில்லை. எதைப்பற்றியுமே கவலைப்படாமல் உறங்குவதுபோல் காட்சியளித்தது அந்த முகம். களங்கமற்ற அந்த நிலையில்தான் அவள் முகத்தில் மிகுந்த அழகு பளிச்சிட்டது.

அந்த முகத்தைக் கூர்ந்து நோக்கிய திலீபனின் கண்கள் குளமாயின.

''பிரேமினி! போய்விட்டாயா? ஏன் அம்மா இப்படிச் செய்தாய்? உனக்கு நீயே தீங்கைத் தேடிக்கொண்டாயே!

நீ திருந்தி நல்ல பெண்ணாக வாழவேண்டுமென்றுதான் ஆசைப்பட்டேன். உன் வாழ்வு இப்படி முடியுமென்று நான் நினைக்கவில்லை. பிரேமினி... ம்... பிரேமினி...''

திலீபன் இப்படிப் பலவாறு புலம்பினான்.

தேன்மொழியால் அவனைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

தான் குடிக்கவிருந்த தேநீரில் அவள் நஞ்சைக் கலந்தபோதிலும் விதியின் விளையாட்டால் தனக்கு வரவிருந்த மரணம் அவளுக்குப் போய்விட்டதை நினைக்கையில் தேன்மொழியின் உள்ளம் ஏனோ சிறிது குறுகுறுத்தது. அது அவளுக்கு மிகுந்த வேதனையையும் ஏற்படுத்தியது.

அருகில் சென்று அவள் முகத்தை உற்று நோக்கினாள்.

'ஏண்டி பிரேமினி, ஏன் இப்படிச் செய்தாய்? நீ என்னிடம் எதைக் கேட்டிருந்தாலும் சந்தோஷமாகத் தந்திருப்பேனே! சதி செய்துதான் பெறவேண்டுமென்று என்னைப்பற்றித் தவறாக எடைபோட்டுவிட்டாயே...

என் உற்ற தோழியாக இருந்த நீ என் உள்ளத்தைப் புரிந்துகொள்ளாமல் இருந்துவிட்டாயே...

உன் உள்ளத்தை நானும் அறியவில்லையே! அறிந்திருந்தால் உன்னை அநியாய சாவிலிருந்து காப்பாற்றியிருப்பேனே... சத்தியமாகக் காப்பாற்றியிருப்பேன். உன்னைச் சாகவிட்டிருக்க மாட்டேனே...'

இப்படி அவள் மனதுக்குள்ளேயே உருகி அழுதாள்.

திலீபனையும் கட்டுப்படுத்த வேண்டி இருந்ததால் அவளால் அங்கு தொடர்ந்து நிற்க முடியவில்லை.

எவ்வளவு கொடிய மனம் படைத்தவளாக இருந்தாலும் அவளுக்கு இவ்வளவு பெரிய தண்டனை கிடைத்திருக்கக் கூடாது என்று எண்ணியபோது அவளுக்கு விம்மல் ஏற்பட்டது. அது தோழியின் மீது அவளுக்குள்ள பாசத்தைக் காட்டியது.

இருந்தாலும் தன்னுடைய வேதனையைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு திலீபனையும் பற்றிப்பிடித்தவாறு அந்த இடத்தைவிட்டு அகல முயற்சித்தாள் தேன்மொழி.

காரை நோக்கி இருவரும் சென்றனர். காருக்குள் அவன் கொண்டுவந்திருந்த மலர்கள் மற்றும் மங்களகர பொருட்கள் பிரகாசமாகக் காட்சியளித்தன. அவை அவனைப் பார்த்துச் சிரிப்பதுபோலிருந்தன.

**(முற்றும்)**

# திருக்கோணேஸ்வர திருத்தல யாத்திரை

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் தோன்றிய பஞ்ச ஈஸ்வரங்களான நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம் என்பவற்றுள் திருக்கோணேஸ்வரம் சிறப்பு வாய்ந்ததாகும். கி.மு 7500 ஆண்டுகளில் வாழ்ந்த சிவபக்தனான இராவணன் வணங்கிய திருத்தலமாக திருக்கோணேஸ்வரம் கருதப் படுவது அதன் சிறப்பை மேலும் உயர்த்துவதாக அமைந்துள்ளது.

கோணேசர் மலை, புறாமலை, கந்தசாமி மலை, வெள்ளாட்டி மலை, மத்தளமலை, பாதாளமலை, களனிமலை என்பவற்றை உள்ளடக்கிய மலைத்தொடரில் திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ளது.

நூறு சிவாலயங்கள் உள்ள திருத்தலத்தில் தான் சனீஸ்வரருக்குத் தனி ஆலயம் அமையும் என்பார்கள். அந்தவகையில் பார்க்கும்போது இலங்கையில் திருக்கோணேஸ்வரத்தில் மட்டுமே சனீஸ்வரருக்குத் தனி ஆலயம் அமைந்துள்ளது. இதனால் இத்தலத்தில் பல சிவாலயங்கள் இருந்தன. இருக்கின்றன எனலாம்.

தம்பலகாமம் ஆதி கோணநாயகர் கோயில், திருமங்கலாய் சிவன் கோயில், திருகோண மலை விஸ்வநாதசுவாமி சிவன்கோயில், கங்குவேலி சிவன்கோயில், வெள்ளை வில்வ பத்திரி கோணேசர் கோயில், திருக்கரைசையம் பதி அகஸ்தியர் ஸ்தாபனம், மல்லிகைத் தீவு சிவன்கோயில், கந்தளாய் சிவன்கோயில், கன்னியாய் சிவயோகபுரம் நடேசராலயம், கோணேஸ்வரம் எனப்பல சிவாலயங்கள் இத்தலத்தில் உள்ளன.

வடகிழக்கு இணைந்த நிலப்பரப்பில் முதன்மை பெறும் முதுபெரும்பதி திருக் கோணையம்பதி, திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்று நிகழ்வுகள், புராணச் செய்திகள் ஆகிய தமிழரின் தொன்மையை நிலைநாட்டும் ஆவணங்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.



திருக்கோணேஸ்வர ஆலய வெளித் தோற்றம்

கோணேஸ்வர ஆலயத்தைச் சூழ்ந்து இத்திருத்தலத்தில் எல்லைக் காளியம்மன் கோயில்கள் காணப்படுகின்றன. திருகோணமலை பத்திரகாளி அம்மன், உப்புவெளி காளி, பறையன்குளம் எல்லைக் காளி, படுக்கைப் பத்திரகாளி பாலம் போட்டாறு, பத்திரகாளி, திருகோணமலை மாரியம்மன், தம்பலகாமம் முத்து மாரியம்மன், மாங்கனாய் மாரியம்மன், சல்லி முத்துமாரியம்மன், கிளிவெட்டி முத்துமாரியம்மன் என்பன திருக்கோணேஸ் வரத்தில் உள்ள காளிகோயில்களாகும்.

இலங்கையில் சோழமன்னர்கள் ஆட்சி செய்த காலத் தில் கோணேஸ்வரத்தில் பல எல்லைக்காளி கோயில்கள் அமையப்பெற்றன என்று அறிகிறோம்.

இங்குள்ள அம்மன் கோயில்களின் முதன்மையான திருக்கோணமலை பத்திரகாளி அம்மன் ஆலயம், பாடல் பெற்ற கோணேஸ்வர ஆலயத்தை நோக்கியவாறு அமைந் துள்ள திருவருடசித்தத்தினை நினைத்துப் பெருமகிழ்வு அடைகிறோம்.

இம்மையில் செல்வம் சேகரித்து, மாங்கல்யம், மக்கட்பேறு பெற்று இன்பந்துய்க்க வேண்டி இறைவியை வழிபட்ட பக்தர்கள் கோணையப்பனை நோக்கி மறு முனையில் திருவடிப்பேறு நாடிநிற்பர்.

திருகோணமலையில் சிவநெறிக்கும், செந்தமிழ் மொழிக் கும் தொண்டாற்றி வருபவர் சைவப்புலவர் பண்டிதர் இ.வடிவேல். அன்னார் பாடிய பாடல்களில் திருக்கோணேஸ் வரத்தின் இயற்கை வனப்பினை அழகாக வர்ணிக்கிறார்.

''கோணேஸ்வரத்தினை நோக்கிக் காடும் மலையும் கைகூப்புகின்றன. கடலோ வளைந்து மகிழ்ச்சிப் பெருக்கினால் ஆர்ப்பரிக்கிறது'' என்று கூறியவர்,

**''மோனத்தமர்ந்த முதுபதியே உன்னைப் பணிகின்றேன்'' என்று பாடுகிறார்.**

தம்பலகாமம் கூட்டாம்புளி தந்த தமிழறிஞர் அமரர் கலாநிதி சி. சத்தியமூர்த்தி தமிழகத்தில் பல்லாண்டு வாழ்ந்து, தமிழ் ஆராய்ச்சியில் மூழ்கி, ''சிவலிங்க வழிபாடு' என்ற அரிய நூலை நமக்குத் தந்தவர். அவர் திருக்கோ ணேஸ்வரத்தைப் பார்ப்பது ஒரு தனி அழகு.

''அலைகடலில் நடுவே செல்கலம் ஒக்கும் அழகிய நகரே! அழகிய நகரே'' என்பார்.

''கோயில் கும்பிடச் செல்லும் அடியார்கள் தேங்காய்ச் சொட்டினை குரங்குகளுக்கு எறிகின்றனர். அதனைப் பாய்ந்து பிடிக்கும் மந்தியின் குறும்பினால் கிந்தும் கனிகள் சிதைந்து சொட்டும் கொம்புத் தேனைக் கொம்பு மான்கள் சுவைக்கின்றன'' இப்படி ஒரு காட்சியை நமக்குத் தருகிறார்.

'தாயகம் வந்து தங்கி வாழினும் ஓயாது நினைவே நாடுமென் நினைவே' என்று ஈற்றில் ஏங்குகிறார்.

தமிழத் தெய்வம் முருகனை மடியில் வைத்து, மாதுமை அம்மன் முத்தமிழ் மழலை கேட்டு இன்புறுகிறாள். அம் மழலை இன்பம் பருகியவள் உள்ளம் நெகிழ்ந்து குழைந்து பால் சுரக்கின்றது. மகன் அருகே அவள் ஓடிச் சென்று அவன் திருமுகத்தைத் தன் திருக்கரத்தில் எடுத்துக் கொஞ்சி பால் ஊட்டுகிறாள் அம்மை. இதோ கவிஞர் பெ.பொ.சியின் பாடல் :

**முருகனை மடியில் வைத்து**
**முத்தமிழ் மழலை கேட்டு**
**பருகிய உமையாள் குழைந்து**
**பான்முலை சுரக்கத் தாங்காது**
**அருகினில் சென்று மகனின்**
**திருமுகம் தழுவக் கொஞ்சி**
**ஒருமுலை கையால் திறந்தன்று**
**ஊட்டிய எந்தாய் போற்றி!**

திருக்கோணேஸ்வர திருத்தல யாத்திரையில் இவற்றை எண்ணி எண்ணி மகிழ்கிறோம்.

இத்தகைய சிறப்புவாய்ந்த திருக்கோணேஸ்வரம் 1624ஆம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டு தினத்தில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. அன்று திருகோ ணேஸ்வரத்தில் தேர்த்திருவிழா வெகுசிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சிவனும், பார் வதியும் தேரில் எழுந்தருளி இருக்கப் பக்தர்கள் வடம்பிடித்து ''கோணேசா! கோணோசா!'' என்று குரலெழுப்பு கின்றனர். திரள் திரளாகப் பக்தர்கள் நாற்திசையும் திரண்டு நின்று வழி பாடு செய்கின்றனர்.

அப்போது போர்த்துக்கேயச் சிப் பாய்கள் இந்து சமயப்பூசகர்கள் போன்று வேடந்தாங்கி கோயிலி னுள் நுழைந்து புத்தாண்டுப் பூசை நடைபெறும் வேளையில் அனர்த் தங்களை விளைவித்தனர். கோயி லில் இருந்த விலை மதிப்புடைய பொருட்களைச் சூறையாடினர். கோயிலையும் இடித்துத் தரை மாட்டமாக்கினர்.

அப்போது பக்தர்களும், பூசகர் களும் இறைவன் திருவுருவங் களைக் கவனமாக எடுத்துச் சென்று பல இடங்களில் மறைத்துவைத்த னர் என்று அறியமுடிகிறது.

இத்திருக்கோயிலை இடிக்கக் கட்டளை பிறப்பித்த போர்த்துக் கேயர் அரசுக்கும், இம்மத வெறி



யாட்டத்துக்கும் தலைமை தாங்கிய போர்த்துக்கேயத் தளபதி கொன்ஸ் டன்டைன் டீசாவும் அவரது படையினரும் பதுளையில் அடர்த்தியான நடுகாட்டில் வைத்து கொல்லப் பட்டனர். கோணேசர் கோயிலை அவர்கள் அழித்த ஆறு ஆண்டு காலத்தில் இது நிகழ்ந்தது.



மாதுமை அம்பாள் சமேத
திருக்கோணேஸ்வர பெருமான்

எந்தப் போர்த்துக்கேய ஆட்சியில் இந்த அட்டூழியம் இழைக்கப் பட்டதோ, எந்தப் போர்த்துக்கேய ஆட்சியின் ஆசியுடன் இந்த மதவெறி கட்டவிழ்க்கப்பட்டதோ. அந்த ஆட்சியும் உரிய தண்டனைப் பெற்றது. கோணேசர் திருக்கோயிலை அழித்த பின்னர் போர்த்துக்கேய ஆட்சி தள்ளாடித் தள்ளாடி ஈற்றில் ஒல்லாந்தரிடம் தோற்றுப்போனது. இது ஒரு வரலாற்று படிப்பினை; தர்மம் குன்றி அதர்மம் ஓங்கி, சமுதாயம் அழிவுப்பாதையில் விரையும்போது நீதி நிலைக்க, உயிர்களைக் காக்க, உழவர்கள் பைங்கூழ்களைகட்டல் போன்று கோணேசர்திருக்கரத்து மழு இயங்கத் தொடங்கும் உயிர்களை வதைத்து, உடைமைகளை அழித்து, மனித சுதந்திரத்தை மறுக்கும் நீதிகொன்ற சமுதாயத்தைக் காணின் ''ஆழ்க தீயது எலாம்'' என்று ஆர்ப்பரிக்கும் கோணேசர் கைத்தல மழு என்பதை இவ் வரலாற்று நிகழ்வு பறைசாற்றுகிறது.

இந்நிகழ்வினை நினைக்கும்போது கோணேசர் கல்வெட்டில் காணப்படும் பாடலொன்று எமது சிந்தனையைத் தூண்டுகிறது.

''எனது செல்வத்தை எந்தன் உறவினருக்கு ஈயாமல், எனது மரபினருக்கு பகிர்ந்து கொடுக்காமல்

கோணநாயகருக்கு அளித்துள்ளேன். இதற்கு அழிவு நினைப்பவர்கள், தீங்கு இழைப்பவர்கள் பொடிப் பொடியாவர். இது நிச்சயம் கோணநாயகர் சத்தியமாக இது நிச்சயம'' - இவ்வாறு குளக்கோட்ட மன்னன் குமுறுகிறார்.

இதோ அந்தப் பாடல் :

*மாறாத புனல்பாயும் திருக்குளமும்*
*வயல்வெளியும் வருந்திச் செய்தே*
*வீறாக என்மரபோர்க்கு ஈயாமல்*
*கோணமலை விமலற்கு ஈந்தேன்*
*பேறான பெரியோரே இதற்கழிவு*
*நினைப்பவர்கள் டெட்பு நீங்கி*
*நீறாகப் போவரிது நிச்சயம்*
*நிச்சயம் கோணைநிமல ராணை''*

■

# நம்புங்கள்! நீங்கள்தான் சிறந்தவர்

நீங்கள்தான் உலகிலேயே அழகானவர். அறிவுள்ளவர். அனைவரிடமும் அன்பு பாராட்டுபவர். உங்கள் திறமையில் எந்தச் சந்தேகமுமில்லை. நீங்கள் படிக்கின்ற பாடக்கல்வியில் தலைசிறந்தவர். என்று உறுதியாக நம்புங்கள்.

அதேநேரம் நீங்கள் படிக்கின்ற கல்வியுடன் கூடவே வளர்த்துக் கொள்ளவேண்டிய மென்திறன்தான் உங்களைத் தனித்திறனுள்ளவர்களாகக் காட்டி மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தி, உங்களை உயர்நிலையை அடையச் செய்யும்.

பொதுவாக நாம் நம் முன்னேற்றத்தில் கவனம் கொள்ளாமல் அடுத்தவர்களைப் பற்றி அதிகம் சிந்திக்கின்றோம். நமக்குப் பிடித்த நபர்களுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்ற ஆராய்ச்சியில் இறங்கிவிடுகிறோம். அது நண்பர்களாக இருக்கலாம், அல்லது பிடித்த நடிகர்களாகவோ, அல்லது விளையாட்டு வீரர்களாகவோ இருக்கலாம்.

ஆனால், நம் பலம் என்ன, பலவீனம் என்று ஆராயத் தொடங்குவதில் நமக்கு இன்று ஆர்வம் இல்லை. உங்களுக்குப் பிடித்தவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ளச் செலவிடும் நேரத்தில் பாதியாவது உங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதில் செலவிடுங்கள்.

மென்திறன் தகுதிகள் என்பது, படிப்பைத்தவிர, உங்களுடைய பேச்சுத் திறன், தலைமைப் பண்பு, நம்பகத்தன்மை, உங்களுடைய தனிப்பட்ட குணாதிசயங்கள், நீங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வல்லவரா, நீங்கள்



பயந்தாங்கொள்ளியா, பொது இடங்களில் பேசுவதற்குக் கூச்சப்படுவீர்களா, எதிர் பாலினத்தவரிடம் பேச யோசிப்பவர்கள் போன்றவையாகும்.

இது தவிர, நேரக்கட்டுப்பாடு, எதுவும் முடியும் என்ற சாதகமானஎண்ணம், கூர்ந்து கவனிக்கும் திறன், உங்களுடைய ஆளுமைத்திறன், தன்னையும் மற்றவரையும் எந்நேரமும் உத்வேகப்படுத்துதல் உள்ளிட்டவையே இன்றைய சூழ்நிலையில் அவசியமாகின்றன.

இந்தத் தகுதிகள் அனைத்து மனிதர்களுக்கும், குறிப்பாக இளைஞர், யுவதிகளுக்கு இருந்தே ஆக வேண்டும்.

யதார்த்தமாக வாழப்பழகிக்கொள்வது. கல்வியோடு கூட மென் திறன்களையும் தெரிந்துகொண்டு நடைமுறைப்படுத்துவது. நம்மால் முடியும் என்ற முழு தன்னம்பிக்கை. என்ற மூன்றையும் கடைபிடித்தால் வெற்றி மீது வெற்றி வந்து உங்களைச் சேரும்.

ஒரு நிறுவனத்தில் ஆட்குறைப்பு நடைபெறும்போது, இவ்வளவு பேர்கள் நம் அலுவலகத்தில் பணி புரிந்தால் போதும். மற்றவர்களை அனுப்பிவிடலாம் என்று எதை வைத்துத் தீர்மானிக்கிறார்கள்?

வேலை செய்பவர்களில் யாருக்குப் சாதகமான எண்ணம் இருக்கிறது, மற்றவர்களுக்கு உதவி செய்பவர்கள் யார்; கம்பெனி மேல் நம்பிக்கை வைப்பவர்கள் யார் என்ற தகுதிகளை அலசியபின்பே நிறுவனம் அவர்களைத் தக்க வைத்துக்கொள்கிறது.

வேலை தருகிற முன்னணி நிறுவனங்கள் இளைஞர்களுக்கு ஏற்கனவே இருக்கிற படிப்பைத் தவிர. மென்திறன் தகுதிகள் இருக்கும் என்று கணக்கிடுகிறது.

இந்த மூன்று அம்சத் திட்டங்கள் இருந்தால் இவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று தீர்மானித்து விடுகிறது. விவரம் அறிந்த பெரிய நிறுவனங்கள் கல்வித் தகுதியின் அடிப்படையில் மட்டுமின்றி, இந்த மென்திறன் தகுதியை வைத்துத்தான் பெரும்பாலும் வேலை தருகிறார்கள்.

அது தவிர நீங்கள் விரும்பும் வேலையைப் பெறுவதற்கு மட்டுமின்றி அதனைத் தக்க வைத்துக் கொள்ளவும் பெரிதும் உதவும்.

நடைமுறை வாழ்க்கையில் பார்த்தால், ஒருவருடைய உறவைப் பெறுவது மிகவும் சுலபம். ஆனால், அந்த உறவை வெகுகாலம் தக்க வைத்துக்கொள்வது கடினம். நீங்கள் தனி நபரல்ல. நாளை நீங்கள் உயர்ந்த பதவியை அடையப் போகிறீர்கள். உங்களிடம் பலர் வேலை செய்யப்போகிறார்கள்.

ஏன், நீங்களே சொந்தமாக ஒரு நிறுவனத்தைத் தொடங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு. அத்தகைய நிலையில், நீங்கள் தலைவராக இருந்துகொண்டு வழிநடத்தும் நேரம் வரலாம். அந்நேரத்தில் நீங்களும், உங்களுடன் பணிபுரிபவர்கள் இந்தத் தகுதியைக் கொண்டிருந்தால்தான் குழுவாக நீங்கள் செயல்பட முடியும்.

உலகம் முழுவதும் ஒன்றையொன்று சார்ந்தே இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் நம் வெற்றி கைகூட, மற்றவர்களிடம் எவ்வாறு நாம் பழகுகிறோம், அவர்கள் மதிக்கத்தக்க நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதெல்லாம் மென்திறனால் மட்டும் சாத்தியம்.

நீங்கள் மனிதர்களாகப் பிறந்து, மனிதர்களாகவே மறைந்து விடக்கூடாது. நீங்கள் தலைவராகப் பிறந்தவர்கள் என்பதை நினைவில்கொள்ளுங்கள். ஏனெனில், ஒவ்வொரு இளைஞர்களுக்குள்ளும் ஒரு தலைவன் இருக்கிறான். உங்களிடம் இருக்கும் தலைவனை வெளிக் கொணருங்கள்.

**நீங்கள் மனிதர்களாகப் பிறந்து, மனிதர்களாகவே மறைந்து விடக்கூடாது. நீங்கள் தலைவராகப் பிறந்தவர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

# உங்களுக்குத் தெரியுமா?

- முட்டைக்குள் உருவாகும் கோழிக்குஞ்சுகளால் மேல் ஓட்டின் வழியாக சுவாசிக்க முடியும்.

- சார்லஸ் ஆஸ்போர்ன் என்பவருக்கு 1922 முதல் 1990 வரை தொடர்ந்து 68 ஆண்டுகளுக்கு விக்கல் பிரச்சினை இருந்திருக்கிறது. கிட்டத்தட்ட 43 கோடி விக்கல்கள். விக்கல் விலகிய அடுத்த ஆண்டே, 97 வயதில் இறந்து போனார் அவர்.

- ஸ்லோத் என்ற குரங்கு போன்ற ஒருவகை உயிரினம் ஒரு மைல் தூரத்தைக் கடப்பதற்கு ஒருமாத காலம் எடுத்துக்கொள்ளும். அதனால்தானோ என்னவோ இந்த வார்த்தைக்கு ''அசமந்தம்'' என்றும் பொருள் உண்டு. இதை ''அசையாக்கரடி'' என்றும் அழைக்கிறார்கள்!

- பூமியைச் சுற்றிவரும் விண்வெளி வீரர்கள் ஒவ்வொரு நாளும் அதிகபட்சம் 16 சூரிய உதயங்களையும் அஸ்தமனங்களையும் காணமுடியும்.

- 100 ஆண்டுகள் பழைமையான சாக்லெட் பார், 700 அமெரிக்க டாலருக்கு விற்கப்பட்டிருக்கிறது!

- கடல் மட்டத்தில் இயங்குவதை விடவும், உயரமான மலையில் கடிகாரம் சற்று வேகமாக ஓடும்!

- லண்டனிலுள்ள ''பிக் பென்'' மணிக்கூண்டின் நிமிட முள் வேலை செய்வதை தொலைவில் கணக்கிட்டால், அது ஆண்டுக்கு 190 கிலோமீட்டர் கடக்கிறது!

- ஆணின் இதயத்தை விட பெண்ணின் இதயம் வேகமாக துடிக்கிறது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

- இதுவரை ஒன்பது பெண்கள் சமாதானத்திற்கான நோபல் பரிசு வென்றுள்ளனர்.

- உலகின் முதல் விண்வெளி வீராங்கனை வால்ண்டினா தெரஸ்கோவா 45 முறை பூமியை வெற்றிகரமாக வலம்வந்தவர்.

- இரண்டுமுறை நோபல் பரிசு பெற்ற மேடம் கியுரி சிறுவயதில் வீட்டுவேலை செய்யும் வேலைக்கார சிறுமியாக தம் வாழ்க்கையை பல கஷ்டங்களுக்கிடையே துவக்கினார்.

- ஆங்கிலக் கால்வாயை மிக வேகமாக நீந்திய ஒரே ஆசிய வீராங்கனை அனிதா சூட். 8174 மணி நேரத்தில் நீந்திக்கடந்தார்.

- மிகக் குறைந்த வயதில் ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட் ஸ்லாம் வென்ற பெண்மணி மார்டினா ஹிங்கிஸ்.

சிறுகதை ✍ அருணா செல்வம்

# கல்யாணம்



மலர் கொண்டுவந்து கொடுத்தக் தேனியை ஒரு வாய் குடித்துவிட்டு மலரை நிமிர்ந்து பார்த்தான் விக்ரம். மலர் சினேகிதமாக புன்னகைத்த படி அவன் எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்தாள்.

மலர்... உங்கிட்ட தனியாகப் பேசவேண்டும் என்று தான் மஞ்சுவைக் கூட கூட்டிட்டு வரவில்லை என்று பீடிகையுடன் தொடங்கினான்.

தன் கணவரின் நண்பன். எப்பொழுதும் மனைவியுடன் வரும் விக்ரம் இந்த முறை தனியாக வந்திருக்கிறானே... என்று யோசனையில் இருந்த மலர், இவன் இப்படி சொன்னதும், இவருக்கு நம்மிடம் பேச என்ன இருக்கிறது என்பது போல் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

மலர்... இந்த நவம்பர் வந்தால் என் தங்கை கௌரிக்கு முப்பது வயது தொடங்குது. உனக்குத் தெரியுமில்ல...? அவன் கேட்டதும்... கொஞ்சம் தெளிந்து, ஒரு பெருமூச்சு விட்டு விட்டும் தெரியும் என்றாள்.

அவ கிட்ட நீயாவது பேசி பாரேன் என்றான் கவலையாக.

நான் என்னங்க பேசுறது. நீங்கள் தான் ஒரு முடிவுக்கு வரணும். கௌரி மேல உங்களுக்கு இல்லாத அக்கறையா எனக்கு வந்திடப் போகுது...?

உண்மைதான் மலர். ஆனால், எங்க பேச்சை அவ கேட்கலையே... நீ அவ கிட்ட கொஞ்சம் நெருக்கமா பேசுவே. அதோட பெண் என்றால் அவளும் மனம் விட்டு பேசுவா இல்லையா...?

ஏன்... உங்க மனைவி மஞ்சு கௌரிகிட்ட நல்லா தானே பேசுவாங்க. பிறகென்ன?

பேசுவாங்க தான். ஆனாலும் அண்ணி மச்சாள் என்ற இடவெளி இருக்கத்தான் செய்யுது. அதனால நீ பேசு. அவளோட கல்யாணத்தைப் பத்தி அவ எந்த முடிவுக்கு வந்தாலும் நான் ஏத்துகிறேன்னு சொல்லு...

எந்த முடிவா... அப்படியென்றால்...? புரியாமல் கேட்டாள் மலர்.

மலர்... உனக்குத் தெரியாதது எதுவும் இல்லை. எனக்கு படிப்பு முடியறதுக்குள்ள காதல் கல்யாணம் என்று அவசர அவசரமாக வாழ்க்கையைத் தொடங்க வேண்டியதாகி விட்டது. கௌரிக்கு என்னை விட்டா யாரும் இல்லை. வாழ்க்கையில கொஞ்சம் வசதியா வாழனும்ன்னா பணம் வேணும். அதுக்கு நல்லா படிச்சி பெரிய வேலைக்குப் போகனும். அதுக்கு முன்னால காதல் கீதல் என்று வந்துவிட்டால் என்னை மாதிரித்தான் கஷ்டப் படனும் என்று அவளிடம் சொல்லிக் கொண்டே இருப்பேன்.

படிப்பை முடிச்சிட்டா. நல்ல வேலை கிடைச்சுது. நானும் அவ வேலைக்குப் போனதும் மாப்பிள்ளை தேட ஆரம்பிச்சேன். எனக்கு இப்போ கல்யாணம் வேண்டாம். ரெண்டு மூனு வருஷம் சம்பாதிக்கிறேன்.

அப்புறமா கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னா. நானும் சரின்னு விட்டுட்டேன். கை நிறைய சம்பாதிக்கிறா. அஞ்சு வருஷமா மாசாமாசம் சம்பளத்துல பாதிய கொடுத்திடுறா. நானும் ரெண்டு வருஷம் கழிஞ்சதும் வரன் தேட ஆரம்பிச்சேன். மாப்பிள்ளை தேடித் தேடி எந்த மாப்பிள்ளையைக் காட்டினாலும் வேண்டாம். என்னை இப்படியே விட்டுடுங்க என்கிறாள். கொஞ்சம் கோபமாகப் பேசினால்... நான் உங்களுக்கு பாரமா இருந்தா சொல்லுங்க வீடு தனியாக எடுத்துக்கொண்டு போய்விடுறேன்னு சொல்லுறா... அவ சம்பளத்தைக் கொண்டு வந்து கொடுக்கிறதால தான் நான் அவளைக் கல்யாணம் செஞ்சி குடுக்க மாட்டேங்கிறேன்னு வெளிப்படையாவே சிலர் பேசுகிறாங்க மலர். எனக்கு இதுவே பெரிய கவலையா இருக்குது என்றான் கவலையுடன் விக்ரம்.

மலர் கௌரியுடன் சினேகிதமாகப் பேசி இருந்தாலும் இதுவரையில் அவளின் திருமணத்தைக் குறித்துப் பேசியதில்லை. ஆனால் அவளிடம் இதைப் பற்றிப் பேசவேண்டும் என்ற எண்ணம் ஓர் ஓரத்தில் இருந்து அரித்துக் கொண்டேதான் இருந்தது. இப்பொழுது அவளின் அண்ணனே இது குறித்துப் பேசவந்ததும் வெளிப்படையாகப் பேச ஆரம்பித்தாள்.

மத்தவங்க பேசுறதையெல்லாம் விடுங்க. ஆமா... ஏன் கௌரி கல்யாணம் வேண்டாம்னு சொல்றா...? ஏதாவது காதல் கீதல் இருக்குமோ...? சந்தேகத்துடன் கேட்டாள் மலர்.

எனக்கு தெரிஞ்சி அதெல்லாம் இல்லை. ஆனால் இப்போ இருக்கிற நிலையில அவ யாரை கை காட்டுறாளோ அவனை கட்டி வைக்கத் தயாரா இருக்கேன் என்று சொல்லி நிறுத்தியவன், ப்ச்சி... ஒரு காலத்துல படிப்பு மட்டும்தான் முக்கியம். காதல் கீதல் என்று வந்திடாதே என்றேன். அவ வேலைக்கு போக ஆரம்பிச்சதும்... ஏதாவது நம்ம ஊர்காரன், நம்ம ஜனமா இருந்தா கட்டி வக்கிறேன்னு ஜடைமாடையா சொன்னேன். ஆனா இப்போ... எந்த சாதி, மதமா இருந்தாலும் பரவாயில்ல, எந்த நாடு, மொழி மாறி இருந்தாலும் பரவாயில்லை என்ற அளவுக்கு இறங்கி வந்திட்டேன். என்றான் கவலையாக.

விக்ரமைப் பார்க்கும்பொழுது மலருக்குச் சற்று கவலையாகத்தான் இருந்தது.

என்ன செய்வது? பிடிவாதத்தைத் தளர்த்தும் போதுதானே தெரிகிறது... நாம் பிடித்திருந்தது பிடிக்காத ஒன்றை என்று.

சரி விக்ரம். நான் அவளிடம் பேசிப் பார்க்கிறேன் என்று மலர் சொன்னதும் பெருமூச்சுடன் கிளம்பினான்.

★ ★ ★ ★ ★

கௌரி மேடம் கூட்ட ஒன்றில் இருக்கிறாங்க. முடியிற நேரம்தான். நீங்கள் காத்திருப்ப தென்றால் அந்த வரவேற்பிடத்தில் காத்திருங்கள் என்று அந்த அலுவலக ஊழியர் சொல்லிவிட்டுச் சென்று அரை மணிநேரம் கடந்த பிறகுதான் கௌரி ஒரு கும்பல் புடைசூழ ஓர் அறையைவிட்டு வெளியில் வந்தாள். வந்தவள் மற்றவர்களிடம் ஏதோ சொல்லிக்கொண்டே இவளைக் கடந்து சென்றாள்.

மலர் அவளை வியப்புடன் பார்த்தாள். கௌரிக்குப் படிப்பு முடிச்சதும் அவள் படிப்பிற்கு ஏற்ற வேலை கிடைத்தது என்றும், அதே அலுவலகத்தில் மேலும் மேலும் பதவி உயர்வுகள் கிடைத்திருக்கிறது என்றும் விக்ரம் சொல்லி கேட்டிருக்கிறாள். அப்பொழுது அதையெல்லாம் மலர் பெரியதாக எடுத்துக் கொண்டது இல்லை. ஆனால், இங்கே பார்க்கும்பொழுது மலருக்குப் பிரமாண்டமாகத் தெரிந்தது.

அவள் பலபேருக்கு உத்தரவு இடுபவள் போல் தெரிகிறாள். இவள் சொல்வதைத் தலையாட்டிக்கொண்டே குறிப்பு எடுத்தபடி மற்றவர்கள் அவள் பின் செல்கிறார்கள்.

இதையெல்லாம் பார்த்தபோது மலர், இவளே பலபேருக்குப் புத்தி சொல்கிற அளவிற்கு இருக்கிறாள். இவகிட்ட நாம என்னவென்று பேசுவது... பேசாமல் போய்விடலாமா... என்று நினைத்துக்கொண்டு இருக்கும் போதே... ஐ... மலரக்கா. ஐய்யோ. உங்களைப் பாத்து எவ்வளவு நாளாச்சி? எப்படி இருக்கிறீங்க...? என்று குழந்தைத்தனமாக கேட்டபடி அவள் எதிரில் வந்து அவளைக் கட்டி முத்தமிட்டாள் கௌரி.

மலர் கொஞ்சம் இறுக்கம் தளர்ந்தாள்.

நல்லா இருக்கேன் கௌரி. ஒரு வேலையா இங்க வந்தேன். வந்த வேலை முடிஞ்சிடுச்சி. நீ இங்க தானே வேலை செய்யிற? அப்படியே உன்கூடவே வீட்டுக்குப் போயிடலாம்னு தான் உன் ஆபிசுக்கு வந்தேன் என்றாள் மலர்.

கௌரி இதை நம்பாதது அவளின் முகத்தில் தெரிந்தாலும் அதை மறைத்து அப்படியா? சரி வாங்க போகலாம் என்று சொல்லியபடி இறங்கி நடந்தாள். மலரும் அவளைப் பின்தொடர்ந்தாள்.

காரை ஒரு தேனீர்க் கடையில் நிறுத்திவிட்டு ஓர் அமைதியான சூழல் உள்ள இடத்தில் மலரை அமர வைத்துவிட்டு எதிரில் அமர்ந்ததும், இப்போ சொல்லுங்க அக்கா. என்ன

விசயமா என்னைப் பார்க்க இவ்வளவு தொலைவு வந்திருக்கிறீங்க? மெல்லிய புன்முறுவலுடன் கௌரி கேட்டாள்.

மலர் அவளின் புத்திசாலித்தனத்தை உணர்ந்து அதற்கு மேல் இவளிடம் பொய் சொல்வது தவறு என்ற எண்ணத்துடன் நேரிடையாக விசயத்திற்கு வந்தாள்.

நான் உண்மையைச் சொல்லிடறேன். உன்னோட கல்யாணத்தைப் பற்றி பேசதான் வந்தேன். என்றாள்.

விக்ரம் அண்ணா எங்கிட்ட பேச சொல்லி உங்கள அனுப்பினாரா...? கௌரி கேட்டாள்.

விக்ரம் அண்ணா இருக்கட்டும். நானே ரொம்ப நாளா கேட்கனும்ன்னு இருந்தேன். நீ ஏன் கல்யாணம் வேண்டாம்ன்னு சொல்லுற?

இவளின் கேள்விக்கு அவள் பதில் சொல்லாமலிருக்க... உனக்கு வேற யாரையாவது பிடிச்சிருக்கா? இருந்தா சொல்லு. நானே பக்குவமா விக்ரம் கிட்ட சொல்லுறேன் என்றாள் மெதுவாக.

அப்படியெல்லாம் எதுவும் இல்லைக்கா.

நெஜமா சொல்லு. நீ யாரையும் காதலிக்கல...?

கௌரி வெறுப்பாய் ஒரு புன்னகையை வெளியிட்டாள். காதலிக்கிற வயசு வந்தபோது, மனசைப் பிடிக்கனும் என்ற லட்சிய சங்கிலியால கட்டி போட்டிக்கினு இருந்தேன். அது ரொம்ப இறுக்கிடுச்சின்னு நினைக்கிறேன். அதனால இப்போ மனசு மறுத்துப் போச்சின்னு நினைக்கிறேனுக்கா. என்றாள் கௌரி.

சற்று யோசித்த மலர், வாழ்க்கையில லட்சியம் எல்லாம் இருக்க வேண்டியதுதான். அதுக்காக மனசை கட்டுப்படுத்தி வாழுறதும் நல்லதுதான். ஆனால், இப்போ உன் லட்சியம் எல்லாம் நிறைவேறிடுச்சே. இப்போ கல்யாணம் பண்ணிக்கலாம் தானே... கேட்டாள்.

இல்லக்கா. எனக்கு இப்போ அந்த ஆசையெல்லாம் வரலை.

அப்போ இப்படியே இருந்திடலாம்ன்னு முடிவு பண்ணிட்டியா...?

இன்னும் அந்த முடிவுக்கெல்லாம் வரலை; பார்ப்போம், பொதுப்படையாகச் சொன்னாள் கௌரி.

இனிமேல என்ன பாக்குறது? எனக்கெல்லாம் வாழ்க்கையைப் புரிஞ்சிக்கிற வயசு வர்றதுக்கு முன்னாடியே பதினெட்டு வயசுல கல்யாணம் பண்ணிட்டாங்க. உன் வயசுல என்னோட குழந்தைங்க ஸ்கூலுக்கே போக ஆரம்பிச்சிட்டது தெரியுமா?

தெரியும்க்கா. ஆனால் உங்களுக்கு ஒன்று தெரியுமா... அந்த பதினெட்டு வயசுல எதுவுமே தெரியாத பெண்ணை ஒருத்தனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறது தான் நல்லது. எதைப்பற்றியுமே யோசிக்காத வயது அது. இது தான் வாழ்க்கை என்று கிடைத்த வாழ்க்கையை தொடங்கிடலாம். கௌரி சாதாரணமாக சொன்னாள்.

என்ன சொல்ல வர்ற நீ? புரியலை. எங்களை மாதிரி நீங்களும் எதுவும் தெரியாமல் வாழ்க்கையைத் தொடங்கிடக் கூடாதுன்னு தான் பெண்களைப் படிக்க வைக்கறாங்க. அவ காலுல அவ நிக்கனும்ன்னு நெனச்சிதான் வேலைக்கி அனுப்புறாங்க. இப்போ படிச்சதால உனக்கு நல்ல தெளிவு வந்திருக்கும். வாழ்க்கை என்றால் என்னன்னு புரிஞ்சிருக்கும். இவனைத் தான் நீ கட்டிக்கனும்ன்னு யாரும் உன்னை



கட்டாயப் படுத்த முடியாது. உனக்கு பிடிச்சி நீயே தேர்ந்தெடுத்துக் கல்யாணம் பண்ணிக்கிற பக்கவம் வந்திருக்கு இல்லையா? சற்று கோபமாகவே கேட்டாள் மலர்.

கௌரி ஒரு பெருமூச்சு விட்டாள். பக்குவம். அது வந்ததால தான் நமக்குச் சரியானது எது என்று தேர்ந்தெடுக்க முடியாமல் தடுமாற வைக்கிறது. எல்லாமே நமக்கு மேட்சாகனும்ன்னு நினைக்க வைக்கிறது. படிச்சிட்டு வேலைக்குப் போய் வெளியுலகத்தைப் பார்க்கிறதால யோக்கியன் யார் என்று மனசு அலசிப்பார்க்க நினைக்கிறது என்றாள் வெறுப்பாய். மலர் யோசித்தாள். கௌரி கொண்டு வந்து வைத்தக் காபியைக் குடித்து முடித்தாள். மலர் காபியைக்

கலக்கிக்கொண்டே பேசாமல் இருந்தாள்.

அக்கா... உண்மையான காதல் என்று வர்ற வயசுல என்னையும் சிலபேர் காதலிப்பதாக சொன்னார்கள். காதலில் விழுந்தால் நாம் படிக்கனும், சம்பாதிக்கனும் என்ற லட்சியம் எல்லாம் போயிடும் என்ற பயத்தாலே அதெல்லாம் கூடாது என்ற மனக்கட்டுபா டோட இருந்தேன். இப்போ அவர்களுக் கெல்லாம் கல்யாணம் ஆகி பிள்ளைகளோட இருக்கிறார்கள். என்னை உயிருக்குயிராய் காதலிப்பதாக சொன்னவன் கூட இன்னைக்கு தன் குழந்தையை ஸ்கூலுல சேர்க்க லைனுல நிக்கிறான். என்னைவிட நன்றாக படித்தவர்கள் கூட காதல், கல்யாணம் என்ற ஒரு வட்டத்துக் குள் விழுந்து அதில் கஷ்டப்படுவதையும் சுக மாகத்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது உண்மையா பொய்யா என்பது வேறு விசயம். ஆனால், எனக்கு அந்த வட்டத்துக்குள் விழ ஆசை இல்லை மலரக்கா என்றாள் கௌரி. மலர், இவளுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் பேசாமல் அவளைப் பார்த்துக்கொண்டு இருந்தாள்.

கௌரியே தொடர்ந்தாள். இவ்வளவு காலத்துல ஒன்று மட்டும் புரிஞ்சிக்கிட் டேன்க்கா. வாழ்க்கையில பணம் என்ற ஒன்று மட்டும் இருந்துவிட்டால் போதும். எதற்கும் கவலைப்படாமல் சந்தோஷமா வாழலாம் என்றாள் கௌரி.

நல்ல பாயிண்ட் கிடைத்தது என்ற நினைப் பில் மலர் நிமிர்ந்து உட்கார்ந்து அதுக்காக காசையே கட்டிக்கிட்டு வாழ்ந்திட முடியுமா? உடம்பு என்று ஒன்று இருக்கிறது. அதில் உணர்வு என்ற ஒன்று இருக்கிறதே... அதை நீ யோசிக்கிறதில்லையா...? கேட்டாள்.

வெறும் உடல் சுகத்திற்காக மனம் ஒட்டா மல் வாழனும்மின்னு எனக்கு ஆசையில்லை யக்கா என்றாள் சட்டென்று கௌரி.

சரி கௌரி. இந்த வயதைவிடு. பிற்காலத் தில் உனக்கு என்று ஒருவர் வேண்டாமா....? இப்படியே வாழ்ந்தால் கடைசியில் தனிமர மாகத்தான் இருக்கனும். கொஞ்சம் கோபமாகச் சொன்னாள் மலர்.

கௌரி ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு சொன்னாள். கல்யாணம் பண்ணி பல பிள்ளைகள் பேரப்பிள் ளைகள் எடுத்தவர்கள் கூட இன்னைக்கி முதி யோர் இல்லத்தில்தான் இருக்கிறார்கள் என்று சொல்லியபடி இந்தப் பேச்சை இத்தோடு நிறுத்துவோம் என்ற தோரனையில் கடைக்காரரி டம் "பில்லை"க் கேட்டு பணத்தை செலுத்தினாள்.

தனது அஸ்திரங்கள் எல்லாம் கௌரியிடம் பயனற்றுப் போனதை உணர்ந்த மலர் சற்று கவலையும் ஏமாற்றத்தையும் அடைந்தாள். இறுதியாக ஒரு முறை முயற்சித்து பார்ப்போம் என்ற சிந்தனையுடன் எழுந்திருக்க முற்பட்ட கௌரியை கைபிடித்து அமர்த்தினாள்.

இவள் என்ன இப்படிச் சொல்கிறாளே என்று தப்பாக எடுத்துக்காத கௌரி நான் புரிஞ்சுக் கிட்டத உன்னிடம் சொல்லிடுறேன் அப்புறம் உன் இஷ்டம் என்று சொல்லி ஆரம்பித்தாள். முப்பது வயசில ஒரு பெண் அதிகமாக படித்துவிட்டு உயர்ந்த பதவியில கைநிறைய சம்பளம் வாங்கிக்கிட்டு இருக்கிறப்போ தனக்கு எல்லாமே கிடைத்துவிட்டதாக எண்ணத் தோன்றும் அதுவும் தனக்கு கீழே வேலை செய்கின்ற ஆண்கள் எல்லாம் கைகட்டிக் கொண்டு தான் சொல்வதை யெல்லாம் கேட்கிறபோது நான் ஏன் இன்னு மொரு ஆணுக்கு கீழே கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று யோசிக்க வைக்கும் இவையே திருமணம் பற்றிய எதிர்மறையான எண்ணங் களை உன்மனதில தோற்றுவிக்க காரணமாக அமைந்திருக்கலாம். ஆனால் இது மட்டுமல்ல வாழ்க்கை என்பதை நீ புரிஞ்சுக்கோ இப்ப நீ எல்லாம் புரிந்தவ மாதிரி பேசிக்கலாம் ஆனால் நாற்பது வயசிலே உன் வயசுப் பெண்க ளெல்லாம் தன் பிள்ளைகளைப் பற்றியும் குடும்பம் பற்றியும் பெருமையாகப் பேசும் போது நாம தப்பு செய்துட்டமோ என உணரத் தோன்றும்.

அதுவே ஐம்பது வயது ஆயிட்டா வாழ்க் கையே வெறுமையானதுபோல உணருவாய், அப்போது நீ நினைச்சாலும் எதையும் செய்திட முடியாத ஓர் நிலமை காணப்படும். ஆனால் இப்ப உனக்கு இன்னமும் காலம் கடந்து போக வில்லை எல்லாத்தையும் சரி செய்யக்கூடிய நிலையிலேயே இருக்கிக்கிறாய். ஒன்றை மட்டும் புரிந்துகொள்; காசிருந்தா எல்லாவற் றையும் பெற்றுவிடலாம் என்றில்ல காசால பெற்றுக்கொள்ள முடியாத விடயங்கள் எத்த னையோ இந்த பூமியில் இருக்கு அதில் ஒன்று தான் குடும்பம் என்கின்ற பந்தமும். அதனை சுற்றிய அன்பு என்கிற பிணைப்பும் அதை நீ எவ்வளவு காசு குடுத்தாலும் வாங்க முடியாது தெரியுமா? அத்தகைய உண்மையான அன்பு உனக்கு வேணுமா இல்லையா என்பதை நீயே தீர்மானித் துக்கொள் என தனது ஆதங்கத்தையொல்லாம் மலர் கொட்டித் தீர்த்த போது இருவர் மனதுக் குள் ஓர் மழை பெய்து ஓய்ந்தது போலிருந்தது.

அங்கு நிலவிய நீண்ட மௌனத்தை கௌரி தான் உடைந்தாள், சரியக்கா நான் யோசிக் கிறன். ஓரிரு நாட்களில் நல்ல முடிவாக சொல் கிறன் என்று அண்ணாவிடம் சொல்லுங்கள் என்ற கௌரியின் கைகளை ஆதராமாய் பற்றினாள் மலர். ■

எஸ். பி. சித்திரன், வத்தளை.

# தாயும் சேயும் உலகையாள சங்கேமுழங்கு!

இந்துத்தமிழ் வாழுமுலகு போற்றிடும் நல்தீபாவளி
ஐந்துகண்டம் நாடிச்சென்று நானிலம் வெல்தீபாவளி
சொந்தபந்த மொன்றுகூடி அகல்விளக் கேற்றுமொளி
சாந்திசமா தானம்வேண்டி நல்லோர்மனக் குமுறலொலி!

அன்னல்காந்தி அகிலமேற்கும் அகிம்சை வழிப்போராளி
இன்னல்தீர்க்க இறைபோற்றும் அகமகிழ் கவிதைமொழி
எண்ணம்நிறை வேள்விகொண்டு எள்ளுசாற்றி ஏந்தும்களி
உண்ணும்சாதம் உயிர்காக்க நினைத்திடு முன்தன்வழி!

சூழ்ந்ததுன்ப வாழ்வுநீங்க துயிலெழுப்பிய சுடரொளியே
சூத்திரம்யாத்து துழாவிவர துணிவுபெற வேண்டும்நீயே
சாத்திரம்கூறி அமைதிதேடி வளர்த்தார் பழமைவிழியே
சரித்திரமியற்றி இன்னுயிர் காப்போம் வலிமைவழியே!

காலாகாலம் கண்டுவரும் கயவர்செயல் களைந்தோட
வேலா நீயும் சூலமெடுத்து துயர்நீக்க துணைத்தேட
தாலாமனம் தவித்துநிற்க தரணிதிருப் பாதமாட
தோழாவென தோள்சாய்ந்து தோன்றிவரும் அருள்பாட!

பாரதமீய்ந்த கலியுககால வதைநீங்கி மனம்துலங்கு
பாவையர்கற் புடன்வாழ தடுத்துநில் தடைவிழங்கு
நாவில்பொய் வார்த்தைமேவி உயிர்கொல் வானவுலங்கு
தாயும்சேயும் உலகையாள நாளும்கொள் சங்கேமுழங்கு!



IDL

# IDEAL FABRIC

## Baby Item Importers to local Producation

specilies in mosquito net chintz popline, mal piece lace cotton viscose mastin, T/C 65x35 white for School uniform

T/c 65x35, chintz, Chalenger, Popline, Mal piece, Lance cotton, Viscose, Maslin, Mosquito Net, Net Fabric & Accessories, Sarong, Cutton Lace, Kaftan 3 meter, Thread, Abaya Fabric, Bed Sheet, Salwar, Tai cotton, Shirting, Flannel, Hanke chef, Panties, factory accessories items available.

## IDEAL BABY

- Chits, Bed Jecket
- Nappies, Baby Frockers
- Baby Blanket
- Cup and Saucer and all baby ieam

**Available Here**

# 128, 3rd Cross Street,
Colombo - 11, Sri Lanka.
TEL: 011 2330032 / 077 2220646

பரந்த அளவிலான திருமணம், விளம்பரங்கள், பாடல் ஒளிப்பதிவுகள் மற்றும் குறும்திரைப்படங்கள் வரை ஒளிப்பதிவு மற்றும் புகைப்படப்பிடிப்பிற்கான தீர்வுகள் எம்மால் வழங்கப்படும்.




M3 production

# M3 Production

We offers a wide range of visual production solutions ranging from wedding cinematography, advertisements, music videos and short films

T: + 94 772 911 184 | + 94 757 124 463 F: www.facebook.com/m3productionlk
E: m3production3@gmail.com

# தாய்

ஒரு பெண் தனது ஒரேயொரு மகனுடன் வாழ்ந்து வந்தாள். அவளிற்கு ஒரு கண் இல்லை. தன் மற்றைய கண்ணை வைத்துக்கொண்டு வாழவேண்டிய நிலை. கணவரின் இழப்பிற்கு பிற்பாடு அவளது சுவாசத்தின் ஒவ்வொரு மூச்சும் தன் மகனின் எதிர்கால வாழ்வு பற்றியதாகவே இருந்தது. தன்னிடம் இருந்த சொத்துக்களில் ஒரு பகுதியை விற்று மகனை ஒரு நல்ல தரமிக்க பாடசாலையில் சேர்த்தாள். மிகுதி சொத்தை தனது மகனின் கல்வி தொடர்பான செலவுகளிற்கு தயார் செய்திருந்தாள்.

நல்ல ஒழுக்கமிக்க மகன்; இரக்கமானவன்; புத்திசாலி. ஊரில் எல்லோரும் புகழும் வண்ணம் அவன் செயற்பாடுகள் இருந்தன. பாடசாலையில் முதல் தரத்தில் சித்தி எய்துபவன் அவன். காலங்கள் உருண்டன. ஒரு முறை அவன் மிகச்சிறந்த பெறுபேற்றினை ஈட்டி அந்த பிரதேசத்திற்கும், அவனது பாடசாலைக்கும் பெருமை சேர்த்தான்.

இந்த செய்தியை அறிந்த உடனேயே அந்த தாய் ஆவலுடன் பாடசாலை நோக்கி ஓடினாள். மகனின் வகுப்பறை எது என அறிந்து அங்கு சென்று அவனை வாரி அணைத்து முத்தமிட்டாள். இறைவனை புகழ்ந்தாள். சந்தோஷத்துடன் வீடு வந்து அவனிற்கு பிடித்தமான உணவை தயாரிக்க ஆரம்பித்தாள்.

மகனின் வரவை எதிர்பார்த்து வழிமேல் விழி வைத்து காத்திருந்த தாய், மக்ன் வந்தவுடன் வாஞ்ஜையுடன் அருகில் சென்றாள். ஆனால், மகன் முகத்தைத் திருப்பி கொண்டான். தாயுடன் பேசவில்லை. நேராக அறைக்குள் சென்று படுத்துவிட்டான். அவளிற்கு ஒன்றும் புரியவில்லை. பதற்றத்துடன் ஓடிச்சென்று என்னவென்று கேட்டாள் கவலையுடன். மகன் சொன்னான், ''நீ ஏன் என் பாடசாலைக்கு வந்தாய்?'' அங்கு அழகான பணக்காரர்கள் மட்டுமே வருவார்கள். நீயோ குருடி. என் நண்பர்கள் என்னை குருடியின் மகன் என கூப்பிடுகின்றனர். இது பெரிய அவமானம்; வெட்கம். இதன் பின்னர் நீ என் பாடசாலை பக்கமே வராதே'' என கத்தினான் கோபமாக. அதிர்ந்து போனாள் தாய். ஆனாலும் மகனின் சந்தோஷம் கருதி இனி அவ்வாறு நடக்காது என சத்தியம் செய்தாள்.

இப்போது அவனது சுபாவம் மேலும் மாறுபட ஆரம்பித்தது. தன்னைத் தேடி வரும் நண்பர்கள் முன் வரவேண்டாம் என தாயை எச்சரித்தான். அவள் கண்கலங்க சரி என்றாள். பின்னர் சில நாட்கள் சென்ற பின், தனக்கு குருடியுடன் இருப்பது வெட்கம் என்றும், தான் ஹாஸ்டலில் தங்கி படிப்பதாக சொன்னான். ஒரு நாள் வீட்டை விட்டேசென்று விட்டான். அவள்




# மனதை உருக வைக்கும் உண்மைச் சம்பவம்

கதறி துடித்தாள், தினமும் தன் மகனை நினைத்து.

இறுதி பரீட்சையில் பாஸாகி, மருத்துவ கல்லூரிக்கு மகன் தெரிவானது அவளிற்கு தெரியவந்தது. தலைநகர் சென்று படிக்க வேண்டும். நிறைய செலவாகும். தனது மிகுதமிருந்த அனைத்து சொத்துக்களையும் விற்று மகனிற்கு அனுப்பி வைத்தாள். 5 ஆண்டுகள் பறந்து சென்றன. இப்போது அவளது மகன் ஒரு மருத்துவன்.

அவனை பார்க்க அவள் பல முயற்சிகளை மேற்கொண்டும் எதுவும் பயனற்று போயின. ஒரு கடிதம் மகனிடம் இருந்து வந்தது. அதில், ''அம்மா, நான் இப்போது இந்த நாட்டில் உள்ள சிறந்த வைத்தியர்களில் ஒருவன். குருடியின் மகன் வைத்தியன் என்பது தெரிந்தால் எனது கௌரவம் பாதிப்படையும். ஆதலால் நான் இந்த நாட்டை விட்டும் உன் பார்வையை விட்டும் கண்காணாத தேசம் செல்கிறேன்.'' இதுதான் அந்த கடிதத்தின் வரிகள். துடித்து போனாள் தாய்.

சில வருடங்கள் கடந்தன. முதுமையும், வறுமையும், அவளது ஒற்றை கண்ணுமே அவளிடம் எஞ்சியிருந்த சொத்துக்கள். பசி காரணமாக ஒரு பணக்கார வீட்டில் ஆயாவாக தினமும் வேலை செய்து வந்தாள் அந்தத் தாய். அந்த வீட்டின் எஜமானி இளவயதினள். நல்ல இளகிய குணம் படைத்தவள். இறையட்சமிக்கவள். அவளும் ஒரு வைத்தியராகவே இருந்தாள். இந்தத் தாயை தனது தாயாக நேசித்து போஷித்து வந்தாள். எல்லாம் நன்றாகவே நடந்தன.



அவளது கணவன் அமெரிக்காவில் இருந்து திரும்பி வந்தான். தனது எஜமானியின் கணவர் வருகிறார் என்பதனால் வாய்க்கு ருஷியாக நல்ல உணவுகளை தயார்படுத்தி வைத்திருந்தாள் அந்த குருட்டு தாய்.

வீடு வந்த அவளது கணவன், சில நாளிகைகளின் பின்னர் சாப்பிட அமர்ந்தான். உணவை ஆசையாக வாயில் அள்ளி திணித்தான். திடீரென அவன் முகம் மாறியது. கருமை அவன் முகத்தில் அப்பிக் கொண்டது. சடாரென தனது மனைவியின் முகத்தைப் பார்த்து கேட்டான், ''இதனை நீ தான் சமைத்தாயா?'' என்று. மனைவி குழப்பத்துடன் இல்லையே என்றாள். ''அப்படியானால் யார் சமைத்தது'' இது அவனது இரண்டாம் கேள்வி.

வீட்டு வேலைக்காரி சமைத்தாள் என்றாள் மனைவி. உடன் எழுந்த அவன் அடுப்படிக்கு சென்று எட்டி பார்த்தான். உள்ளே அவனது குருட்டு தாய்.

அதிர்ந்து போனார்கள் இருவரும். இவள் இன்னும் இங்கேயா எனும் ஆத்திரமும், வெறுப்பும் அவன் மூளையை ஆட்டுவித்தது. என் மருமகளா என் எஜமானி என்ற சந்தோஷமும், மகிழ்ச்சியும் அந்த தாயின் இதயத்தை நிரப்பின. உணர்ச்சிகளால் இருவருமே பேசவில்லை.

மீண்டும் சாப்பாட்டு அறைக்கு வந்த வைத்தியன் சொன்னான் தன் மனைவியை பார்த்து, ''இந்த குருடியை உடனடியாக கொண்டு சென்று வேறு எங்காவது விட்டு விடு. கண்காணாத இடத்தில்'' கத்தினான். அவன் சத்தம் அடுப்படியில் நின்ற அந்த அபலை தாயின் இதயத்தில் முட்டி மோதி நின்றது.

துவண்டு போனாள். வாழ்க்கையை இதற்கு பிறகும் வாழ வேண்டுமா என எண்ணி அழுதாள்.

தனது கணவனின் பிடிவாதமும், கோபமும், ஆவேசமும் எல்லை மீறிச் செல்லவே, அவனது மனைவியான அந்த பெண் வைத்தியர் வேறு வழியின்றி அவளிற்கு போதுமான பணத்தினை வழங்கி பல நூறு கிலோ மீட்டர் தூரத்தில் முன்பு அவள் வாழ்ந்து வந்த இடத்திற்கே மீண்டும் அனுப்பி வைத்தாள் அழுகையுடன்.

காலம் மீண்டும் வேகமாக அசைந்தது.

ஒரு நாள் காலை அவன் தொலைபேசிக்கு ஒரு செய்தி வந்தது. அவனது தூரத்து உறவினர் ஒருவர் பேசினார். ''உன் தாய் தள்ளாத வயதில் மரணிக்கும் தறுவாயில் இருக்கிறாள்'' என்பதே அந்தச் செய்தி. உடனடியாகவே அவன் தனது காரில் கிளம்பி தாயிருக்கும் இடத்திற்கு சென்றான். அவன் சென்ற போது, அவளது உயிர் பிரிந்துவிட்டது. இப்போது ''அம்மா'' என கதறினான்; கண்ணீர் விட்டான்.

இப்போது ஒரு கடிதத்தை அவனது உறவுக்காரர் கொடுத்தார். தான் மறைந்த பின்னர், மகன் வருவானாக இருந்தால் மட்டும் கொடுக்குமாறும், இல்லையெனில் எரித்து விடுமாறும் தாயார் கடைசி தருவாயில் வேண்டிக்கொண்டதாகவும் அவர் சொன்னார். பிரித்து வாசித்தான். அவன் கண்களில் இருந்த வழிந்த கண்ணீர் அந்த பாலைவெளியையே சகதியாக மாற்றியது.

அதில் இருந்த வரிகள் இதுதான்...

''அன்பின் மகனே!...

எனக்கு தெரியும், என் உருவத்தை பார்ப்பது உனக்கு ஒரு போதும் பிடிக்காது என்று. அதனாலேயே, எனது மரணத்திற்கு பின்னர் நீ வந்தால் மட்டும் இதனை கொடுக்கும்படி சொன்னேன்.

மற்றபடி எனது அன்பு என்றும் மாறாதது. அது இறைவனிற்கு மட்டுமே தெரிந்த விஷயம். மகனே நான் குருடிதான். உனக்கு குருடி தாய் இருந்திருக்கக் கூடாதுதான். எனக்கு உன் உள்ளம் புரிகிறது.

உனது உள்ளத்து உணர்வுகளை நான் பெரிதுமே மதிக்கின்றேன். நான் உன்னை சபித்தது கிடையாது. ஏன் கோபப்பட்டது கூட கிடையாது. எனக்கு ஒரு வாழ்க்கை வேண்டும் என்றிருந்தால் நான் இன்னொரு திருமணம் முடித்து நன்றாக வாழ்ந்திருப்பேன். உனக்காகவே நான் வாழ்ந்தேன். அதை நீ புரிந்து கொள்ளாமல் போய் விட்டாய்!

மகனே உனக்கு தெரியுமா? நான் ஏன் குருடியானேன் என்று! அப்போது உனக்கு சின்ன வயது. பாதையில் நின்று நீ விளையாடிக்கொண்டிருந்தாய். ஏதோ ஒரு பொருள் உன் கண்களில் பட்டு உன் ஒரு கண் குருடாகி விட்டது. வைத்தியர்கள் இன்னொரு வெண் படலம் இருந்தால் மட்டுமே உன் பார்வையை மீண்டும் கிடைக்க வைக்கலாம் என்றனர். என்ன செய்வதென்று தெரியவில்லை. நேரமும் போதாது.

அதனால்...


என் ஒரு கண்ணை உடனடியகாவே தானம் செய்து உனக்கு பார்வை கிடைக்கச் செய்தேன். எனது கண்மணியே இன்று உன் கண்களாக இருக்கிறது. நீ இந்த உலகத்தை, வாழ்க்கையை பார்ப்பதும் அந்த கண்களாளேயே!...

உனக்கு இதுவும் அவமானம் என்றால் உனது வலது கண்ணை பிடுங்கி எறிந்து விடு. ஏனென்றால், அது ஓர் குருடியின் கண்ணல்லாவா? இல்லை மனமிருந்தால் அப்படியே விட்டு விடு. அந்த கண்களால் நான் உன்னை பார்த்துக் கொண்டிருப்பேன்.''

இப்படிக்கு,
என்றுமே அன்புள்ள,
உன் குருட்டு அம்மா.

# வன்முறைக்கு வன்முறை சரியாகுமா?

அண்மையில் வாரியபொல பிரதேசத்தில் நடந்தவொரு சம்பவம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்தது. தன் ஆடையைப் பற்றி ''மிஸ் இந்த ஆடை உங்களுக்கு பொருந்தவில்லை, நல்லாவே இல்லை.'' என்று வர்ணித்த ஆணின் கன்னத்தில் அறைந்து அவரை தாக்கியிருந்தார் ஒரு யுவதி. இந்த விடயம் சமூக வலைத்தளங்களின் ஊடாக மிக வேகமாக பரவி எல்லோரின் கவனத்தையும் ஈர்த்திருந்தது. இந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பெண் நடந்துகொண்ட விதம் பற்றி பல்வோறு தரப்பினரும் பல்வேறு கருத்துக்களை தெரிவித்துவரும் நிலையில், ஒளிஅரசி தனது வாசகிகளிடம் அப்பெண் நடந்துகொண்ட விதம் பற்றி கருத்துக் கேட்டபோது 56% ஆனோர் அப்பெண் நடந்துகொண்ட முறை தவறானது என்றும் 44% ஆனோர் அப்பெண் நடந்துகொண்டவிதம் சரியானது என்றும் கருத்து தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. அவர்களில் ஒருசிலர் தெரிவித்த கருத்துக்களை உங்களுக்காக தருகின்றோம்...




இன்றைய அரசியல் பொருளாதார சூழ்நிலையில் பெண்களுக்கெதிரான வன்முறைகள், பாதுகாப்பின்மைகள் அதிகரித்துச் செல்வதால் இந்தப் பெண் முன்மாதிரியாக துணிந்து இவ்வாறு நடந்துகொண்டமை பாராட்டத்தக்கது. அத்துடன், அப்பெண்ணை இவ்வாறு செய்யுமளவுக்கு அந்த ஆண் சொற்பிரயோகங்களைப் பயன்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**என்.கே.வேணி - பலாங்கொடை.**

கோபத்தால் எடுக்கின்ற ஒரு சில முடிவுகள் எம்மை படு பாதாளத்துக்குள் தள்ளிவிடும். 'ஆத்திரத்தில் மனிதன் அறிவை இழப்பதுண்டு.' அந்தப் பெண் சற்று யோசித்து வார்த்தைகளால் திட்டியிருக்கலாம்; அல்லது அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் நடந்ததைக் கூறியிருக்கலாம். அதைவிடுத்து அவள் பொது இடத்தில் அந்த இளைஞனைத் தாக்கியது ஏற்றுக்கொள்ளமுடியாத செயல். இதனால் வரும் பின் விளைவுகளை அவள் எண்ணவில்லை. இன்று எவ்வளவோ பிரச்சினைகளை பத்திரிகை வாயிலாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் நாம் பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

**நிர்மலாதேவி - ஆசிரியர்.**

துஷ்பிரயோகமான வார்த்தைகள் பிரயோகித்திருந்தால் அந்தப் பெண் செய்தது சரி. ஆனால், சாதாரணமாக ஜொல்லு விட்டிருந்தால் அப்பெண் நடந்தது சரியெனக் கூறமுடியாது. ஆனால், பத்திரிகைகள் குறித்த ஆண் பயன்படுத்திய சொற்பிரயோகங்களைத் தெரிவிக்காமை குறைபாடேயாகும்.

**சே.பிரேமினி - கல்முனை.**

எவ்வளவுதான் இருந்தாலும் சட்டத்தைத் நாம் கையில் எடுப்பது தவறு. அதே வேளை, மக்கள் நடமாட்டம் கூடிய அந்த இடமானதால் அந்தப் பிரச்சினை சுமுகமானது. இதே யாருமற்ற ஒரு மக்கள் நடமாட்டம் இல்லாத இடமாக இருந்து அந்த இளைஞன் கோபத்தால் ஏதும் விபரீதமாக நடந்திருந்தால் என்னவாகியிருக்கும் அந்த யுவதியின் நிலைமை. அண்மைக்காலமாக சிறுவர்கள், பெண்களுக்கு துஷ்பிரயோகம் மற்றும் கொலைகள் அதிகரித்துள்ளன.

**கௌசல்யா மேகம் - வைத்தியர்.**

நிச்சயமாக இச்செயலை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. காரணம், ஒரு பெண்ணாகப் பிறந்தவள் பொறுமைக்கு இலக்கானவளாகத்தான் இருக்கவேண்டும். தவிர, இவ்வாறு கொலைவெறித்தனத்துடன் இருப்பது அழகல்ல. அதேசமயம், இருவேறுபட்ட கருத்துகள் உள்ளன. தற்போது நாட்டில் நிலவுகின்ற பிரச்சினைகள் மத்தியில் ஓர் இளம் யுவதி இவ்வாறு நடந்துகொண்ட விதம் இப்பெண்ணின் எதிர்கால பாதுகாப்பைப் பற்றி கொஞ்சம் சிந்திக்கவேண்டியுள்ளது.

**டி.ஆர்.ருத்ராதேவி,**
**பிரபல தொழில் வர்த்தகர்.**

ஒரு பெண் - அதாவது, அந்த யுவதி தன் பாதுகாப்புக் கருதி அந்த இளைஞனைத் தாக்கிய விதம் சரி என நான் கருதுகின்றேன். காரணம், இப்போது எங்கு பார்த்தாலும் பெண்கள் துஷ்பிரயோகம், கொலை, கொள்ளை என நாளுக்குநாள் கூடிக்கொண்டே போகின்றது. எனவே, பெண்கள் இவ்வாறு எதிர்த்து நின்று ஆணுக்குப் பெண் நிகர் என்று இருப்பார்களாயின் ஆண்கள் கொஞ்சம் விலகி நிற்பார்கள்.

**அருட் சகோதரி.**

பெண்களை வார்த்தைகளால் துஷ்பிரயோகங்களுக்குள்ளாக்கும் ஆண்களை தாக்குவதற்கு பெண்களுக்கு எந்தவொரு உரிமையும் இல்லை. பொது இடங்களில் இத்தைய தாக்குதல்கள் என்பது நாகரீக மற்ற செயல்களாகும். அதிலும் பெண்கள் பொது இடங்களில் இவ்வாறு நடந்து கொள்வது என்பது பெண்மைக்கே கலங்கம் ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகவே கருத வேண்டும். பெண்கள் தங்களை எந்தவொரு துஷ்பிரயோகத்திற்கும் உள்ளாக் கப்படாதவாறு தங்களை தாங்களே தயார்ப் படுத்தி வைத்திருக்க வேண்டும். எந்தவொரு மனிதனும் தன்னை மற்றவனுடைய பார்வையில் எவ்வாறு விழிக்கச் செய்ய வேண்டும் என்ற கடப்பாடு அவனையே சார்ந்ததாகும்.

**டீன் நூர் நாகூர் கனி, அதிபர்.**

துஷ்பிரயோகங்கள் பலவாறாக மலிந்து விட்ட தற்போதைய சூழலில் நடந்து விட்ட இச்செயல் சரியானதே என்னும் கூற்றை பலபேரிடம் தோற்றுவித்தாலும் உண்மையில் ஒரு பெண் அவ்விதம் நடந்து கொள்வது என்பது பெண் சமூகத்துக்கு இழுக்கான செயலே. ஒரு ஆணின் வார்த்தைத் துஷ்பிரயோகம், கோபமடையச் செய்யும். எனினும், அதற்காக அடிப்பது என்பது அப்பெண்ணின் பொறுமைக்குறைவையே சுட்டிக் காட்டுகின்றது. ஒருவேளை அந்த ஆண் திருப்பி அடித்திருந்தால் நிலைமை மோசமாக மாறியிருக்கும்.

**கோபிகை, தருமபுரம்.**

எனது பார்வையில் பஸ் நிலையத்தில் பெண்ணை சீண்டும் அளவுக்கு வார்த்தைப் பிரயோகம் செய்தமை தவறாகும். அதற்கு அப் பெண் அவசரமாக அந்த ஆணை பொது இடத்தில் தாக்கியமை பெரும் குற்றமாகும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற்குணங்கள் அமைந்த பெண் பொறுமையைக் கையாண்டிருக்கவேண்டும். அந்த ஆண் பொலிஸாரிடம் முறையிட்டமைபோல் இவரும் முறையிட்டிருக்கலாம். சட்டத்தைக் கையில் எடுக்க முற்படக்கூடாது.

**ந. சிவரஞ்சினி, அல்வாய்.**

டாக்டர் என். ஷாலினி



# ஆண்களை வசப்படுத்துங்கள்...

உலகில் நீங்கள் ஓர் வெற்றியாளராக நிகழவேண்டுமாயின் மற்றவர்களை வசப்படுத்தும் கலையை கற்றிருத்தல் அவசியமாகிறது.

ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஓர் பெண் இருக்கிறாள் என்பதன் உண்மையான அர்த்தம் ஓர் பெண்ணினால் வசப்படுத்தப்பட்ட ஆணே ஓர் வெற்றியாளனாக வருகிறான் என்பதே ஆகும். ஓர் ஆணை வசப்படுத்தி வெற்றியாளனாக்குவதற்கு என்னென்ன வழிமுறைகள் உள்ளன என்பது பற்றி பார்ப்போம்.

ஆண் என்பவனுக்கும் பெண் என்பவளுக்கும் இருக்கும் ஒரே வித்தியாசம் அவனுக்கு ''டெஸ்டோஸ்டீரோன்'' என்கிற சுரப்பி அதிகமாக சுரக்கப்படுகிறது பெண்ணுக்கு அது மிக சொற்பமாகவே சுரக்கப்படுகிறது.

குழந்தை பிராயத்தில் இந்த டெஸ்டோஸ்டீரோன் உற்பத்தி ஆவதில்லை. அதனால்தான் ஆண் குழந்தைகளின் உடல் தோற்றமும், குரலும், தோலும், பெண்ணை போலவே இருக்கின்றன. ஆனால், இந்த பையன் வயதிற்கு வரப்போகும் காலம் நெருங்க நெருங்க, அவனுள் டெஸ்டோஸ்டீரானை மிக அதிக அளவில் சுரக்க ஆரம்பிக்கின்றன. இதனால் அவனுள் ஆண்மைபடுத்தும் படலம் அமுலாகிறது. இனப் பெருக்க உறுப்புக்களின் வளர்ச்சி, ரோம வளர்ச்சி, குரல் மாறுதல், எலும்புகள் நீளுதல், தசைகள் புடைத்தல் என்று இந்த டெஸ்டோஸ்டீரோன் கலந்த உடன் அந்த பையனின் உடலில் பல மாற்றங்கள் உருவாகுவதை நம்மால் வெறும் கண்ணாலேயே பார்க்க முடியும்.

ஆனால், அவன் வயதிற்கு வந்தபின், நம் கண்ணுக்கு தெரியாமல் அவன் மூளையில் வேறு சில மாற்றங்களும் ஏற்பட்டுக்கொண்டு இருக்கும். எதிர் பாலினத்தின் மீது ஈர்ப்பு, காமம் சார்ந்த சிந்தனை, எந்த விஷயத்திலும் தீவிர கவனம், இதெல்லாம் போக அவனுக்கு திடீரென்று ஆதிக்க மனப்பான்மையும் தோன்றிவிடும். எங்கு சென்றாலும் தான் முதன்மை இடத்தை பிடித்துவிட வேண்டும், எல்லோரையும் விட முந்திக்கொண்டு ஜெயிக்க வேண்டும் என்கிற வெறி அவனுக்கு தோன்ற ஆரம்பிக்கும். அதனால் வயதிற்கு வந்தவுடன் ஆண் குழந்தைகள் தங்கள் தகப்பனோடே சண்டை போடுவார்கள், தாயிடம் எதிர்த்து பேசுவார்கள், எல்லோர் எதிரிலும் தங்கள் வீர தீர பராக்கிரமங்களை காட்டிக்கொள்ள முயல்வார்கள்.

ஏன் இப்படி? என்றால் இயற்கை வல்லமையே வெல்லும், என்கிற ஒரு விதியை வைத்திருப்பதால், தான் மிகவும் வலிமையானவன் என்று

காட்டிக்கொண்டால் தான் அந்த ஆணை பிறர் கவனிப்பார்கள். அப்போது தான் பெண் பாலினம் அவனை தேர்ந்தெடுத்து, மரபணுக்களை பரப்பிக்கொள்ள ஒரு வாய்ப்பைத் தரும். இதனால்தான் இயற்கை எல்லா உயிரினத்திலும் ஆண்பாலுக்கு மட்டும் இந்த அதிக்க குணத்தை டெஸ்டோஸ்டீரோனின் மூலமாக தூண்டுகிறது.

ஆணின் உடலிலோ, ஒரு நாளின் 24 மணி நேரத்திற்குள் டெஸ்டோஸ்டிரோன் மேலும் கீழுமாய் நிலை இல்லாமல் அலைபாய்ந்துக்கொண்டே இருக்கும். எப்போது எவ்வளவு இருக்கும் என்பதை முன்னறியவே முடியாது.

ஏன் அப்படி என்று தானே கேட்கிறீர்கள். காரணம், டெஸ்டோஸ்டீரோனின் அளவு ஆணின் மனநிலையை பொருத்தே இருக்கிறது. அவன் தன்னை ஒரு வெற்றியாளனாக, வீரனாக, உயர்ந்தவனாக எண்ணிக்கொண்டால் உடனே அவனுடைய இரத்தத்தில் டெஸ்டோஸ்டீரான் அளவு கூடிவிடுகிறது. இதுவே அவன் தன்னை ஒரு ஏமார்ந்தவனாகவோ, கோழையாகவே நினைத்தாலும் போச்சு, சடாரென டெஸ்டோஸ்டீரான் அளவு சரிந்துவிடும்.

அவன் தான் உயர்ந்தவன், வெற்றியாளன், வீரன் என்று அவன் நினைத் தாலே போதும், அவன் டெஸ் டோஸ்டீரான் அதிகமாகி விடுமே.

ஒரு மனிதனின் டெஸ்டோஸ்டீரோன் அளவு அதிகமாய் இருக்கும் போது, அவன் சந்தோஷமாய் இருக்கிறான். தன்னம்பிக்கையும், விடா முயற்சியும் சாதிக்க வேண்டும் என்கிற வைராக்கியமும் அப்போது அவனிடம் அதிகமாக இருக்கும். ஆனால், அதே ஆணின் டெஸ்டோஸ்டீரான் அளவு குறைந்து போய்விட்டால் அவன் சோகமாகிவிடுகிறான். தேவையற்ற எரிச்சல், ஆத்திரம், பொறுமையின்மை, சுயபரிதாபம், தோல்வி மனப்பான்மை, கோழைத்தனம் எல்லாம் சேர்ந்து அவனை ஆட்டி படைக்க ஆரம்பிக்கின்றன. இதனால் அவன் அதிக நோய்களுக்கு ஆளாகிறான். உடலாலும் மனதாலும் பெருத்த சங்கடத்திற்கு உள்ளாகிறான். அதற்கு மேல் போட்டி இட்டு ஜெயிக்கும் திராணியை அவன் இழந்துவிடுவதால் அவனால் வாழ்க்கையில் ஜெயிக்க முடியாமல் போகலாம்.

இதுதான் டெஸ்டோஸ்டீரானின் தன்மை என்றால், இப்போது சொல்லுங்கள், உங்கள் ஆணின் டெஸ்டோஸ்டீரோன் அதிகமாய் இருந்தால் உங்களுக்கு லாபமா, அல்லது குறைவாய் இருந்தால் உங்களுக்கு லாபமா?

அவ்னுக்கு டெஸ்டோஸ்டீரோன் அதிகமாய் இருந்தால் அவன் சுலபமாய் அதிகமாய் சாதிப்பான். அவன் சாதனைகளின் மேல் நீங்கள் இலவச சவாரி செய்து சொகுசாய் வாழலாம். ஆனால், அவனுக்கு டெஸ்டோஸ்டீரான் குறைந்து போனால் அவனால் அதற்கு மேல் சாதிக்க முடியாது, அவனால் அவன் மனைவிக்கு பெரிய பயன்பாடு இருக்காது. ஆக ஆணின் டெஸ்டோஸ்டீரோன் அதிகமாய் இருந்தால் தான் பெண்களுக்கும், சமுதாயத்திற்கும் லாபம்!


இந்த டெஸ்டோஸ்டிரானை எப்படி அதிகமாக்கி விடுவது என்று தானே யோசிக்கிறீர்கள்? சிம்பிள், அவன் தான் உயர்ந்தவன், வெற்றியாளன், வீரன் என்று அவன் நினைத்தாலே போதும், அவன் டெஸ்டோஸ்டீரான் அதிகமாகி விடுமே. வெளி உலகில் அவன் நிஜமாக ஜெயிக்கிறானா தோற்கிறானா என்பதெல்லாம் பெண்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் விஷயமே அல்ல. அதனால் அவன் வெளியே இருக்கும்போது அவன் டெஸ்டோஸ்டீரான் அளவை பெண்களால் கட்டுபடுத்த முடியாது.

ஆனால், வீடு என்கிற தனி சாம்ராஜ்ஜியத்திற்குள் அவன் வந்துவிட்டால், அதன் பின் அவன் டெஸ்டோஸ்டீரானின் அளவை நிர்னயிப்பதே பெண் தான். அவனை, பெரிய ஹீரோ மாதிரி நடத்தி, உன்னை மாதிரி ஒரு வெற்றியாளன் யாருமே இல்லையடா என்று நம்பவைத்தாலே போதும், அவன் டெஸ்டோஸ்டீரான் அளவு வானளவுக்கு பாயும், உடனே சந்தோஷமும், உற்சாகமும் பீறிட்டு விட, அவன் இன்னும் இன்னும் அதிகமாய் சாதிக்கும் ஆர்வத்தை பெறுவான்.

அதை விட்டு விட்டு, என் அப்பா மாதிரி வருமா? என் அண்ணன் மாதிரி வருமா? எதிர்வீட்டுகாரன் மாதிரி வருமா, என்று அவன் எதிரில் வேற்று ஆண்களை நீங்கள் பாராட்டி, இவனை மட்டம் தட்டிவிட்டீர்கள் என்று வையுங்கள் போச்சு, அவன் டெஸ்டோஸ்டீரான் அந்தர்பல்டி அடித்துவிடும், அவன் ஆக்ரோஷத்துடன் உங்களை அடிக்க

கிளம்பிவிடுவான், அல்லது வேண்டாத பழக்கங்களால் தன்னை அழித்துக்கொள்ள கிளம்பிவிடுவான்.

அதனால் ஆண்களை வசப்படுத்த விரும்பும் நண்பிகளே, அவனை எப்போதுமே பாராட்டுங்கள். உன்னால் முடியும், நீ சாதிக்கவே பிறந்தவன், நீ நினைத்தால் முடியாததா என்றெல்லாம் அவனுக்கு கொம்பு சீவி விடுங்கள் பிறகு பாருங்கள் அவன் எவ்வளவு சாதிக்கிறான் என்று!



உதாரணத்திற்கு சக்ரவர்த்தி திருமகன் ராமனை எடுத்துக்கொள்ளுங்களேன். அவன் மனைவி சீதாவை ராவணன் கடத்திக்கொண்டு போய் அசோக வனத்தில் சிறைவைத்தபோது, அவளைத் தேடி போய் கண்டு பிடித்த அனுமான், என் தோளில் ஏறிக்கொண்டால் நான் இப்போதுமே உம்மை காப்பாற்றிக்கொண்டு செல்வேன் என்று சொன்னான். அப்போது சீதை, ''ஐ நல்ல யோசனையாக இருக்கே, என்று உடனே அவன் தோளில் ஏறிவிட்டாளா என்ன? இல்லையே, நான் நினைத்தால் எப்போதோ இங்கிருந்து தப்பி போயிருப்பேன், ஆனால் அது ராமனின் வீரத்திற்கு கலங்கமாகிவிடும். அவர் மாவீரர், அவரால் ஆகாதது ஏதும் இருக்கிறதா? அவர் வந்து என்னை மீட்பார் என்கிற நம்பிக்கை எனக்கிருக் கிறது. போய் அவரிடம் இதை சொல்'' என்றாள். இத்தனைக்கும் ராமன் காட்டில் சாப்பாட்டிற்கே கஸ்டப்பட்டும் கொண்டு, ஒரு குரங்கு கூட்டத்துடன் சுற்றிக்கொண்டு இருந்தான். அவனுக்கே இவ்வளவு ஊக்கம் தந்தாள் சீதை.

ராவணனோ பெரிய பராக்கிரமசாலி, ஏழு லோகத்தையும் வென்ற ஜித்தன் ஆனால், அவனை அவன் மனைவி மண்டோதரி, ''வேண்டாம், போருக்கெல்லாம் போய் நேரத்தை வினக்க வேண்டாம். ராமன் உன்னை விட பலசாலி'' என்று ராமனோடு அவனை ஒப்பிட்டு மட்டம் தட்டினாள். இதனால் ராவணனின் டெஸ்டோஸ்டீரான் அளவு என்ன ஆகியிருக்கும்? சந்தேகமே இல்லாமல் சுரத்தல் குறைந்திருக்கும். விளைவு, எவ்வளவோ சக்திவாயந்தவனாக இருந்தும் இராவணன் தோற்று போனான்.

சரியான சாப்பாடு இல்லாமல், குரங்குகளின் உதவியோடு போரிட்டாலும் இராமனே ஜெயித்தான். காரணம், அவன் மனைவி அவனை தூக்கி வைத்து பேசியதால் அவன் டெஸ்டோஸ்டீரோன் அளவு அதிகமாக இருந்தது. அதனால் அவனால் ஜெயிக்க முடிந்தது.

இதெல்லாம் புராணகதையாக இருந்தாலும், இதில் இருக்கும் அறிவியல் துணுக்கு இது தான்: பெண்ணின் பாராட்டுக்கு ரொம்பவே அதிக பவர் உண்டு. நீங்கள் உங்கள் கணவன்/காதலன்/மகன்/சகா/நண்பன்/ஊழியனை ஒரு முறை பாராட்டிப்பாருங்களேன். அவன் பெரிய பெரிய சாதனைகளை சுலபமாக புரிவான். இதற்கு நேர்மாறாய், அவனை மட்டம் தட்டி, உதாசீனப்படுத்தி, உன்னால் பிரியோசனமில்லை என்று இழிவு படுத்தி பாருங்கள்... இந்த காயம் அவனை தோற்கடித்துவிடும்.

ஆகையால் ஆண்களை வசப்படுத்த விரும்பும் அன்பு நண்பிகளே... உங்கள் ஆணை ஹீரோ மாதிரி நடத்துங்கள், அவன் மென்மேலும் ஜெயித்துக்கொண்டே போவான். ஸீரோ மாதிரி நடத்தினீர்கள் என்றால் அவனுடன் சேர்ந்து நீங்களும் தோற்றுப்போவீர்கள். ■


LAE
Little Asia
Dream
Think
Achieve
BIG
வாடிக்கையாளர்
தீபாவளி நல்வ
BRIDAL SAREES - DESIGNER SAREES - SAL
73, 75A Main Street Colombo 11. T:+94 11 2391592, 23
317, 317A, Galle Road, Wellawatte, Colombo 06. T:+94 1


கனவு
சிந்தனை
சாதனை
பெரிது
LAE
அனைவருக்கும்
ாழ்த்துக்கள்
WAR - CHOLI - MEN'S WEAR - KID'S WEAR
391593 E: info@littlasiasilk.com www.littleasiasilk.com
1 2504470, 2500098 E: info@littlasia.lk www.littleasia.lk

திகில் மன்னன் ராஜேஷ்குமார் எழுதிய



# இருட்டில் வைத்த குறி

2

''கம் இன்.''

வெள்ளுடுப்பில் சுத்தமான பேரர், தள்ளு வண்டியோடு உள்ளே வந்தார். தள்ளு வண்டியில் செல்பில் செந்நிற திரவம் அசையும் பாட்டில்கள். புனல் வடிவ டம்ளர்கள். ஐஸ் கியூப்ஸ் நிரம்பின பிளாஸ்க் சோடா பாட்டில்கள். பீங்கான் தட்டுகளில் பிங்கர் சிப்ஸ். வாட்டர் ஜக். பேரர் டம்ளர்களில் ஊற்ற நான்குபேரும் விஸ்கியை கொஞ்சம் கொஞ்சமாக வயிற்றுக்கு வார்க்க ஆயத்தப்பட்டார்கள்.

பிரணவ் கேட்டார்.

'' மார்த்தாண்டம் காட்ரோட்டில் காரோட்டி உங்களுக்குப் பழக்கம் உண்டா?''

''பழக்கம் உண்டு. ஏன் கேட்கிறீர்கள்?''

''சென்டோசாவில் கார்ட் ரோடுகளைச் சந்திக்கவேண்டியிருக்கும். எல்லாமே ஹேர்பின் வளைவுகள். நூலிளை தவறினாலும் அதலபாதாளத்துக்குப் போய்விடுவீர்கள்.''

மார்த்தாண்டம் சிரித்தார்.

'' இந்தியாவில் பயங்கரமான கார்ட் ரோட்களில் காரை ஓட்டி ஓட்டி எனக்கு நிறைய அனுபவம் உள்ளது பிரணவ். பயப்படாதீர்கள்... உங்கள் முழுக்காருக்கும் நான் உத்தரவாதம்.''

பிரணவ் புன்னகைத்தார்.

'' என் காரைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நீங்கள் விபத்தில் சிக்காமல் வர வேண்டும் என்பதுதான் என் கவலை.''

சொல்லிக்கொண்டே கோர்ட பார்க்கட்டில் இருந்து கார்ச் சாவியை எடுத்து மார்த்தாண்டத்திடம் கொடுத்த பிரணவ், ரப்பர் தோட்டத்தைப்பற்றி மறுபடியும் பேசிவிட்டு நகர்ந்தார்.

காலை பதினொரு மணி.

மழை இலேசாய் தூறிக்கொண்டிருக்க சென்டோசா பாதையில் மாரிஸ் கார் வீறிட்டுக்கொண்டிருந்தது. மார்த்தாண்டம் காரை விரட்டினார். கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் கொங்கிரீட்ரோடும் ரோட்டின் இரண்டு பக்கமும் அடர்த்தியாய் வளர்ந்திருந்த கோரைப்புற்களும் கண்ணுக்குச் சிக்கின. குளிர் காற்று ஊசிமுனைகளாய் மாறி இருந்தது.

புவனேஷ் கேட்டான்.

''சென்டோஸாவில் அப்படியென்ன அட்ராக்ஷன்?''

மார்த்தாண்டம் ஒரு வளைவில் திரும்பிக் கொண்டே சொன்னார். ''பணத்தை எக்கச்சக்கமாய் வைச்சுக்கிட்டு என்ன பண்றதுன்னு தெரியாமல் முழிச்சிட்டிருக்கிற பணக்காரங்க எல்லோருமே சென்டோஸோவில் இருப்பாங்க. 'ஊர்ராங் உடான்' குரங்குகளோடு உட்கார்ந்து ப்ரேக்பாஸ்ட் சாப்பிடுவாங்க. லஞ்ச் சாப்பிடுவாங்க. கலைடாஸ் கோப்பிக் கலர்லே மியூஸிக்கல் பவுண்டனை வேடிக்கை பார்ப்பாங்க. மானோ ரயில்லே சுத்துவாங்க. வோர்ல்ட் ட்ரேட் சென்டர்க்குப் போய் திங்சை

பேர்ச்சஸ் பண்ணுவாங்க.''

பேச்சு திசை திரும்பியது.

''பிரணவ் மனசுவைத்து இந்தப் புதுக்காரை இரவல் கொடுத்திருக்கிறார். இந்தியாவில் யாருக்கும் இந்தத் தாராள மனசு வராது.''

''சிங்கப்பூர் ஜனங்களுக்கு கார் ஒரு பொருட்டே கிடையாது. தெரிந்த நண்பர்களுக்குக் காரைக் கொடுத்து உதவுவதை சந்தோஷமா நினைப்பாங்க.''

திடீரென்று காரின் வேகம் குறைந்தது.

''ஏம்பா... ஸ்பீட்டைக் குறைச்சிட்டீங்க?''

கண்ணாடி வழியே கையைக் காட்டினார் மார்த்தாண்டம். புவனேஷும் யோகேஷும் குனிந்து கொண்டார்கள்.

drive slowly.

மார்த்தாண்டம் சொன்னார். ''பிரணவ் சொன்ன காட்ரோடு இனிமேத்தான் ஆரம்பம். ரெண்டாவது கிலோ மீற்றரிலிருந்து இயற்கைக் காட்சிகள் ஆரம்பமாகிடும். சிங்கப்பூரிலேயே அழகு கொட்டிக் கிடக்கிற இடங்கள் இனிமேல் தான் வரும். எங்கே பார்த்தாலும் கிராஸ் லேண்ட்ஸ்தான்.''

கார் வளைவுகளில் ஏறியது.

மூன்றாவது வளைவைக் கடந்திருந்தபோது

''பீங்க்... க்... க்...''

காருக்குப் பின்னால் நீளமான ஹார்ன் சத்தம் கேட்டது.

மார்த்தாண்டம் ரியர்வ்யூ கண்ணாடியில் பார்த்தார். ஒரு நீல நிறக்கார். தலைதெறிக்க வேகத்தில் வந்துகொண்டிருந்தது. மூர்க்கமான வேகம்.

''என்ன இவ்வளவு வேகமாக வர்றான்?'' எரிச்சலாய்த் திட்டிக் கொண்டே தன்னுடைய காரை ஓரம்கட்டினார் மார்த்தாண்டம். வேகத்தைக் குறைத்தபோது நொடிக்கும் குறைவான நேரத்தில் ஒரு தீற்றல் மாதிரி நீலநிறக்கார் விருட்டென்று அவர்களைக் கடந்து போயிற்று. யோகேஷ் குனிந்து பார்த்துச் சொன்னான். ''அப்பா! ஒரு பொண்ணு காரை ஓட்டிக்கிட்டுப் போறா.''

''ஒரு பொட்டச்சி இவ்வளவு வேகமாக கார் ஓட்டறாளா? சரியான தைரியம்தான்.''

அந்த நீலநிறக்கார் 'விர்விர்' என்று வளைவுகளில் ஏறிக்கொண்டு இருக்க, மார்த்தாண்டமும் காரின் வேகத்தை அதிகப்படுத்தினார்.

''அப்பா! நீங்க மெதுவாகவே போங்க'' புவனேஷ் கத்தினான்.

''அவளை விடக்கூடாது. ஒரு தடவையாவது ஓவர்டேக் பண்ணிக்காட்டணும்.'' மார்த்தாண்டம் கியரை மாற்றி ஆக்ஸிலேட்டரை அழுத்தினார்.

காரின் வேகம் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்தது. அந்த நீலநிறக்கார் முன்புறக் கண்ணாடியில் நெருங்கிக் கொண்டே வந்தது.

''அப்பா வேண்டாம். ஹேர்பின் பெண்ட்ஸ் ரொம்பவும் மோசமா இருக்கு. தடுப்புச்சுவர் வேற சில இடங்களிலே காணோம்.''

யோகேஷ் சொல்லிக்கொண்டிருக்கும்போதே

''டொம்'' என்று ஏதோ சத்தம்.

மார்த்தாண்டம் நிமிர்ந்தார்.

கண்ணாடி வழியே அந்தக் காட்சி தெரிந்தது.

முன்னால் போய்க்கொண்டிருந்த அந்த நீலநிறக் கார் ரோட்டோரமாய் நின்றிருந்த ஒரு பாறையின் மேல் ஆக்ரோஷமாய் மோதி, பக்கவாட்டில் தேய்த்துக் கொண்டுபோய் பக்கத்துப்பள்ளத்தில் யோசித்து யோசித்து உருண்டது. அந்தப் பெண்ணின் அலறல் தீனமாய் கேட்டது.

மார்த்தாண்டம் தன்னுடைய காரின் பிரேக்கைத் தன்னிச்சையாக அழுத்த அது ரோட்டோரமாய்க் கிரீச்சிட்டு நின்றது.

புவனேஷும், யோகேஷும் காரின் கதவுகளை இரண்டு பக்கமும் விருட் விருட்டென்று திறந்துகொண்டு கீழே இறங்கி விபத்து நடந்த இடத்தை நோக்கி ஓடினார்கள். மார்த்தாண்டமும் மகன்களைத் தொடர்ந்து ஓடினார்.

மூன்று பேரும் மலைப்பாதையின் சுற்றுச்சுவருக்கு அருகே வந்து எட்டிப் பார்த்தார்கள்.

அந்த நீலக்கார் ஒரு மரத்தின் அடித்தண்டில் எசகு பிசகாய் மாட்டிக்கொண்டு - சிரசாசனம் செய்துகொண்டிருந்தது. அந்தப் பெண் டிரைவிங் சீட்டில் ரத்தமாய்த் துடித்துக்கொண்டிருந்தாள்.

யோகேஷ் சுற்றுச் சுவரின்மேல் தாவி ஏறினான்.

மார்த்தாண்டம் கத்தினார்.

''டேய் யோகேஷ்... என்ன பண்ணப் போறே?''

''அந்தப் பெண்ணுக்கு உயிர் இருக்கு... காப்பாத்திடலாம்பா...''

**(தொடரும்)**

# கர்ணனா? கும்பகர்ணனா?

இலக்கியத்தில் சில சர்ச்சைகள் என்றுமே தீர்க்கப்பட முடியாதவையாகவும் காலம் காலமாய் விவாதிக்கப் பட்டு வருமளவிற்கு சொற்சுவை பொருட்சுவை நிறைந்தவையாகவும் அமைந்து விடுகின்றன. உதாரணமாக கம்பராமயணத்திலே வருகின்ற வாலி வதைப்படலாம். எத்துனை அறிஞ்ஞர்கள் எத்தனை நூற்றாண்டுகள் விவாதித்தாலும் இந்த சர்ச்சை ஒயப்போவதில்லை என்பது என்னவோ உண்மை



தான். அதே போன்ற ஓர் இலக்கிய சர்ச்சைதான் செஞ்சோற்று கடன் திர்ப்பதில் விஞ்சிநிற்பது மாகாபாரதத்தில் வருகின்ற கர்ணனா? அல்லது இராமாயணத்தில் வருகின்ற கும்பகர்ணனா? என்பதாகும்.

மகாபாரதத்தில் கர்ணன், செஞ்சோற்றுக்கடன் தீர்ப்பதற்காக தன் நண்பன் துரியோதனுக்காக பகைவர் பாண்டவருடன் போர் செய்து உயிர் விட்டவன் என்று புகழப்படுகிறான். இராமாயணத்தில் கும்பகர்ணன், செஞ்சோற்றுக்கடன் தீர்ப்பதற்காக தன் தமையனுக்காக பகைவர் இராமனாதியோருடன் போர் செய்து உயிர்விட்டவன் என்று புகழப்படுகிறான். இவ்விருவரில் யார் உண்மையில் சிறந்தவர்?

கர்ணன், துரியோதனன் பாண்டவருக்ககுத் துன்பமிழைத்தபோதெல்லாம் புத்திச் சொல்லித் தடுக்காது மேலும் பகை கொள்ளத் தூண்டிப் போர்நடக்கக் காரணமானவன். கும்பகர்ணன் இராவணன் சீதையைக் கவர்ந்ததைக் கேட்டு அது பிழையென்றுணர்ந்து, இராவணனுக்குப் புத்தி சொல்லி சீதையை சிறையிலிருந்து விடுவிக்குமாறு கேட்டு அது நடப்பதற்காகப் பாடுபட்டவன்.

கர்ணன் துரியோதனனின் பகைவராகிய பாண்டவருள் ஒருவனாகிய அருச்சுனனில் பொறாமை கொண்டு அவனை வெறுத்தவன். அதனோடு அருச்சுனனைக் கொல்வேன் என்று சபதமிட்டவன். அதனை,

**அனந்த ரம்பொ ரற்கு நீகொ லந்த ரமெ னக்கெனாத்**
**தனஞ்ச யன்செ யிர்த்தல் கண்டு தபனன் மைந்தன் மீளவும்**
**முனைந்த போரில் முடிது ணித்துன் முகசரோரு கத்தினால்**
**சினந்த ணிந்த ரங்க பூசை செய்வ னென்று சீறினான்.**

என்று வில்லிபாரத வாரணாவதச் சுருக்க அறுபத்தைந் தாம் பாவிற் காணலாம்.

எனவே, கர்ணன் போர் புரியச் செல்வதற்குச் செஞ்சோற்றுக்கடன் தீர்ப்பது மாத்திரம் காரணமன்று. தனது சொந்தக் காரணமும் இருந்ததென்பது தெளிவாகிறது. கும்பகர்ணன் தனது தமையனின் பகைவனான இராமனை மூவரில் முதல்வனாகக் கண்டவன். அவனில் மதிப்பும் அன்பும் கொண்டவன். இதனை அவன் இராவணன் விபீஷணன் என்பருக்குரைத்த புத்திமதிகளில் படிக்கக் காணலாம். கும்பகர்ணனுக்கு இராமனோடு போர் செய்வதற்கு சொந்தக்காரணம் எதுவும் இருக்கவில்லை என்பதும் கும்பகர்ணன் போர்புரியப் போவதற்குச் செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதொன்றே காரணமாக இருந்தது என்பதும் தெளிவாகின்றன.

கர்ணன், தன் வீரத்தின் மேலுள்ள நம்பக்கையால் போரில் தன் சபதப்படி அருச்சுனனைக் கொல்வேன் என்றும் உயிருடன் திரும்ப வருவேன் என்றும் நம்பியே போருக்குச் சென்றவன். கும்பகர்ணனோ அண்ணனுக்காக இறப்பேன் என்று சொல்லிப் போருக்குச் சென்றவன். இதனை அவன் இராவணனுக்குக் கூறிய பின்வரும் கூற்றால் அறிய முடியும்.

**வென்றுநான் வருவனென் றுரைக்கி லேன்விதி**
**நின்றது படர்படித் துந்த நின்றது**
**பொன்று பொன்றினாற் பொலன்கொள் சீதையை**
**நன்றென நாய விடுதி நன்றரோ.**

இங்ஙனம் கூறியவற்றால் செஞ்சோற்றுக்கடன் கழிப்பதில் கர்ணனைவிட கும்பகர்ணன் சிறந்தவன் என்பது தெளிவாகிறது.

கர்ணனும், கண்ணன் தனக்கெதிராகச் சூழ்ச்சிகள் செய்த காலத்தில் போரில் தானிறப்பான் என்பதை அறிந்திருந்தான். ஆயினும், அவன் அகங்காரத்தால் அதில் உறுதி கொண்டிருந்தானல்லன். அது அவன் நாகாஸ்திரத்தின் ஒருமுறைப் பிரயோகத்தில் அருச்சுனன் இறப்பான் என்று கருதியதாலும், தன் மகனை அருச்சுனன் கொன்ற போது அவனை ஒரம்பனாலே கொல்வேன் என்றெழுந்ததனாலும் அறிய முடியும். கும்பகர்ணனும் போரிடை இடையிடை அகங்கரித்துண்டெனில் அவன் இராமனைக் கொல்வேன் என்று அகங்கரியாமையும் குறிப்பிடத்தக்கது. ■

PUBLIC LIBRARY
JAFFNA



# தாய்மைக்குத் தண்டனை

உலகத்தின் எல்லா சந்தோஷத்தையும் தானே அனுபவிப்பதைபோல உணர்ந்தாள் ஆனந்தி. டாக்டர் சொன்னதைக் கேட்டதும் பூரித்துப் போனாள்.

எத்தனை நாள் தவம்! எத்தனை நாள் கண்ணீர்! எத்தனை நாள் வேதனை! இன்று முடிவுக்கு வந்தது; ஆனந்திக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது.

★★★

திருமணமாகி ஏழு வருடங்கள் ஆகியும் ஆனந்திக்கும், ரவிக்கும் குழந்தை இல்லை. குழந்தை இல்லை என்ற குறையை விட மலடி என்ற பட்டம் ஆனந்தியை வாட்டி வதைத்தது.

எத்தனை கனவுகளோடு புகுந்த வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தாளோ, அத்தனை கனவும் கண்ணீரில் கரைந்தன. கணவன் ரவி அன்பானவன் தான். எந்த கெட்ட பழக்கமும் இல்லாதவன் தான். ஆனால், குழந்தை இல்லாத குறையை எத்தனை நாள்தான் அவனும் ஜீரணிப்பது! ரவியும் சில நேரங்களில் ஆனந்தியிடம் முகம் சுளிக்க ஆரம்பித்தான். பார்க்காத டாக்டர் இல்லை; செய்யாத வைத்தியம் இல்லை. எல்லாமே வீண்!

எந்தப் பெண்ணும் அவ்வளவு சீக்கிரம் முடிவெடுக்க முடியாத விஷயம். எந்த பெண்ணும் தன் கணவனைப் பார்த்து கேட்கக்கூடாத வார்த்தை. ஆனந்தி ஒருமுறை தன் கணவனை கேட்டேவிட்டாள். ''நீங்க வேறு ஒரு கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன?'' ''பைத்தியமா உனக்கு... குழந்தை வேணுங்கிறது நம்முடைய ஆசைதான். அதுக்காக என்னுடைய மனிதாபிமானத்தை பலிகொடுக்க முடியாது'' என்றான்.

நல்லவன் என்று எப்போதெல்லாம் நினைக்கிறாளோ, அப்போதெல்லாம் அதற்கு எதிர்மறையாகத் தான் இருப்பான். அவன் கெட்டவன் என்று ஒதுங்கி நிற்கும்போது, அவனே நெருங்கி வந்து அவளை கெஞ்சலோடு கொஞ்சுவான். ஆனந்திக்கு வாழ்க்கையும் கேள்விக்குறி! கணவனும் கேள்விக்குறி!

நடந்ததெல்லாம் போகட்டும். இத்தனை நாள் கஷ்டங்களுக்கு எல்லாம் ஒரு முடிவு வந்தது!

★★★

உறவினர்கள் எல்லோரும் குழந்தையைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார்கள்.

''அவர் வரலியா'' என்றாள் ஆனந்தி.

''போன் பண்ணி விஷயத்தைச் சொல்லிட்டோம். முதலாளிகிட்ட கணக்கு ஏதோ கொடுத்துட்டு வரணுமாம். வர்றேன்னு சொன்னான்'' என்றார்கள். மனம் முழுக்க சந்தோஷம் நிரம்பி வழிய, கணவன் வருகைக்காக காத்திருந்தாள் ஆனந்தி! உறவினர்களின் பார்வை நேரம் முடியும் தருணத்தில் வந்தான் ரவி. அவனது நடையில் லேசான தள்ளாட்டம் இருந்ததை ஆனந்தி கவனித்தாள்.

''இது என்ன புதுப்பழக்கம்? முதல் முதல் நம்ம குழந்தையை பார்க்க இந்த கோலத்திலேயா வருவது?'' என்றாள். ''நல்லாருக்கானா நம்ம பையன்... ஏன் உங்க முகத்துல சந்தோஷத்தையே காணோம்...!'' என்றாள்.

''நீயும் கறுப்பு, நானும் கறுப்பு. குழந்தை மட்டும் வெள்ளையா இருக்கு... நம்ம வீட்ல உள்ள வங்க யாருடைய முகச்சாயலும் குழந்தைக்கு இல்ல... இதை நான் மட்டும் சொல்லல... வெளியில் பேசிக்கிறாங்க...'' அவன் குரலில் குடிகாரர்களுக்கே உரிய குழறல் இருந்தது. ஆனால், உளறல் இல்லை.

இத்தனை நாள் அனுபவித்த வேதனைகள் அத்தனையையும் மறுபடியும் ஒரே நொடியில் அனுபவித்த மாதிரி இருந்தது ஆனந்திக்கு!

நேற்று வரை அவள் சுமந்த துன்பம் வேறு! இனி அவள் சுமக்கப் போகிற துன்பம் வேறு!



சக்தி ஜூனியர் சூப்பர் ஸ்டார்
நிகழ்ச்சியில் போட்டியிட்டு இறுதிவரை
தனது திறமையை வெளிக்காட்டி
மகுடத்தைச் சூடிக்கொண்ட
தெஹிவளையைச் சேர்ந்த வைசாலினி
ஒளிஅரசிக்காக மனம் திறக்கிறார்.



தனது கனவை நனவாக்கும் வெற்றிப் பயணத்தை எவ்வாறு மேற்கொண்டார் என்பதை வைசாலினி விளக்குகையில்...

நான் மூன்று வயது முதல் சங்கீதம் கற்கின்றேன். பெரியளவில் நான் எதையும் எண்ணியதில்லை. எனது தாய், தந்தையரின் வேண்டுதலுக்கிணங்கத்தான் சக்தி ஜூனியர் சூப்பர் ஸ்டார் நிகழ்வில் இணைந்தேன். அவர்கள்தான் என்னை உற்சாகப்படுத்தினார்கள். இருந்தாலும் எனக்கு மனதளவில் ஒரு பயம் இருந்தது. நான் பாடசாலையில் பல மேடை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பரிசில்களும், கேடயங்களும் பெற்றுள்ளேன். அண்மையில், அகில இலங்கை மட்டத்தில் இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டியில் கலந்துகொண்டு தங்கப்பதக்கம் பெற்றுள்ளேன். சக்தி ஜூனியர் சூப்பர் ஸ்டார் நிகழ்வு உலகளாவிய ரீதியில் தொலைக்காட்சி மூலம் பார்க்கப்படுகின்ற நிகழ்வொன்று என்பதால் எனக்கு மனதளவில் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. இருந்தும் முதல் குரல் தேர்வு நடந்தது. அதனை முடித்து நான் வீட்டுக்கு வந்தேன். இறுதிமுடிவுகள் உடனே சொல்லவில்லை. நடுவர்கள் மறுநாள் தொலைபேசியூடாக அறிவித்தார்கள். எனக்கு நல்ல குரல் வளமுண்டு என்றும் நான் நன்றாகப் பாடுகின்றேன் என்றும் அதனால் நான் தெரிவுசெய்யப்பட்டுள்ளேன் என்றும் அவர்கள் கூறியதிலிருந்து எனக்குள் இருந்த பயம் விலகியது. எம்மாலும் முடியும் என்ற தன்னம்பிக்கையும் தோன்றியது.



ஒவ்வொரு சுற்றின் முடிவிலும் எனக்குச் சவாலாக வந்தவர்கள், என்னுடன் இறுதிவரை வந்த அந்த மூவரும்தான். அதில் என்னுடன் நெருங்கிய நண்பியாக இருந்தவள்தான் அம்ரித்தா. அவளும் சளைத்தவள் அல்ல. இறுதியாக வந்த எங்கள் நால்வரிலும் நாம் ஒவ்வொருவரும் ஒருவருக்கு ஒருவர் போட்டியாளர் என்ற வகையில், எமக்குப் பயிற்றுவித்த ஆசியர்களும் சரி, எம்முடன் இருந்த நடுவர்களும் சரி எம்மை வழிநடத்தினர். நான் இராமநாதன் இந்துக் கல்லூரியில் பயின்று வருகின்றேன். பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களும் எனது நண்பர்கள் அனைவரும் எனக்கு நல்ல உற்சாகத்தையும், உத்வேகத்தையும் ஊட்டினார்கள். அந்தவகையில், நான் எனது பாடசாலைக்கும் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், திரைப்படப் பாடல்கள் என்றால் சுசிலா அம்மாவுடைய பாடல்கள்தான் எனக்கு விருப்பமாக இருந்தன. நான் தேர்ந்தெடுத்த பாடல்கள்கூட எனது குரல் வளத்துக்கும், வெற்றிக்கும் உறுதுணையாக இருந்தமை என்றால் அது மிகையாகாது. நான் மூன்றாவது சுற்று முடிந்து இறுதி நான்கு பேருக்குள் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின் எனது ஒரே இலட்சியமாக இருந்தது நான் வெற்றிபெறு வேண்டும், எனது வெற்றி நிச்சயம் என்பதே.


இறுதி சுற்று வருவதற்கு இரண்டு நாட்களே உள்ள நிலையில் எனது மனதுக்குள் ஏதோ ஒருவித தயக்கம் ஏற்பட்டது. இருந்தும், வெற்றியும், தோல்வியும் சகஜம் என்றெண்ணிய நான் எதற்காகப் பயப்படவேண்டும் என்று கருதினேன். இறுதிநாள் எனது தாய் என்னை விடியும் பொழுது குரல் நேர்த்தியில்லை. உன்னால் பாடமுடியாது. உனக்கு கஷ்டம் என்று தானும் பயந்து என்னையும் பயத்துக்குள்ளாக்கிவிட்டார். எது எவ்வாறாயினும், நான் பாடுவேன் என்ற மன உறுதியுடன் இருந்தேன். மாலை வேளை மனம் சஞ்சலிக்கும் நேரம் போட்டி ஆரம்பமானது. குறுந் தகவல்கள் மூலமாக வெற்றிச் செய்திகள் வந்தவண்ணமே இருந்தன. இறுதியில் பாடிமுடித்தபோது அச்சத்தில் திளைத்தேன்.

நடுவர் மூலமாக வெற்றியைக் கூறுவதற்காக மேடைக்கு வந்த அந்த அறிவிப்பாளர் சிறிதுநேரம் தாமதமானதால் எனக்கோ என்மனம் என்னிடம் இல்லை என்று சற்றுத் தடுமாறினேன் - பேதலித்தேன். பின்னர் அறிவிப்பாளரோ வெற்றி மகுடத்துக்காக எனது பெயரை உச்சரித்தார். நான் சில நிமிடம் என்னையும் மீறி வெற்றிக் களிப்பில் - ஆனந்தத்தில் மூழ்கியிருந்தேன்.

எனவே, என்னுடன் இறுதிவரை வந்த நண்பர்கள் அனைவருக்கும் நான் கூறுவது எவருக்கும் எவரும் சளைத்தவர்கள் அல்லர். இன்று நான். நாளை நீங்கள். முயற்சி செய்யுங்கள்; நிச்சயம் வெல்வீர்கள்.

இத்துடன் நானும் முற்றுப்பெறவில்லை. எனது முயற்சி தொடரும். இன்னும் கற்கவேண்டியது நிறையவுள்ளது. நான் எதிர்காலத்தில் சிறந்த பாடகியாக வரவேண்டும் என்பதே எனது எதிர்காலக் கனவு. எனவே, அந்தப் பயணம் எனது வெற்றிப்பயணமாக இருக்கும் என்பது உறுதி. ■

# பெண்களை மிரட்டும் மறைமுக வில்லன்



புற்றுநோய், என்பது உயிரிழப்பை ஏற்படுத்தும் கொடிய நோய்களுள் ஒன்றாக இருக்கிறது. அதிலும் மார்பக புற்றுநோய் உலக அளவில் பெண்களை பாதிக்கும் முக்கிய நோயாக உருவெடுத்து இருக்கிறது என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. மேற்கத்திய நாடுகளில் காணப்படும் புற்று நோய்களில் மார்பக புற்றுநோய் முதலிடத்தையும், நோய்களால் ஏற்படும் இறப்புகளில் இரண்டாம் இடத்தையும் வகிக்கிறது. தற்போதைய வாழ்வியல் மாற்றங்களினால் நகர்ப்புறங்களில் மார்பக புற்றுநோய் முதலிடத்தை பிடித்துவிட்டது. இது மேலும் அதிகரிக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உலக சுகாதார அமைப்பின் புற்றுநோய் ஆய்வுக்கான சர்வதேச நிறுவனத்தின் தகவல்களின்படி உலகில் 2012 ஆம் ஆண்டில் மட்டும் 1.7 மில்லியன் பெண்கள் புதிதாக மார்பகப் புற்றுநோயால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளதுடன், அதே ஆண்டு 522,000 பேர் மார்பகப் புற்றுநோயால் இறந்தும் உள்ளனர். இந்நோயானது இலங்கையைப் பொறுத்தவரை பத்தாயிரம் பெண்களில் இரண்டு பெண்களுக்கு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மார்பகப்புற்று நோய்க்கான காரணங்கள் பல. அதில் மிக முக்கியமானது மரபணுவில் (BRCA 1 and BRCA 11) மாற்றங்கள் ஏற்படுவது. இந்த மாற்றங்கள் ஏற்படும் பெண்களுக்கு மார்பகப்புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு 10-30 மடங்கு அதிகரிக்கும். அதாவது, அவர்களுக்கு 85 சதவீதம் நோய் தாக்குவதற்கான அபாயம் உள்ளது. இந்த நோய்க்கான மற்ற காரணங்களில் முக்கியமானது ஹார்மோன்கள்.

நம் உடலில் அதிக அளவு ஈஸ்ட்ரோஜன் சுரப்பது நோய் வருவதற்கான வாய்ப்பை அதிகரிக்கிறது. குடும்பத்தில் தாய் அல்லது உடன் பிறந்த சகோதரிக்கு இந்த வியாதி இருந்தால் மற்ற சகோதரிகளுக்கு வருவதற்கான வாய்ப்பு அதிகம். மார்பகப் புற்றுநோயை பொறுத்தவரையில் அது பெருகி, பெண்களை மிரட்டத்தான் செய்கிறது. ஆனாலும் சத்தமில்லாமல் கொல்ல முயற்சிக்கும் இந்த நோயை பெண்களால் எளிதாக தவிர்க்கவும், தடுக்கவும் முடியும்.

பெண்களைப் பொறுத்தவரையில் மார்பகப் புற்றுநோய் இருபது வயதுக்குப் பின்னர்தான் ஏற்படுகிறது. எனினும், முப்பது வயது கடந்தவர்களிலேயே பரவலாக ஏற்படுகிறது. பெரும் எண்ணிக்கையானவர்கள் நாற்பது முதல் அறுபது வயதுக்கிடையிலேயே இனங்காணப்படுகின்றார்கள். மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே இனங்கண்டால் சிகிச்சையளிப்பதும், பூரணமாகக் குணமாக்குவதும் சாத்தியமாகின்றது. அத்துடன் மார்பை இழப்பதையும் தவிர்க்க முடிகின்றது.

**மார்பகப் புற்றுநோயை இனங்காணல் :**

மார்பகப் புற்றுநோயின் குணம் குறிகள் வெளியாகு முன்னரே இந்நோய் ஏற்படும் சாத்தியம் பற்றி அறிந்துகொள்வதற்கு மார்பகங்களைப் பெண்கள் சுயமாகவே பரிசோதிக்கவும், கிளினிக்குகளில் வைத்தியர்களிடம் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் மூலம் பரிசோதிக்கவுமான அறிவூட்டல் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இருபது வயதைக் கடந்த எல்லாப் பெண்களும் தமது மார்பைத் தாமே சுயமாகப் பரிசோதிக்கும் முறை பற்றி வருமுன் காப்பு சுகாதார சேவை அணியினர் பரவலாக நாடளாவிய ரீதியில் இதுபோன்ற அறிவுறுத்தல்களையும் - அறிவூட்டல்களையும் வழங்கி வருகின்றார்கள்.

பெண்கள் மாதம் ஒருமுறையாவது தமது மார்பைத் தாமே சுய பரிசோதனை செய்வதன் மூலம் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடு இருக்கின்றதா என்பதைக் கண்டறிய முடியும்.

இளம் பெண்கள் மாதவிலக்கு ஏற்பட்ட தினத்திலிருந்து ஒரு வாரத்திலும், மாதவிலக்கு நின்ற பெண்கள் மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட திகதியிலும் சுய பரிசோதனையை மேற்கொள்ள முடியும். இதற்கு ஒருசில நிமிடங்களே தேவைப்படும். இந்த சுயபரிசோதனை மூலம் மிகவும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய மார்பக புற்றுநோயை ஆரம்ப கட்டத்திலேயே இனம் காண உதவ முடியும். படுக்கையறையிலோ அன்றி குளியலறையிலோ தனிமையாக எதுவித சங்கடமும் இன்றி இப்பரிசோதனையை மேற்கொள்ள முடியும்.

**பரிசோதனையை மேற்கொள்ளும் முறை :**

மேலாடையை நீக்கிவிட்டுத் தனது மார்பில் தெரியும் ஏதாவது மாற்றங்களை அவதானிப்பது முதற்கட்டமாகும். இதனைக் கண்ணாடியின் முன்னின்றும் மேற்கொள்ளலாம். இருந்துகொண்டும், படுத்துக்கொண்டும் கூட மேற்கொள்ள முடியும். இதை ஒரு தடவை முறையாகச் செய்துவிட்டால் தொடர்ந்து மாதாமாதம் சிரமமின்றி மேற்கொள்ள முடியும். மார்பை அவதானிக்கும் முறையை Inspection என்கிறோம். அடுத்த கட்டம் கையால் பரிசோதித்தல். இதை Palpation என அழைக்கிறோம். மார்பையும், கழுத்துப் பகுதியிலிருந்து தோற்பட்டை வரையிலான பகுதியையும், கமக்கட்டையும் கையால் நீவி கட்டிகள் ஏதும் இருக்கின்றனவா எனப் பரிசோதிக்க வேண்டும்.

இப்பரிசோதனைகளை ஓர் ஒழுங்கில் மேற்கொள்ளவேண்டும். பார்வை மூலம் பரிசோதிக்கும்போது மார்பகத் தோலில் தெரியும் மாற்றங்கள், மார்பக நிறமாற்றங்கள், வடிவ மாற்றங்கள், உட்குவிந்த தசைப் பகுதிகள், ஏதாவது அழற்சிகள், புண்கள், முலைக் காம்புகளின் வடிவத்திலும் நிறத்திலுமான மாற்றங்கள், மார்பகக்கட்டிகள் முதலானவை பற்றி அவதானிக்க வேண்டும். இரு மார்புகளுக்கும் இடையில் புதிதாக ஏற்பட்டிருக்கும் மாறுபட்ட தன்மையையும் (ASYMMETRY) அவதானிக்க வேண்டும். மார்பக தோல் தடித்திருக்கிறதா என்பதையும், நிணநீர்க்கட்டிகள் தோன்றியுள்ளனவா (LYMPHNODES) என்பதையும் பார்க்கவேண்டும். மார்பைப் பரிசோதிக்கும்போது மூன்று நிலைகளில் பரிசோதிக்கவேண்டும். கைகள் இரண்டையும் பக்கவாட்டில் வைத்தபடியும், கைகள் இரண்டையும் இடுப்பில் வைத்தபடியும், கைகள் இரண்டையும் உயர்த்திய நிலையிலும் பரிசோதிக்க வேண்டும். மார்பை நீவிப் பரிசோதிக்கும்போது ஒரு கையை உயர்த்தியபடி அப்பக்க மார்பை மறுகையால் மெதுவாகப் பரிசோதிக்க வேண்டும். மார்பைச் சுற்றி வட்டமாக நீவியும், சுற்றுவட்டத்திலிருந்து மையத்தை நோக்கியும், குறுக்காகவும் கைவிரல்களை அசைத்து கட்டிகள் இருக்கின்றனவா எனப் பரிசோதிக்க வேண்டும்.

**சேர்க்க வேண்டிய உணவுகள்:**

தவறான உணவுப் பழக்கமும் புற்றுநோய்க்கு ஒரு காரணமாக இருக்கிறது. முறையான உணவுகளை உண்டால் புற்றுநோயை பெருமளவு தடுக்கலாம். தவிடு நீக்காத தானியங்கள், ஆடை நீக்கியபால், தயிர், பழங்கள், பச்சை காய்கறிகள், மீன், கீரை வகைகளை தினமும் உணவில் சேர்க்கவேண்டும்.

பெரும்பாலான காய்கறி, பழங்களில் பூச்சி மருந்துகள் கலந்திருக்கின்றன. அவை புற்றுநோயை உருவாக்கும் தன்மைகொண்டது. அதனால் இயற்கை முறையில் விளைவிக்கும் உணவுப்பொருட்களை உண்ணுங்கள். அதற்கு வாய்ப்பு இல்லாவிட்டால் வாங்கிய பழம், காய்கறிகளை அரை மணிநேரம் உப்பு கலந்த நீரில் முக்கிவைத்துவிட்டு, வேகமாக பாயும் குழாய்த் தண்ணீரில் நன்றாக கழுவிவிட்டு பயன்படுத்துங்கள்.

நார்சத்து நிறைந்த உணவுகளை அதிகம் உண்ணுங்கள். அவை எளிதாக ஜீரணமாகி, உடலில் இருக்கும் விஷத்தன்மைகளை வெளியேற்றும் சக்தி கொண்டதாக இருக்கிறது. ரத்தத்தில் இருக்கும் சர்க்கரை, கொழுப்பை கட்டுப்படுத்தும் சக்தியும் நார்சத்துக்கு இருக்கிறது.

இவ்வாறான முறையான உணவுகள் உண்பதோடு தினசரி உடற்பயிற்சிகளும் மேற்கொள்வதன் மூலம் புற்றுநோயின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

மார்பக புற்றுநோயை பற்றி பயம்கொள்ளாமல் சர்க்கரை நோயையும், கொழுப்பையும் கண்டறிய தாமாகவே முன்வந்து பரிசோதனை செய்வதுபோல், பெண்களே உங்கள் மார்பகங்கள் ஆரோக்கியமாக இருப்பதை தைரியமாக பரிசோதனை மூலம் உறுதி செய்யுங்கள். ■

# ஏக்கம்

ஊமையாய் தூங்கிடும்
உள்ளத்தினுள்ளே
உறங்கிடும் ஏக்கங்கள்
ஏராளம் ஏராளம்.

துயரமதில் தொலைகின்றபோது
திரும்பி ஒரு வார்த்தை வேண்டும்
இன்னலுக்குள் இடர்படும்போது
உடைத்திட ஒரு கரம்வேண்டும்.

என் சின்னச் சின்ன சந்தோஷங்களை
செவிகொடுத்து கேட்டிட வேண்டும்
மறு கண்ணின் மகிழ்வு கண்டு
பூரிப்பில் களித்திட வேண்டும்.

கண்களில் நீர் வழிந்தால்
கைதொட்டு துடைத்திட வேண்டும்
கலக்கம் எனை சூழும்போது
வார்த்தையால் தேற்றிடவேண்டும்.

மாறாத பாசம் கொண்டு
மறையாத நேசம் தந்து
தூணாகப் பற்றி நிற்க
துணையாக யாருமில்லை.

உள்ளத்தின் ஏக்கங்கள்
எரிமலையாய் கனத்திருக்க
ஏக்கமே வாழ்க்கையென்று
உணர்ந்தது நெஞ்சமிங்கு.

என்றோ ஒருநாள்
விடியும் என்றிருக்க
விடியாத பொழுதுகளாய்
தொடர்கிறது வாழ்வின் காலம்.





த
தமிழ் fm
முத்தமிழின் மூச்சுக்காற்று
செவிகளில் ரீங்காரமிடும் செந்தமிழின் நாதம்
நாடு முழுவதும்!
107.8 FM
யாழ்ப்பாணம்
99.7 FM
வன்னி
99.5 FM
236/1, Denzil Kobbekaduwa Mawatha,
Battaramulla.
+94 114 222 722
+94 114 222 624
www.tamilfm.lk
www.facebook.com/tamilfm.lk

# சூரிய பகவான்

பூமியில் வாழும் அனைத்து ஜீவராசிகளுக்குமான சக்தியின் ஆதாரமாகி சூரியனை வழிபடல் என்பது அதிகாலம் தொட்டு இருந்துவந்த மரபாகும். தினமும் காலையில் நீராடிய பின் கிழக்கு திசைநோக்கி சூரியநமஸ்காரம் செய்வது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. பிராணாயாமம் என்னும் மூச்சுப்பயிற்சி, அதனைத் தொடர்ந்து காயத்ரீ மந்திரம் ஜபித்தல் ஆகியவை, சூரியனின் சக்தியை அதன் கிரணங்களின் மூலம் பெறும் முறைகளாகும். காலை, மாலை வேளைகளில் சூரியனை நோக்கி இருகைகளாலும் நீரை எடுத்து அர்க்யம் விடுவதும் சூரிய தோஷத்திற்கு தகுந்த பரிகாரமாகும் என நம்பப்படுகிறது. ஆதித்ய ஹ்ருதயம் போன்ற சூரிய துதிகளைச் சொல்வதால் நம் உடலும், மனமும் சூரியசக்தியைக் கிரகித்துக் கொள்கின்றன.

வருடம் தோறும் நிகழ்கின்ற சூரிய கிரகணம் பற்றி பல புராணக் கதைகள் உண்டு. பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடைந்தபோது அதிலிருந்து அமிர்தம் வெளிப்பட்டது. அப்போது பகவான் விஷ்ணு ஓர் அழகான மோகினி வடிவம் தாங்கி அசுரர்களை மயக்கி, அந்த அமிர்தத்தை தேவர்களுக்கு மட்டும் வழங்கினார். ஆனால், சுவர்பானு என்ற அசுரன் மட்டும் தேவர்களைப்போல உருவம் தாங்கி வந்தான். இதை அறிந்த சூரியனும் சந்திரனும் அதை மோகினியிடம் தெரிவித்தனர். உடனே மோகினியாக இருந்த விஷ்ணு அசுரனின் தலையை கொய்து விட்டார். ஆனால், அதற்குள் அமிர்தம் கழுத்துவரை சென்று விட்டதால் அவன் சாகவில்லை. அவனது தலை ராகுவாகவும், உடல் கேதுவாகவும் மாறின. தங்களைக் காட்டிக்கொடுத்த சூரிய, சந்திரரைப் பழிவாங்கும் விதத்தில் அவ்வப்போது ராகுவும் கேதுவும் சூரியனையும் சந்திரனையும் விழுங்குகின்றனர். வானசாஸ்திரப்படி சூரியன், சந்திரன், பூமி ஒரே கோட்டில் வரும்போது, நடுவில் சந்திரனோ, பூமியோ வரும்போது சூரியசந்திர கிரகணங்கள் ஏற்படுகின்றன. கிரகணகாலத்தில் மக்கள் புனிதநதிகளில் நீராடி, பசுக்கள், பணம் மற்றும் தங்கத்தை தானமாக அளிக்க வேண்டும். கிரகணத்திற்கு மறுநாள் ஏழைகள் மற்றும் சாதுக்களுக்கு உணவளிக்க வேண்டும். கிரகணம் முடிந்தபின் வீடுகளைச் சுத்தம்



செய்ய வேண்டும். கிரகண காலத்தில் ஒருவன் சாப்பிடக்கூடாது. தொடங்கும் நேரத்தில் முன் உண்ட உணவு முழுவதும் ஜீரணமாயிருக்க வேண்டும். கிரகணம் விட்ட பிறகு சூரியனைப் பார்த்தபின்னரே உணவு உட்கொள்ள வேண்டும்.

கிரகணத்தின்போது கர்ப்பமான பெண்கள் சூரியனை பார்க்கவே கூடாது. அவர்கள் பார்த்தால் பிறக்கப்போகும் குழந்தைகள் செவிடு, ஊமை அல்லது குருடாகப்பிறக்கும். இதே காரணத்திற்காகவே கிரகணநேரத்தில் தாம்பத்ய உறவும் கொள்ளுதல் கூடாது. இந்தநேரத்தில் ஒருவர் தேள்கடிக்காமலோ மற்றும் காயத்திலிருந்து ரத்தம் வெளியேறாமல் பார்த்துக் கொள்ளுவது அவசியம். இவற்றால் பயங்கரவிளைவு ஏற்படும். கிரகணநேரத்தில் ஒரு மண்புழுகடித்தால் கூட விஷம் இருக்கும். கிரகண நேரத்தில் ஜபம், தியானம் செய்பவர்கள் பெரும் நன்மை அடைவார்கள். இவ்வேளையில் செய்யும் ஜபம், சங்கீர்த்தனம் (இறைவனைக் குறித்த பாடல்கள்) அல்லல்களையும், பீடைகளையும் அகற்றும். தேவர்களின் ஆசி கிடைக்கும். நமது சிற்றறிவினால் பிரபஞ்சத்தில் நிகழும் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியாது. எனவே, முனிவர்களின் வார்த்தைகளை நம்புங்கள். உலக வாழ்வு நிலையற்றது என்ற ஆன்மஞானமாகிய நிஜத்தை, அறியாமை மறைக்கிறது. எனினும், இந்தத்திரையாகிய கிரகணம் நிச்சயம் ஒருநாள் அகலும். நீங்கள் உங்கள் இயற்கையான புகழுடன் ஒளிர்வீர்கள். இதுதான் கிரகணத்தின் ஆன்மிகத் தத்துவமாகும்.

> பிரம்மா பல உலகங்களைப் படைத்தார். அவை அனைத்தும் இருள்மயமாக இருந்தது. அந்த இருளைப் போக்க "ஓம்" என்ற பேரொலியை உண்டாக்கினார் விஷ்ணு. அந்த ஒலியில் இருந்து பிரகாசமான ஒளியுடன் சூரியன் தோன்றினார்.

சூரியனின் பிறப்பு குறித்தும் இரு வேறு கதைகளைப் புராணம் சொல்கிறது. மகாவிஷ்ணு தமது உந்திக்கமலத்தில் இருந்து பிரம்மாவைப் படைத்தார். திருமாலின் ஆணைப்படி பிரம்மா பல உலகங்களைப் படைத்தார். அவை அனைத்தும் இருள்மயமாக இருந்தது. அந்த இருளைப் போக்க ''ஓம்'' என்ற பேரொலியை உண்டாக்கினார் விஷ்ணு. அந்த ஒலியில் இருந்து பிரகாசமான ஒளியுடன் சூரியன் தோன்றினார் என்பது ஒரு கதை. பிரம்மா தன்படைத்தல் தொழிலை விரிவுபடுத்த சப்தரிஷிகளை உண்டாக்கினார். அவர்களில் மரீசி என்பவரும் ஒருவர். அவருக்கு காசியபர் என்னும் மகன் பிறந்தார். அவருக்கு 13 மனைவிகள். அவர்களில் மூத்தமனைவியான அதிதி பெற்ற மகனே சூரியதேவன் என்பது மற்றொரு கதை. சூரிய புராணத்தில் இந்தக் கதைகள் சொல்லப்படுகின்றன. சூரியன் நவக்கிரகமண்டலத்தின் தலைவனாகத் திகழ்கிறார். இவர் ஏழு குதிரைகள் பூட்ட பட்ட, ஒற்றைச் சக்கர ரதத்தில் மேருமலையை வலம் வ கிறார். இவருக்குச் சாரதியாக அருணன் விளங்குகிற

சூரியனின் தேரோட்டியான அருணன், காஷ்யப கும், விநதைக்கும் பிறந்தவர். காஷ்யபரின் மற்றொ மனைவியான கத்துரு என்பவளுக்கு முதலில் குழந் கள் பிறந்தனர். இதனால், பொறாமை கொண்ட விந ஆத்திரத்தில் தான் அடைகாத்த முட்டையை பருவ வரும்முன் உடைக்கவே, ஒரு கால் இல்லாதவன அருணன் பிறந்தான். இதனால் ஆத்திரமடைந்த அவ ''என்னை கால் இல்லாமல் செய்த நீ, கத்ருவுக் அடிமையாகி, அதன்பிறகு என் சகோதரன் கருட மூலமாக சாபம் நீங்கப்பெறுவாயாக!'' என்று த தாய்க்கே சாபம் விடுத்தான். இவன் மீது இரக்க கொண்ட சூரியன், தனது சாரதியாக நியமித்து கொண்டான். ஒருசமயம் அருணன் இந்திரலோகத்தி நடந்த கொலுவை வேடிக்கை பார்க்க, பெண் வடிவி சென்றான். இந்தப் பெண்ணின் பேரழகைக் கண் இந்திரன், அவளோடு இணைந்ததால் வாலி பிறந்தா இதன் காரணமாக இவன் சூரியலோகத்திற்கு தேரோட் தாமதமாகச் சென்றான். அருணன் இந்திரலோகத்தி நடந்ததைச் சொல்லவே, அந்தப் பெண் உருவை பார்க்க வேண்டுமென சூரியன் கூறினார். அருண மீண்டும் பெண் வடிவம் எடுக்கவே, அவள் மீ ஆசைப்பட்ட சூரியன் அவளுடன் இணைந்ததா சுக்ரீவன் பிறந்தான். ராமாயணத்தின் இரு முக்கி கதாபாத்திரங்களுக்கு இந்த அருணனே காரணமாகிறா எனப்புராண இதிகாசங்கள் கூறுகின்றன.


# பெண்களை புரிந்து கொள்வதற்கான வழிகள்...

பெண்களை பூவோடு ஒப்பிட்டு கூறுவார்கள். ஏனெனில், அவர்கள் மலர் போன்ற மனதை உடையவர்கள். ஒரு பெண் தன்னை உண்மையாக விரும்பும் ஒரு மனிதரிடம் தன்னைப் பற்றி வெளிப்படுத்த தயங்க மாட்டாள். மேலும், அது பொய் எனத் தெரிந்தால். அதனை தாங்கவும் மாட்டாள். இன்றைய பெண்கள் நாகரீக வாழ்வு வாழ்ந்து வந்தாலும். ஒவ்வொரு பெண்ணும் பெண்ணிற்கே உரிய பண்புகளுடன்தான் காணப்படுகின்றாள்.

பெண்களை புரிந்துகொள்வது என்பது மிகவும் கடினமான காரியங்களில் ஒன்றாகும். நீங்கள் எவ்வளவு காலம்தான் அவர்களோடு சேர்ந்து வாழ்ந்துவந்தாலும். பெண்களை முழுவதுமாக புரிந்து கொள்வது என்பது கடினமான ஒன்றாகும். நீங்கள் விரும்பும் பெண்ணை மதிப்பிடுவதற்கு உங்கள் வாழ்நாள் முழுவதும் தேவைப்படலாம். பெண்களை முழுவதும் புரிந்துகொண்டு. நமது உறவை வலுப்படுத்த பல வழிகள் உள்ளன.

நீங்கள் விரும்பும் பெண்ணை புரிந்துகொள்ள அவரோடு அதிகமாக பேசவேண்டும். இது ஒரு விட்டுகொடுத்தல் முறையாகும். அதனால் நீங்கள் அந்தப் பெண்ணிடம் உண்மையாகவும். வெளிப்படையாகவும் இருந்தால் அவர்கள் உங்களை முழுமையாக நம்புவார்கள். உங்கள் அன்பையும். உறுதியையும் அவர்களுக்கு அளித்தால், உங்களிடம் நம்பிக்கை ஏற்பட்டு தன்னை பற்றி சொல்ல முன் வருவார்கள்.

நீங்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும் அல்லது எவ்வளவு நன்றாக முயற்சி செய்திருந்தாலும், அவர்களிடம் பொறுமையை கடைப்பிடிப்பது தான் மிகவும் முக்கியமானதாகும். ஒரே இரவிலோ அல்லது ஒரே வருடத்திலோ நடக்கக் கூடியது அல்ல.



பத்தாண்டுகள் பிறகு அவர்களிடம் ஏதேனும் புதிதாக கண்டறிந்தால், அதற்காக ஆச்சரியப்பட வேண்டாம். அவர்களிடம் கனிவாகவும், அன்புடனும் புரிதலுடனும் இருப்பதுதான் முக்கியமாகும். ஒரு பெண்ணிடம் வெளிப்படையாக அணுகுவதே நல்லது. இதனால், அவர்களிடம் சிறு காரியங்களுக்கு எதிர்விளைவுறச் செய்து அவர்களை வருத்தப்படச் செய்யாதீர்கள்.

### பொறுமை

ஒரு பெண்ணை புரிந்துகொள்ள சில காலம் தேவைப்படும். ஒரு பெண்ணை நன்றாக புரிந்துகொள்ள தேவைப்படுவது பொறுமைதான். சில நாட்களிலேயே அல்லது மாதங்களிலேயே புரிந்துகொள்ள எதிர்பார்க்கக்கூடாது. விதையை விதைத்து பூவிற்காக காத்திருங்கள்.

### அன்பு

ஒரு பெண்ணை நன்றாக புரிந்துகொள்ள அன்புடன் அவரை எதிர்கொள்ள வேண்டும். தன்னை மிகவும் விரும்பும் ஒருவரிடம் எந்த ஒரு பெண்ணும் தன் எண்ணங்களை முழுவதுமாக வெளிப்படுத்துவாள். நீங்கள் அன்புடன் எதிர்கொண்டால் தன்னை புரிந்துகொள்ள அனுமதி அளிப்பாள்.

### அன்பும் அக்கறையும்

நீங்கள் அன்புடன் அவர்களை எதிர்கொண்டாலும் உடனே தன்னை வெளிப்படுத்த தயங்குவார்கள். தன்னை அன்புடனும் அக்கறையுடனும் கையாளும் ஒருவரிடம் மெல்ல அவர்களின் எண்ணத்தையும் உணர்ச்சியையும் வெளிப்படுத்துவார்கள்.

### பேசுதல்

பெண்கள் அதிகம் பேச விரும்புவார்கள். ஒரு பெண்ணை புரிந்துகொள்வதற்கு அவருடன் நன்கு பேசத் தொடங்க வேண்டும். இது ஒரு பெண்ணை புரிந்துகொள்வதற்கான முதல் படியாகும். நீங்கள் அவர்களிடம் வெளிப்படையாக பேசுவதால் அவர்களை சரியாக மதிப்பிட முடியும்.

### முதல் படி

ஒரு பெண்ணை புரிந்துகொள்ள இந்த முதல் படியை தொடங்கவேண்டும். அவர்களை வெளிப்படையுடனும் நேர்மையுடனும் அணுகவேண்டும். இந்த முதல் படியான பகிர்தல் மூலம் அவர்கள் தன்னை பற்றி நீங்கள் அறிந்துகொள்ள அனுமதி அளித்து உங்களைப் பற்றி அவர்கள் புரிந்துகொள்ள விரும்புவார்கள்.

### வேறுபாடு

ஒவ்வொரு பெண்ணும் அவர்களது வழியில் வேறுப்பட்டே இருப்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். ஒரு சிலர் வெளிப்படையாகவும் ஒரு சிலர் நாணத்துடனும் இருப்பார்கள். அவர்களை ஒப்பிட்டு பார்க்காமல் எளிதாக அவர்களை புரிந்துகொள்ள முற்படுங்கள்.

### கேள்வி எழுப்புங்கள்

பெண்கள் அதிகம் பேச ஆசைப்படுவார்கள். ஏதாவது கேள்வி கேட்டு அவர்களை பேச அனுமதி அளியுங்கள். இவ்வாறு அவர்களை பேசவிட்டு உங்களின் சரியான கேள்விகள் மூலம் அவர்களை புரிந்துகொள்ளுங்கள்.

### அவர்களது கடந்த காலம்

ஏன் சில பெண்கள் ஒரு சில நேரம் சரியாக பழகாமல் போவதற்கும் வெளிப்படையாக பகிராமல் இருப்பதற்கும் காரணம் இருக்கக்கூடும். அதனால், அவர்களை புரிந்துகொள்ள அவர்களின் கடந்தகாலத்தை பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். அந்த கடந்தகால நிகழ்வுகளால்தான் அவள் இப்படி இருக்கிறாள் என்பது தெரியவரும்.

### ஒன்றாக சேர்ந்து நேரத்தை செலவழிப்பது

வழக்கமாக அவர்களை சந்திப்பது மற்றும் அவர்களுடன் சேர்ந்து சேர்ந்தே இருப்பது போன்றவற்றை ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களோடு நீண்ட நேரம் செலவிடுவதால் அவர்களை பற்றி புரிந்துகொள்ள முடியும்.

### உறுதியளிப்பு

நீங்கள் விரும்பும் பெண்ணிடம் உங்கள் உறவு உறுதியானதாக இருக்கவேண்டும். பெண்கள் பொதுவாக உறுதியான உறவின்போதுதான் தன்னை பற்றி பகிர்ந்துகொள்ளவும் வெளிப்படுத்தம் செய்வார்கள். நீங்கள் அவர்களுக்காக எதையும் செய்வீர்கள் என்ற உத்திரவாதத்தின் மூலம்தான் அவர்களை நன்றாக புரிந்துகொள்ள முடியும். ■

அப்துல்லா பாத்திமா நுஸ்கியா, உயன்வத்த தேவனகல.



# ஓர் அபலையின் வாழ்க்கை

சந்திரன் உச்சத்தில் வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருக்க - நட்சத்திரங்கள் கண்சிமிட்ட - ஆங்காங்கே சில ஆந்தைகளுடைய அசட்டுச் சத்தமும் தூரத்தில் நாய்களின் ஆக்கிரமிப்பு ஓசைகளும் கேட்டுக்கொண்டிருக்கும் அவ் வேளை, தேவனின் வீட்டில் அனைத்தையும் குலைக்கும் விதமான முனங்கல் சத்தம் கேட்கின்றது.

''என்னங்க நம்ம ரேணு படிப்பு படிப்புன்னு இருக்குதே. காலா காலத்துல கலியாணம் செய்து வைக்க எந்த முயற்சியும் இல்லாம் இருக்கிறீர் கள் வயசும் கூடிக்கொண்டே போகுது'' என்று ரேணுவுடைய தாய் மகளின் திருமணப் பேச்சை எடுக்க, ''அவளின்ட இஷ்டப்படி படிக்கட்டும். பிறகு பார்ப்போம்'' என்றார் தேவன்.

காலங்கள் சில உருண்டோடின. ரேணுவும் தனது மேற்படிப்பை நிறைவுசெய்துவிட்டாள். இதைக்கேட்டு அவளைத் தேடி ஒரு வரன் வந்தது. ரேணு தனது மனக்கண்ணில் வைத் திருந்தவனைப் போன்ற தோற்றமும் அழகான உடலமைப்பும் பார்ப்பவர்களின் உள்ளங் களைப் பறித்தெடுக்கும் பார்வை எல்லாம் சேர்த்து இரவில் பூத்த ஒளியைப் போன்று இருந்தான்.

திருமணப் பேச்சுகள் அனைத்தும் ஆரம்பத் தில் நன்றாகச் சென்றுகொண்டிருந்தன. பேச்சின் இடையில் மாப்பிள்ளையின் தாய் போட்டாள் ஒரு குண்டு. ''நீங்க மகளுக்கு என்ன செய்வீங்க. என்ட மகன் இப்ப இன்ஜினியரா இருக் கின்றான்'' என்றாள். ஆனால், என்ன செய்வது ரேணுவின் குடும்பம் ஓர் ஏழைக் குடும்பம். இருப்பதோ அந்த ஓட்டைக் குடிசையும் அதற்கு முன்னால் உள்ள சிறு முற்றமும்தான். நாளை முடிவை சொல்வதாக அனுப்பி வைத்தார் தேவன்.

''அம்மா எனக்கு சீதனம் கேக்காத மாப் பிள்ளதான் வேணும்'' என்று அடம்பிடித்தாள் ரேணு. ''நீ சும்மா இரு பிள்ளை. இதப்பார்த்தா பொம் புளைப் பிள்ளைகளை வீட்லதான் வெச்சிருக் கனும்'' என்கிறாள் தாய். தாய் எவ்வளவோ கூறிய போதும் அவள் தனது கொள்கையில் உறுதியாய் இருந்தாள். சில வாரம் கழிந்திருக்கும். ஊர்த்தலைவர் செட்டியார் தேவனைச் சந்தித்து, ''உனக்கு மகள் ஒன்னு இருக்கிறாள்தானே. அவளது மேற்படிப்பு கடந்த வாரம் தானே முடிச்சுது'' என விசாரிக்க, ''ஓம்'' என்று தலை அசைத்தான் தேவன்.

''என் மகன் ஒருத்தன் வெளிநாட்டுல இருக்கான். அவனுக்கு உன்னுடைய மகளை

முடிச்சு வெக்கலாமுன்னு இருக்கேன்'' என்று கூறினார். இதைக்கேட்ட தேவன் மிக்க ஆனந்தமடைந்து, ''எப்போது வீட்டிற்கு வருவீர்கள்'' என்றெல்லாம் கேட்டுக்கொண்டார். அவரும் இந்தப் புதன்கிழமை மகன் வருவதாகவும், வெள்ளிக்கிழமை அவர்கள் வீட்டிற்கு வருவதாகவும் கூறினார்.

வெள்ளிக்கிழமை காலை சூரியன் கைகளை நீட்டி எழுந்துக்கொண்டிருக்கும் பொன்னான பொழுதினில் தேவன் தனது மகளுக்கு நல்வாழ்வு ஒன்று கிடைக்கப் போவதையிட்டு கடவுளுக்கு நன்றி கூறிய வண்ணம், அதை நினைத்து நினைத்து ஆனந்த வெள்ளத்தில் ஜொலித்தார். அவர் மட்டுமா, அந்தக் குடும்பமே ஆனந்தமாக இருந்தது. ரேணுவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

காலை 10 மணியளவில் சூரியன் தனது ஒளிக்கதிர்களைத் தேவனின் வீட்டின் பக்கம் வீசத்துவங்கியபோது வீட்டு முற்றத்தில் புழுதியைக் கிளப்பிக்கொண்டு ஒரு கார் வந்து நின்றது. உடனே தேவன் ஓடிச்சென்று அவர்களை வரவேற்றார். புதிய மாப்பிள்ளை கோட்சூட் அணிந்து காலுக்கு வெளிநாட்டு ஷூஸ்ஸும் போட்டிருந்தார்.

வரவேற்பதற்காகக் கடன்பட்டு வாங்கிய சிற்றுண்டிகளைத் தட்டுகளின் மேல்வைத்து ரேணுவின் தாய் ராதிகா கொண்டுவந்து அவர்களின் முன்னால் வைத்தாள். கேக் ஒரு துண்டை திண்டுக்கொண்டே பேச்சைத் துவக்கினார் செட்டியார். தேவன், செட்டியாருடன் பேசும்போது குறுகிக்குறுகிப் பேசினார். இதைக்கண்ட ரேணுவுக்கு தனது அப்பா இவ்வாறு பேசுவது பிடிக்கவே இல்லை. என்றாலும் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் இருந்தாள்.

வெளிநாட்டு மாப்பிள்ளை இலேசாகப் பேச்சை ஆரம்பித்தான். இங்கேயே பெரியதொரு சுப்பர்மார்க்கட் போடப் போவதாகவும், வெளிநாட்டுக்கு இனி போகப்போவதில்லை என்பதாகவும் கூறினான். ''அதுவும் நல்லதுதான். நானும் என் மகளை விரும்பிய நேரம் வந்து பார்க்கலாம்'' என்றான் தேவன். தொடர்ந்தும் வெளிநாட்டு மாப்பிள்ளை பேசினார். ''நானும் உங்க மகளும் வாழ நல்ல வீடொன்று தேவை. அது எனக்கில்ல. உங்க மகளுக்குதான். வேற கார் ஒன்றும் தேவை. ஏன்னா நானும் உங்க மகளும் நிறைய இடத்துக்குப் போய் பார்க்கவேணும்தானே அதுக்குதான். அடுத்து பெண்ணுக்கு நகைநட்டெல்லாம் எவ்வளவு போடுவீங்க'' என்று பேசி வாயை மூட முன்னே ரேணு, ''அப்பா எனக்கு இந்தக் கல்யாணம் வேணாம். என்னுடைய பெண்மையை நான் விலைக்கு விற்க விரும்பவில்லை'' என்று அவர்களின் முன்னால் கத்தினாள்.

இதைக் கேட்ட ஊர்த் தலைவரின் முகம் உடனே மாறியது. தனது மனைவியையும், பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டுப்போக முற்பட்டார். அவரை தேவன் எவ்வளவோ தடுத்தும் தகாத வார்த்தைகளைக் கூறி பெண்ணையா பெத்தாய்? என்று கூறிவிட்டு வெளியேறிச் சென்றார். இதைக் கண்டதேவன் மனமுடைந்து கதிரையில் அமர்ந்தான். குடும்பமே அல்லோலகல்லோலப்பட்டது.

ராதிகாவும் அடுத்த வீட்டு கவிதாவும் ஓய்வுநேரங்களில் பேசிக்கொண்டிருப்பது வழமை. ஒருநாள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போது மகளின் அவலநிலையை ராதிகா கூறி கண்ணீர் வடித்தாள். ''உன் தம்பியின் மகன் ஒருத்தன் இருக்கானே பேசாம அவனுக்கு முடிச்சு வைச்சுடு'' என்று கவிதா அக்கா அறிவுரை கூற ராதிகாவின் முகம் கறுத்தது.

''என்மகள் மேல் படிப்பு படிச்சிருக்கு. அவனோ ஆட்டோ ஓட்டுறவன். போதாதற்கு குடிக்கிறான். மலைக்கும் மடுவுக்கும் முடிச்சு போட முடியுமா?'' என்று கூறும் போதே அவளின் தொண்டை அடைத்துக்கொண்டது. கவலை விம்மலுடன் கண்ணீராய் வெளிப்பட்டது. கவிதா அக்கா அவளை ஆறுதல் படுத்திவிட்டு சில விடயங்களைப் பேசிவிட்டு விடைபெற்றுச் சென்றாள்.

ராதிகாவின் உள்ளம் தினமும் தனது மகளை நினைத்து கண்ணீர் வடித்தது. தனது கணவன் வரும் வரை காத்திருந்த ராதிகாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. 8.00 மணிக்கு முன்வரும் தேவன் இரவு 10.00 மணியாகியும் வரவில்லை. ராதிகா திகைத்துப்போய் இருக்கும் போதே தேவன் வந்தான். தனது 33 வயதான மகளை திருமணம் செய்ய தர்சன் ஆசிரியர் விரும்புவதாகவும் அதை பற்றித்தான் இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்ததாகவும் கூறினான். சீதனம் இல்லாமல் தர்சன் சேர் ரேணுவை திருமணம் முடிப்பதாக ஒப்புக்கொண்டவுடனேயே திருமணப் பேச்சுகள் ஆரம்பமாகின. திருமண நிச்சயதார்த்தங்களும் நடைபெற்று முடிந்தன. ரேணுவுக்கும் அவளது குடும்பத்துக்கும் சந்தோஷம் பொங்கியது.

திருமணத்திற்கு ஒரு கிழமை இருக்கும்போது தர்சன் சேர் தனக்கும் ரேணுவிற்குமான ஆடைகளை


எடுத்துவரச் சென்றவர் திரும்பி வருவதற்குப் பதிலாக ஒரு சோகமான செய்தியே வந்தது. அதுதான் தர்சன் சேர் சென்ற மோட்டார் சைக்கிள் லொறியுடன் மோதி சம்பவ இடத்திலேயே தர்சன் சேர் இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடனேயே திருமணம் தடைபட்டது மட்டுமல்ல, ஊரில் ரேணு ஒரு சாபக்கேடு. அவளை திருமணம் முடிக்கச் சென்றால் மரணம்தான் கிட்டும் என்ற செய்தியும் பரவலாகப் பரவியது. இதனைக் கேட்ட ரேணுவின் மனம் உடைந்தது. வாழ்க்கையை வெறுத்து மூலையில் குந்தினாள். பல மாதங்கள் கழிந்தன என்றாலும் பெற்றோரால் மகளை பழைய நிலைக்குக் கொண்டுவர முடியவில்லை.

தேவனின் கடனும் ஒருபுறம் அதிகரித்துச் சென்றது. ராதிகா என்ன செய்யலாம்? யாரை இவளுக்கு மணஞ்செய்து கொடுக்கலாம்? என்று தனது மனதிடம் கேள்விக் கேட்ட வண்ணம் இருக்கும்போதுதான் அன்று, ''உன் மகளை உன் தம்பிட மகனுக்குக் கட்டிக் கொடுக்கலாமே'' என்று கவிதா அக்கா கூறியது ஞாபகம் வந்தது. இதை தேவனிடமும் ரேணுவிடமும் கூறினாள். ரேணு வேறு வழியின்றி தனது தாய் தந்தைக்காக ஒப்புக்கொண்டாள்.

விடியற்காலை ஆறு மணியிருக்கும் வசந்தனின் வீட்டுத் தொலைபேசி அலறியது. எடுத்துப் பேசியபோதுதான் தெரிந்தது தனது அக்கா ராதிகா என்று. தனது தம்பியிடம் தனது எண்ணத்தைக் கூறியபோது அவனது உள்ளம் ஆனந்தமடைந்தது. வழியே வரும் சீதேவியை விடக்கூடாது என்று எண்ணினாலும் பணிந்து போக கர்வம் இடம்பெறவில்லை. எனவே, மகனிடம் பேசிவிட்டுச் சொல்வதாக வைத்தான். இரவு வீடு வந்த ரவி, சாப்பிட்டுக் கொண்டிருக்கும் நேரம் மாலதியும், வசந்தனும் விடயத்தைக் காதில் போட்டனர். தான் இவ்வளவு காலமாக நினைத்துக்கொண்டிருந்ததை அவர்களாகவே முடிவுபண்ணியதை நினைத்துக் துள்ளிக் குதித்தான்.

வசந்தன் இந்தச் சந்தோஷத்தை உடனே தனது அக்காவுக்குச் சொன்னான். ரவி, ரேணு இருவருடைய திருமணமும் எளிமையான முறையில் நடந்து முடிந்தது. மணமகள் வீடு போக அனைவரும் ஆயத்தமானபோதுதான் தெரிந்தது தேவனை காணவில்லை என்று. பக்கத்திலிருந்தவர்களிடம் தனது அப்பாவை அழைத்துவருமாறு ரேணு கூறவும் அனைவரும் தேவனைத் தேடினார்கள். அப்போதுதான் தேவன் தனது கூடுதலான கடன் தொல்லையாலும் மகளுக்கு விருப்பமில்லாத திருமணத்தை நடத்தியதாலும் பின்புறமுள்ள ரூமில் கடிதமொன்றை எழுதிவிட்டு நஞ்சு குடித்து மரணத்தைத் தழுவியிருந்தார்.

ரேணுவால் அதிர்ச்சியைத் தாங்கமுடியவில்லை. இந்நிலை கண்ட ராதிகாவோ திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் மரணத்தை வரவேற்றாள். யாருக்காக தனது கனவை உடைத்து திருமணம் செய்துகொண்டாளோ அவர்களது திருமண நாளிலே இழந்ததை நினைத்து தினம் தினம் கண்ணீர் வடிக்கின்றாள் அந்த அப்பாவிப் பெண்.





# உண்மையில் திருவள்ளுவர் வாழ்ந்தாரா?



தொய்வப் புலவர் திருவள்ளுவரைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்பு எழுத சான்றுகள் எதுவுமே நம்மிடமில்லை. அவர் மதுரையில் பிறந்தார் என்று சிலரும், சென்னையில் உள்ள மயிலாப்பூரில் பிறந்தார் என்று சிலரும் சொல்கின்றனர். அவர் ஆதி - பகவன் என்ற பெற்றோருக்குப் பிறந்ததாகவும் சிலர் சொல்கின்றனர்.

அவர் கி.மு.31 ஆம் ஆண்டு பிறந்திருக்கிறார். திருவள்ளுவர் பிறந்து இந்த வருடத்துடன் 2045 ஆண்டுகள் ஆகின்றன. தமிழ் மக்கள் அவர் பிறந்த ஆண்டை ஆதாரமாகக் கொண்டு தி.மு, தி.பி. என்று காலத்தைப் பிரித்து பயன்படுத்துகிறார்கள்.

வள்ளுவர் ஒரு கிறித்தவர், அவர் ஒரு சமண மதத்தவர், அவர் பௌத்தர் என்றெல்லாம் அவரின் குறட்பாக்களில் இருக்கின்ற கருத்துக்களை வைத்துக் கொண்டு எல்லோருமே சொந்தம் கொண்டாடுகிறார்கள். திருக்குறளில் உள்ள கருத்துக்கள் அனைவருக்கும் பொருத்தமானதாகவும் அமைந்துள்ளது. அதனால்தான் திருக்குறளை உலகப் பொதுமறை என்று சொல்லப்படுகிறது.

பொன்னும் பொருளும் நிறைந்த மூட்டை ஒன்று கேட்பாரற்று இருந்தால், எல்லோருமே அதை உரிமை கொண்டாட நினைப்பார்கள். வள்ளுவரின் தோற்றமும் கூட கற்பனையாக வரையப்பட்டது தான். அவருக்கு வாசுகி என்ற மனைவி இருந்ததாகச் சொல்வதற்கும் சான்றுகளே இல்லை.

மதுரையிலே தமிழ் அரசர்கள் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்தனர். மூன்று சங்கங்கள் இருந்தன. கடைசியாக இருந்த சங்கம் கி.மு. 300க்கும் கி.பி. 250க்கும் இடைப்பட்டது. அப்போதுதான் திருக்குறள், புலவர்கள் நடுவிலே பாடி அறிமுகம் செய்யப்பட்டது.

மதுரையை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற பாண்டிய மன்னன் அன்று ஆட்சி புரிந்துள்ளான். கிடைக்கின்ற செய்திகளையெல்லாம் இணைத்துப் பார்க்கின்றபோது,

வள்ளுவர் என்ற மனிதர் இருந்தார் என்பதும், அவர் எழுதிய நூலே திருக்குறள் என்பதும் உறுதியாகிறது.

ஆனால், அவரைப் பற்றிய அத்தனை செய்திகளும் அழிக்கப்பட்டுள்ளன. வள்ளுவர் காலத்துக்கு முன்பு இருந்த புலவர்களைப் பற்றியெல்லாம் சான்றுகள் இருக்கிறபோது, இவரைப்பற்றி எதுவும் இல்லாமல் இருப்பது வியப்புதான்.

அவர் கற்பனையான கடவுள்கள் எவரையும் ஏற்கவில்லை. சாதி பிரிவினையையும், விலங்குகளைப் பலியிட்டு நடத்தும் வேள்விகளையும் எதிர்த்தவர். பொய் பேசாமல், களவு செய்யாமல், நாகரிகமுடன் வாழ எண்ணினார். அனைவரையும் கற்கும்படி வலியுறுத்தினார்.

இயற்கையை நேசித்தார். குடும்ப வாழ்க்கையை முறையாகவும் பண்புடனும் பயன்படுத்தும்படி கூறினார். ஆட்சி செய்கிறவர்கள் மனித நேயத்துடன் இருக்க வேண்டும் என்று விரும்பினார். இக்கருத்துக்களே அவர் எழுதிய 1330 குறட்பாக்களில் உள்ளன.

**அவர் கற்பனையான கடவுள்கள் எவரையும் ஏற்கவில்லை. சாதி பிரிவினையையும், விலங்குகளை பலியிட்டு நடத்தும் வேள்விகளையும் எதிர்த்தவர்.**

திருவள்ளுவர், வள்ளுவன் என்ற பெயர்களில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே சில உட்பிரிவுகள் இருக்கின்றன. இவர் தொன்மையான தமிழ்க் குடியைச் சேர்ந்தவர் என்ற கருத்து அன்றைய புலவர்களுக்கும் இருந்துள்ளது என்பதை காலம் காலமாய் வழங்கி வரும் சில கதைகளும், கி.பி.1050இல் எழுதப்பட்ட ''திருவள்ளுவ மாலை'' என்ற நூலில் உள்ள சில பாடல்களும் தெரிவிக்கின்றன.

அக்கதைகளில் ஒன்று இதுதான். ஆனால், வள்ளுவருக்கும் பிற புலவர்களுக்கும் இடையே ஏதோ ஒரு வகையான மோதல் நடந்துள்ளது என்பதை மட்டும் புரிந்துகொள்ள முடிகிறது.

சாதி, மதக் கருத்துக்களை எதிர்த்து பல குறட்பாக்களை எழுதியுள்ளார் திருவள்ளுவர். அதை சுட்டிக்காட்டும் வகையிலே ''திருவள்ளுவ மாலை''யில் சில பாடல்கள் உள்ளன. அதில் ஒரு பாடல்:

**ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் நான்மறையைப்**
**போற்றி உரைத்து ஏட்டின் புறத்தில் எழுதார் -**
**ஏட்டை எழுதி**
**வல்லுநரும் அல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்**
**சொல்லிடினும் ஆற்றல் சோர்வின்று**

சாதி, மத சூழ்ச்சிகளை யாரும் அறிந்து தெளிவு பெறக்கூடாது என்று ரிக், யசூர், சாம, அதர்வணம் என்கிற நூல்களை ஆரியர்கள் மறைத்துவிட்டார்கள். ஆனால் வள்ளுவரோ அந்த நூல்களுக்கு எதிராக மூன்று வகையான வாழ்வின் நெறிகளைச் சொல்லும் திருக்குறளை எழுதினார் என்பதுதான் இப்பாடலின் பொருள். இக்கருத்துக்களையும், திருக்குறளையும் படித்து புரிந்துகொள்ளும்போது, திருவள்ளுவர் சமூக சீர்திருத்த அறிஞராக மனதில் அழுத்தமாகப் பதிந்துவிடுவார்.

உலக மக்களின் முன் தமிழர்கள் பெருமிதமாக நெஞ்சம் நிமிர நிற்கும்படி செய்த மாமனிதர் திருவள்ளுவர். அறிவியல் கண்டுபிடிப்புகளாலோ, அரசாண்டதாலோ அவர் அப்பெருமையை உருவாக்கித் தரவில்லை. தன் அறிவாலும், சிந்தனையாலும் உருவாக்கித் தந்திருக்கிறார். அவர் எழுதிய திருக்குறள் அப்பெருமையை தமிழர்களுக்கு வழங்கியிருக்கிறது. இதனாலேயே வள்ளுவர் தன்னை உலகினிற்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு என்றார் பாரதியார்.

■

# BOOKVIN PVT LTD

IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS

Bookvin

# 126/10A, JAYASOORITA MAWATHA, HAPUGODA, KANDANA,

(m) +9471 444 1234, (E) bookvinSrilanka@gmail.com (e) info@bookvin.com, www.bookvin.com




நலம் வரம் கிழக்கு தவம் ப்ராடிஜி

வாழ்க்கை வரலாறு, அரசியல், வரலாறு, அறிவியல், இலக்கியம், தன்னம்பிக்கை,பொதுஅறிவு, உடல்நலம்

எமது புத்தகங்களை விற்பனை செய்ய ஆர்வமுள்ள முகவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
சிறியோர் முதல் பெரியோர் வரை படிக்க கூடிய பல தலைப்புகளில் புத்தகங்கள் விற்பனைக்கு...

கிழக்கு பதிப்பகம்

அறிவுத் தேடலுக்கு...

## எமது புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்:

| | |
|---|---|
| Jaffna | : Nelliyady - Chitamparapillai Book Depot |
| | Chunnagam - Thurkka Book Depot |
| | Jaffna Town : - Annai Book Shop |
| Killinochi | : Pillayar Book Shop |
| Vavuniya : | Arivalayam |
| Trincomalee | : Happy Book Shop |
| Batticoloa | : United Book centre |
| | Raja Book Centre |
| Kandy | : Eeswaran book shop |
| Puttalam | : A to Z Book Shop |
| Chilaw | : Sun Book Shop |
| Negombo | : Negombo Printers |
| Colombo | : Wellawatte -Cordova Book Shop |
| | -Windsor Book Shop |
| | -Poobalasingam book depot |
| | -Shri Ram Book Centre |


அடுத்த இதழில்...
கோபிகை எழுதும்




# உறவுகள் சுகமானது

## புதிய நெடுந்தொடர் ஆரம்பம்....


# PRO

DIGITAL PRINTING



All Your Printing Neends....

- Digital Offset Printing
- Graphic Designing
- Personalized Gifts
- Plastic Identity Cards
- Digital Banner

50/54 Jampettah Street Colombo - 13.
Tel - 0112 447 399 / E-mail - prodigitalprinting@ymail.com

# ஒக்டோபர்



**மேஷம் :** வெளியூர்ப் பயணங்கள் சற்றுத் தடை தாமதங்களை ஏற்படுத்தியே இலக்கை அடைய முடியும். புதிய முயற்சிகள் ஆரம்பிக்க விரும்பினால் நடப்பு மகா திசாபுத்தி நன்றாக இருக்கவேண்டியது அவசியம். புதியன கொள்வனவு செய்யும்போது நம்பகத் தன்மை, காலாவதியாகும் திகதியையும் பாருங்கள். காதலில் சோதனையும், வேதனையும் ஏற்படலாம். எதிரியின் அச்சம் அகன்றுவிடலாம். சர்ப்பக்கடி பற்றி அவதானம் நன்று. பொறுப்பின்றி பணமோ, நகையோ கொடுக்கவேண்டாம். பெற்றோரின் வற்புறுத்தலால் திருமணத்துக்கு விருப்பம் தெரிவிப்பர். பூப்படைதல் முதலான சுபகாரியங்கள் ஏற்படலாம். ஆவணங்கள் தவறிப்போகும் அபாயம் பற்றி விழிப்பாக இருங்கள்.



**இடபம் :** பணக்கொடுக்கல் வாங்குதலால் சகோதர உறவில் விரிசலையும், மனக் கசப்பையும் எதிர்பாருங்கள். காலாவதியான மருந்து வில்லைகளை உட்கொள்வதால் தேகநலம் பாதிக்கப்படும். பிள்ளைகளின் ஒவ்வாத நடவடிக்கையை கண்டிக்காமல் பவ்வியமான முறையில் திருத்தப் பாருங்கள். குழந்தைப்பேறு ஏற்பட்டதற்கான அறிகுறி கண்டு மகிழ்ச்சியடைவீர்கள். பிள்ளைகளின் அழைப்பின் பிரகாரம் பெற்றோருக்கு வெளியூர் செல்லும் யோகமுண்டாகும். கணக்கில் தில்லுமுல்லு காணப்பட்டதால் வாடிக்கையை முறித்துக்கொள்வர். வெற்றுக் காசோலையில் கையெழுத்தை வைத்து பெரும் மோசடிகளுக்கு உட்படவேண்டாம்.



**மிதுனம் :** வெளியூர்ப் பயணம் பற்றிய இனிய செய்தி கிட்டும். புதிய ஜீவனின் வருகையை எதிர்பார்க்கலாம். புதிய மனை அமைக்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பெற்றோரின் தேகநலன் மேம்படுவதால் பதகளிப்பு நீங்கும். உடையவன் பாராவிட்டால் ஒரு முழம் கட்டையாவதுபோல் செய்தொழிலில் கவனஞ் செலுத்துங்கள். இடமாற்றம் பற்றிய அனுதாபக் கடிதங்கள் குப்பைக்கூடைக்குள் போடப்படலாம். கால்நடைகள் எதிர் பார்த்த இலாபம் தராது போய்விடலாம். தொழில் காரணமாக அடிக்கடி உள்ளூர்ப் பயணங்கள் ஏற்படும். மார்புச்சளி நோய் தொடர்ந்தும் வருத்தலாம். மாணவர்களைக் கண்டிக்க - தண்டிக்க வெளிக்கிட்டு பெற்றோருடன் முரண்பட நேரிடும்.



**கடகம் :** மலைபோல வரும் சோதனைகள், வேதனைகள் கடுகாகிப்போக இஷ்ட தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். கிரக நிலைகள் ஜாதகத்தில் நன்றாக இருப்பின் புதிய விடயங்களில் தடம் பதிக்கவும். மனை, தொழில், நாடு மாற்றத்தை எதிர்பாருங்கள். தம்பதிகள் மத்தியில் ஏற்படும் சந்தேகக்கோடு சந்தோஷத்தைக் கெடுத்துவிடும். உதவப்போய் உபத்திரவத்திலும் வீண் சிக்கலிலும் மாட்டுப்படவேண்டியதான நிலையுண்டு. துணையின்றித் தனித்துச் செல்லவேண்டாம். பிதாவின் நாட்பட்ட நோய் நீங்குவதால் அச்சம் அகன்றுவிடும். நீர்க்கண்டம் பற்றி மிகமிக விழிப்பாக இருக்கவும். குழந்தைப் பாக்கியம் இன்மையால் தத்தெடுக்கும் கைங்கரியத்தில் ஈடுபடல்.



**சிங்கம் :** நல்ல குருநாதன் ஆரம்பத்தில் வருத்தினாலும் பின்னர் நன்மைகளையே அளித்துவிடுவார். பிறர் உதவினால் மட்டுமே வெளியூர்ப் பயணம் பற்றி முடிவெடுங்கள். எதிரியைக் கண்டாலும், காணாததுபோல் சென்றதால் பிரச்சினை அற்றுவிடல். சுபகாரியம் எதிர்பாராமல் ஏற்படுவதால் கொண்டாட்டத்துக்கு செலவழிக்கத் திண்டாட்டம் ஏற்படும். மனைவியின் புத்திமதியைக் கேட்டதால் வரவிருந்த பெருத்த மோசடி நீங்கிவிடும். புதிய அறிமுகத்தைக் கைகழுவி விடல் நன்று. நோய் நீங்கி தைரியமும் வீரியமும் தக்கவைக்கும். இரவில் தனித்து சயனிப்பதை முதியோர் கைவிடவும். தன்பங்கைக் கேட்கும் தம்பியாலும், தம்பியுடன் முரண்படும் அண்ணாலும் வல்லமை பேசும் மனையாளாலும் கவின் நிலை கெட்டுவிடும்.



**கன்னி :** புதிய இடத்தில் வியாபார நிலையம் திறக்க முற்படல். பயணம் தித்திப்பாக இருக்கும். முரண்படும் துணைவியைக் கைவிட முடிவுசெய்வர். வாகனயோகம் கிட்டியபோதிலும் பாவிக்க பெற்றோர் தடைவிதிப்பர். முரண்பட்டிருந்த மாமன் உறவு சுமுகநிலைக்கு வந்துவிடும். நோயின் உபாதை நீங்க சத்திரசிகிச்சை ஏற்படலாம். கல்விப் பெறுபேறு பாதிக்கப்பட்டதால் வெளிநாடு செல்ல முற்படுவர். அசாதாரண வேகத்தைக் கைவிட்டால் விபத்தினின்றும் தப்பிவிடலாம். கௌரவப் பதவிகளுக்குப் பிரமுகர்களின் சிபாரிசு ஏற்படும். கோள் குண்டலம் மேற்கொள்ளும் அயலவர்களால் விவாகம் நிறைவேறாது இழுபடும். பிள்ளைகளின் ஒவ்வாத நடவடிக்கைகளால் வேதனைகள் கௌரவக் குறைவு ஏற்படும்.

# மாத இராசிபலன்



**துலாம் :** சொத்துரிமைப் பங்கீடு சம்பந்தமாக பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கு மிடையே வாக்குக்கலகம் தோன்றும். நட்டம் காரணமாக செய்தொழிலைக் கைவிட்டு வெளியூர் செல்லத் திட்டமிடுவர். மேலதிகாரிகளுடன் சுமுகமான உறவைப் பேணாவிடின் முன்னேற்றத்துக்கு ஆப்பு வைக்கப்படும். திருமணமாகாது கண்ணீரும் கம்பலையுமாக இருக்கும் முதிர்க்கன்னிகளை எண்ணிய பெற்றோர் வாட்டமடைவர். பேதம் காரணமாக முடிவாகும் நிலையில் காணப்பட்ட விவாகம் அப்படியே நின்றுவிடும். தொல்லை கொடுத்த எதிரி உறவுக்குக் கைகொடுப்பார். புதுயுகம் பிறக்க தேடிவரும். ஆடம்பரச் செலவுகளைக் கை விட்டு சேமிப்பில் கவனமெடுங்கள். புதிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் யோகம் ஏற்படும்.



**விருச்சிகம் :** முன்னேற்றப்பாதை அகலவிரிய கிரக நிலைகள் சாதகமாக இருக்கின்றன. வெளியூர்ப் பயணயோகத்தைக் கைநழுவவிட வேண்டாம். பிதா மற்றும் மூத்த சகோதரியால் வசந்த காலம் பிறக்கவைக்கும். முகம் பார்த்து வெளியூர்ப் பந்தபாசங்களுடன் கதைப்பதன் மூலம் துயர் அகன்றுவிடும். தொலைந்த ஆவணங்கள் பற்றிய தகவல் கிட்டி கைக்கு வந்துசேரும். பிதாவின் தேகசுகம் திடீரென பாதிப்படையலாம். நட்பு வட்டாரங்கள் விரிவடைவதால் காரிய சித்தி தக்கவைக்கும். புதிய மனைகோல ஏற்ற இடத்தைத் தேட சோதிடரை நாடுதல். குழந்தைப் பாக்கியம் கிட்டிய அறிகுறி கண்டு உவகை கொள்வீர்கள். சுபகாரியம் ஏற்பட்ட வேளை கொண்டாட்டத்துக்குப் பணம் தேடி நண்பரை நாடவேண்டியிருக்கும்.



**தனு :** ஏழரைச் சனி விரைவில் ஆரம்பிப்பதால் சேமிப்பில் செய்தொழிலில் கவனம் எடுங்கள். வெளியூர்ப்பயணம் பிறர் கருணை காட்டினால் மட்டுமே செல்ல முயற்சி எடுங்கள். காலசர்ப்பதோஷம் உள்ளவர்கள் நாகவிளக்கை எரித்து வணங்கிவர விவாகம் துரித கதியில் நிறைவேறும். தொடர்ந்து நோய் வாய்ப்படும் பிள்ளையின் ஆயுள் விருத்திக்காக விற்று வாங்கவும். சூரியன் செவ்வாய் ஒரே கூட்டில் இருப்பின் பெண்மணிகளுக்கு இளவயது திருமணம் அமங்கலி யோகத்தை ஏற்படுத்தும். பிறருக்குப் பணம், பொருள் மீகொடுக்க முற்படுகையில் பொறுப்பைக் கேளுங்கள். கடல் மார்க்கமாக வெளியூர்ப் பயணம் செய்வதைக் கைவிடவும். பிரயாணத்தின்போது ஆவணங்கள் தவறிப்போகலாம். எதிர்ப்புகள் அடங்கிவிட தெய்வ வழிபாட்டைக் கைவிடவேண்டாம்.



**மகரம் :** கன்னியரின் ஆறாத கண்ணீர் வற்றிவிட திருமணம் நடைபெறும் திகதி குறிக்கப் படும். சொத்துப் பிரச்சினை சுமுகமான முடிவை ஏற்படுத்தும். காதல் ஏற்பட்டு மனம் இன்ப வெள்ளத்தில் நீச்சலடிக்கும். புதிய முயற்சி தொடங்குவதற்கு பிதா மற்றும் மூத்த சகோதரர்கள் உதவிக்கரம் நீட்டுவர். செய்தியாளர்களுக்குத் தத்தமது தொழிலை முன்னிட்டு சோதனைக் காலமாகும். தொழில் இரகசியத்தைப் பிறருக்குக் கசியவிடவேண்டாம். பொருத்த மில்லாத சாதகங்களைப் பொருத்தி விவாகம் செய்விக்க முயலவீர்கள். இலஞ்சவலையில் சிக்கவேண்டி நேரிடும். ஒய்வுபெற்ற பின்னரும் மீள் நியமனம் பெற அழைப்பு வரும். சகுன சாத்திரங்களில் நம்பிக்கை வைத்துச் செயற்பட நன்மைகள் ஏற்படும்.



**கும்பம் :** இந்த மாதம் சோதனைக்குமேல் சோதனை ஏற்படும்போது இஷ்டதெய்வ வழிபாட்டின் மூலம் சாதனைகள் புரிவீர்கள். ஒன்றை ஆரம்பிக்க முன்னர் அனுபவசாலி களின் கருத்துகளையும், கேட்டுச் செயற்படுங்கள். ஆழமறியாது காலைவிட்ட பின்னர் அவதிப்படவேண்டாம். எதிரிகளின் தொல்லைகளால் அச்ச உணர்வும், பதகளிப்பும் ஏற்படும். அரசியல்வாதிகளுக்குப் புதிய பொறுப்புகள் சுமத்தப்படுவதுடன், மக்களின் அபிலாஷை களைப் பூர்த்திசெய்யும் நிலையும் ஏற்படும். உங்களை வசியமாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு பணம் கறக்கும் முயற்சிகளில் ஈடுபடலாம். முதலாளி, தொழிலாளர் நிலைக்கு இறங்கிவிடலாம். காணாக்கடி மற்றும் விஷப் பிராணிகளால் தேகசுகம் பாதிக்கப்படலாம்.



**மீனம் :** புதிய பதவிகள் தேடிவரும். இழுபட்டுக்கொண்டிருந்த விவாகம், பயணம் என்பன போன்ற நிறைவேறும் சந்தர்ப்பம் ஏற்படும். மாமனின் கருணையால் வாகன யோகம் மற்றும் புதியன கொள்வனவு செய்யலாம். பயணம், தொழில் சம்பந்தப் பட்ட பிரிவினைத் துயர் ஏற்படும். சிறைப்பயணம், தடுப்புக்காவல் என்பனவற்றை முகங்கொள்ளவேண்டி நேரிடும். உங்களின் நடவடிக்கையைச் சிலர் கண்காணித்து வருவதால் ஆபத்தில் சிக்கிக்கொள்ளாது விழிப்பாக இருங்கள். மேலதிகாரிகளுடன் சுமுகமான உறவைப் பேணுங்கள். சிலருக்கு இரண்டாந்தரம் முடிக்கவும், அயல்நாட்டு பெண்களை வதுவை செய்யவும் நேரிடலாம். வாக்குவாதத்தால் நட்புக் கெட்டுவிடலாம்.

# நீங்கள் நலமா?

## டாக்டர் சாருலதா பதிலளிக்கின்றார்

**செல்வி. பிரியா, சுன்னாகம்.**

**கே: வயது 25. இன்னும் சில மாதங்களில் திருமணம் செய்து கொள்ளவுள்ளேன். திருமணமாகி இரு வருடங்கள் கழித்தே குழந்தைப் பெற நானும் எனது வருங்கால கணவரும் திட்டமிட்டுள்ளோம். எனவே, அதுவரை நாங்கள் பின்பற்ற உகந்த குடும்பக்கட்டுப்பாட்டு வழிமுறை களைக் கூறமுடியுமா?**

ப: குறைந்தகால குடும்பக்கட்டுப்பாட்டு வழிமுறைகள் பலதரப்பட் டவை. அதில் ஆண்களுக்கு ஒரு வழிமுறைதான் உள்ளது. அது ஆண் உறை என்ற CONDOMS உபயோகிக்கும் முறை. குடும்ப உறவுக்கு முன்னர் ஆண் இந்த உறையை அணிந்து உறவுகொள்ளும்போது விந்தணுக்கள் சூழப்பை யினுள் செல்வது தடைப்படுத்தப்படும். ஆனால், உணர்ச்சிகள் பெருகும் அந்தக் காலவேளைகளில் - குடும்ப உறவுக்குத் தயாராகிக்கொண்டிருக்கும் நேரத்தில் - மனைவியை விட்டெழுந்து ஆணுறை அணிய தயாராவது - சங்கட மாவது - சௌகரியமல்லாதது என்பதாலும், பெண்கள் தரப்பில் உணர்ச்சி ஓங்கும் வேளையில் பிரிந்து எழுவதும் செயற்கையான பொருளால் தயாரிக்கப் பட்ட உறையை தமது பிறப்பு உறுப்பினுள் செலுத்துவதும் அதிகமாக விரும்பப் படுவதில்லை என்பதனால் இந்த முறையைப் பலர் பயன்படுத்துவதில்லை.

பெண்களுக்குக் கருத்தடை மாத்திரைகள், கருத்தடை ஊசி மருந்துகள், கருத்தடை புதிய சாதனங்கள் எனப்படும் IMPLANTS போன்றவை உள்ளன. இவையாவும் ஹோர்மோன்களைக் கட்டுப்படுத்தும் பயன்பாட்டில் உபயோகப்படுத்தப்படுகின்றன. இவற்றை உபயோகிக்கும் காரணங்கள், வழிமுறைகள் என்பவற்றிலும் வேறுபட்டவை. மேலும், ஒவ்வொருவரின தும் உடலமைப்பு, உடல் சூலம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு எந்த முறையைத் தேர்ந்தெடுப்பது என்பதற்கு வைத்திய ஆலோசனையைப் பெறவேண்டியது அவசியம்.


கருத்தடை மாத்திரைகள் மாதவிலக்கு முடிந்த மாதத்திலிருந்து தினமும் குறிப்பிட்ட நேரத்தில் எடுக்கப்படவேண்டும். காலமும், நேரமும் தவற விடின் சில வேளைகளில் எதிர்பாராமல் கருத்தரிப்பு நடை பெறலாம். ஊசி மருந்து மூன்று மாதத்துக்கு ஒரு தடவை ஏற்றவேண்டிய வழிமுறை. IMPLANT ஒரு மிகச்சிறிய சத்திர சிகிச்சை மூலம் சுரத்தின் மேற்பகுதியில் பதியம் வைக்கப் படும். அந்த சாதனம் உடலில் இருக்கும்வரை கருத்தரிப்பு நடைபெறாது. இந்த முறைகள் எல்லாம் பெண் ஹோர்மோன் களோடு சம்பந்தப்படுத்தப்பட்டவை என்பதால் சில பெண் களுக்கு மாதவிலக்குப் பிரச்சினைகள், உடல் பருவமடைதல் அல்லது மெலிதல் போன்ற பக்க விளைவுகளைத் தரலாம். எனினும், இவை சரியான மருத்துவ ஆலோசனையுடன் கைக்கொள்ளப்படும்போது பலன் கிடைக்கும். எனவே, நீங்கள் உங்கள் கணவனுடன் கலந்தாலோசித்து மருத்துவ ஆலோசனையுடன் உகந்த வழிமுறையைப் பின்பற்றவும்.

கருத்தடை முறைகளை பெண்கள் பின்பற்றுவதால் மலட் டுத்தன்மை ஏற்படும் என்பதில் உண்மையில்லை. ஆனால், இம்முறையை கைவிட்ட பின்னர் ஒரு சிலருக்கு கர்ப்பம் ஏற்பட காலதாமதம் ஏற்படுவதுண்டு.

**திருமதி. பாத்திமா, அக்குரணை.**

**கே: வயது 30. கர்ப்பமாக இருக்கின்றேன். கர்ப்பகால மருத்துவ பரிசோதனைக்குப் பிரபல பிரசவ வைத்தியர் ஒருவரிடம் சென்று வருகின்றேன். இப்பொழுது கர்ப்ப காலம் எனக்கு 9 மாதம். ஆனால், இது தவிர, எனது கர்ப்பம் ஆரம்பித்த காலத்திலிருந்து 3 தடவைகளுக்கு மேலாக ஸ்கேன் பரிசோதனை நடந்து விட்டது. எனக்கோ, எனது கர்ப்ப நிலைக்கோ எதுவித பிரச்சினையும் இல்லாமல் இத்தனை ஸ்கேன் (SCAN) பரிசோதனை ஏன்? பல தட வைகள் ஸ்கேன் பரிசோதனை செய்வதால் கர்ப்பத்தில் உள்ள குழந்தைக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா?**

ப: முதலில் ஸ்கேன் பரி சோதனையால் கர்ப்பத்துக்கோ, குழந்தைக்கோ, தாய்க்கோ அல் லது உள்ளுறுப்புகளுக்கோ எது வித பாதிப்பும் ஏற்படாது என்ப தைக் கூற விரும்புகின்றேன். எக்ஸ் கதிர் பரிசோதனை என் பது நல்ல ஸ்கேன் பரிசோதனை. எக்ஸ் கதிர் (X RAY) பரிசோத னையின்போது உபயோகிக்கப்ப டும் கதிரியக்கம் (RADIATION) திசுக்களில், கலங்களில் பாரிய



மாற்றங்களை அடிக்கடி பரிசோதனைகள் நடத்தப்படும்போது ஏற்படுத்தும். முக்கிய மாக அவசியமின்றி கர்ப்ப ஸ்திரீகளை எக்ஸ் கதிர் பரிசோதனைக்கு உட்படுத்தக்கூடாது என்பது மருத்துவ நியதி. எக்ஸ் கதிர்கள் கருப் பையில் வளரும் குழந்தைகளின் உறுப்பு களைச் சேதப்படுத்தும்.

ஆனால், ஸ்கேன் பரிசோதனை அப்படிப் பட்ட ஒன்றல்ல. இங்கு ULTRA SOUND எனப்படும் ஒலி அலைகளே உபயோகப் படுத்தப்படுகின்றன. இதனை வெளவால்கள் பறக்கும்போது ஒலி அலைகளை ஏற்படுத்தி தடைகளை அறிந்து பறப்பதற்கு ஒப்பிட லாம். இந்த அலைகள் ULTRA SOUND மனதை ஒலி அலைகள் பட்டுத் தெறித்து உறுப்புகளின் அமைப்பை மருத்துவர் அறிந்து கொள்ள உதவும். இனி கர்ப்பகாலத்தில் இத்தனை ஸ்கேன் பரிசோதனைகள் ஏன் என்பதை அறிந்துகொள்வோம்.

கர்ப்பமடைந்ததும் TVS அல்லது TRANS VAGINAL SCAN எனப்படும் பிறப்புறுப்பி னூடாக சிறிய ஸ்கேன் சாதனத்தைச் செலுத்திப் பார்க்கும் பரிசோதனை நடைபெறும். அநேக மாக முதல் இரண்டு கர்ப்பகால மாதங்களில் இது நடைபெறும். இந்தப் பரிசோதனைகளில் கர்ப்பம் சரியான முறையில் கருப்பைச் சுவரில் பதிந் துள்ளதா என்பதையும், கருப்பை சுற்றுச்சூழலில் உள்ள சினைக்குழாய், சூலகம் என்பவற்றின் நிலை யையும் அறிந்துகொள்ளலாம். இதன்பின்னர் கருப்ப காலம் 20 கிழமைகளில் நடைபெறும். ஸ்கேன் பரிசோ தனை கருவின் வளர்ச்சி கருக்காலத்தோடு பொருத்த மாக இருந்துள்ளதா என்பதையும், கருவின் தன்மை யில் ஏதாவது பிரச்சினைகள் உள்ளதா என்பதையும் காட்டும். இதனை DATING SCAN என்பார்கள்.

இதன்பின்னர் ANOMALY SCAN எனப்படும் கரு வின் வளர்ச்சியில் குறைபாடுகளை அறிதல் பொருட்டு ஸ்கேன் செய்யப்படும். பின்னர் அவசியம் ஏற்படின் அல்லது மருத்துவ நிபுணர் கர்ப்பகால பரிசோத னையில் தாயிடம் பிரச்சினைகள் இருந்தால் 32 ஆவது கிழமையிலும், அடுத்ததாக பிரசவ காலத் துக்கு அருகில் சுகப்பிரசவம் ஏற்பட வசதியுண்டா என்பதை அறிவதற்கும் மேலும் இரண்டு அல்லது மூன்று ஸ்கேன்கள் எடுக்கப்படும்.

நவீன உலகில் கர்ப்பிணித்தாயின் பராமரிப் புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதன் காரண மாகத்தான் இத்தனை ஸ்கேன் பரிசோதனைகள். நீங்கள் இதுபற்றி அஞ்சுவதற்கு எதுவுமில்லை.

**செல்வி. கார்த்திகா, மட்டக்களப்பு.**

**கே: வயது 18. எனது கால் பெருவிரல் நகம் சதை யினுள் வளர்ந்து வீக்கத்தையும், வலியையும் தரு கின்றது. மருத்துவர் அந்த நகத்தைப் பிடுங்க வேண்டும் என்கிறார். எனக்கோ பாதத்தின் அழகு இதனால் போய்விடும் என்று பயப்படுகின்றேன். நகத்தைப் பிடுங்காமல் சிகிச்சை செய்யமுடியுமா?**

**ப:** உங்களுக்கு ஏற்பட்டிருப்பது INGROWING TOE NAIL என்ற பிரச்சினை. அழகுக்காக நகத்தை ஒட்ட கத்தரிப்பது, இறுக்கமான பாதணிகளை அணி வது, ஈரலிப்பான சூழலில் வெறும் காலுடன் நடமாடு வதைப் போன்ற காரணங்களால் இது ஏற்படுகின்றது.

இதனால் நகம் வழக்கமாக வளரும் பாங்கினை மாற்றி குறுக்காக வளர்ந்து - சதையினுள் வளர்கின் றது. இதனைத் தொடர்ந்து வீக்கம், வேதனை மற்றும் பங்கசு தொற்றுகள் ஏற்படும்.

ஆரம்பத்தில் பங்கசு கொல்லி (ANTIBIOTICS) மருந்துகள் உபயோகித்து தொல்லையும், வேதனை யையும், வீக்கத்தையும் குறைத்துத் தீர்வு காணலாம். ஆனால், நோய் முற்றிப்போனால் சத்திரசிகிச்சைக் கானத் தீர்வு அதிகம். நகத்தின் மற்றப் பகுதிகள் பழுது படாமல் இருந்தால் முழுநகத்தையும் கழற்ற வேண்டிய அவசியமில்லை. WEDGE DISECTION என்கின்ற முறையில் பாதிக்கப்பட்ட பகுதியை மற் றும் சுமுக வேர்வரை வெட்டி எடுத்து குணமாக்க லாம். நகத்தை வேரோடு பிடுங்கினால் ஒழிய புதிய நகம் திரும்ப வளரும் என்பதால் நீங்கள் கவலைப் படவேண்டிய அவசியம் இல்லை.

# சாமுத்திரிகா லட்சணப்படி, ஒரு பெண்...!

ஒரு பெண் எப்படியிருக்க வேண்டும் என்று நம் முன்னோர்கள் வகுத்து வைத்துள்ளனர். இதை சாமுத்திரிகா லட்சணம் எனப் படுகிறது. எல்லா பெண்களுக்கும் சாமுத்திரிகா லட்சணப்படி எல்லா அவயங்களும் அமைவதில்லை. அமைந்தால் அது அதிஷ்டத்திலும் அதிஷ்டம் எனலாம்.

ஓர் இளம் பெண்ணுக்கு உச்சி முதல் பாதம் வரை உள்ள பகுதிகள் எப்படி இருக்க வேண்டும் என்று முன்னோர்கள் வகுத்து கூறியுள்ளனர். சாமுத்திரிகா லட்சணப்படி ஒரு பெண்ணுக்கு அழகு பாகங்கள் எப்படி இருக்க வேண்டும்? எனப் பார்ப்போம்.

**1. கால், பாதம் :**

ஒரு பெண்ணின் பாதம் செந்தாமரைப் பூப்போன்று சிவப்பாக இருக்க வேண்டும். கால்களின் ஐந்து விரல்களும் பூமியில் பதிய வேண்டும். ஐந்து விரல்களும் ஒன்றோடொன்று பொருந்திய நிலையில் இருத்தல் வேண்டும். குதிகால் கொஞ்சம் அகலமாக மயிலிறகு போல் அமைந்திருக்க வேண்டும்.

பாதங்களின் பெருவிரல் நீண்டிருந்தால் நல்லது. காலிலுள்ள நடு விரலுக்கு அடுத்த விரல் ஒண்டிருந்தால் செல்வச் செழிப்புடன் வாழ்வாள். குதிகாலின் மேல் வெள்ளை மச்சம் இருந்தால் மகிழ்ச்சியாக வாழ்வாள். மேலும் பிரதானமாக கெண்டைக்கால் பருத்து இல்லாமல் இருப்பது நலம். ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் இடை குறுகி இருப்பது நலம் அதுபோல் இருப்பவர்கள் ஆரோக்கியமாகவும் யோகம் உள்ளவர்களாக (அதிர்ஷ்டசாலியாகவும்) இருப்பார்கள்.

**2. நெற்றி :**

சாமுத்திரிகா லட்சணத்தில் நெற்றி மிக முக்கியமான இடத்தில் உள்ளது. உயர்ந்த நெற்றி அறிவின் அடையாளம். கொஞ்சம் மேடாக பரந்து இருந்தால் சிறப்பாக இருக்கும்.

நெற்றியின் பரந்து விரிந்த அமைப்பைவிட அதில் உள்ள கோடுகளுக்குத்தான் மிக முக்கியம். இரண்டு அல்லது மூன்று கோடுகள் இருப்பது நலம். பலதரப்பட்ட சிந்தனை அறிவு கொண்டவர்களாக இருப்பார்கள். அதற்குமேல் இருப்பது நல்ல தற்கல்ல.

செவியின் அதாவது காதின் அமைப்பு பரந்து விரிந்து இருக்க வேண்டும். செவி குறுக குறுக மனநிலையும் குறுகி இருக்கும். சிந்தனையும் குறுகலாக இருக்கும்.



**3. கண்கள் :**

பெண்களின் கண்கள் சிவந்து நீண்டு அடிக்கண் அகன்று, மாவடு போல இருக்க வேண்டும்... பாலில் விழுந்த வண்டு போல கண்கள் துள்ள வேண்டும். கரிய விழிகளில் செவ்வரி ஓடியிருக்க வேண்டும். பெண்களுக்கு புருவம் வில்லைப் போல் வளைந்திருக்க வேண்டும்.

உருண்டு திரண்ட கண்கள் யோகத்தின் அடையாளம் என்று சொல்வார்கள். சற்றே உருண்டு திரண்ட விழிகள்தான் அதற்காக ரொம்பவும் பெரிய விழிகள் அல்ல. மான் விழி என்று சொல்வார்கள் மருளக்கூடிய பார்வை கொண்ட வர்கள் கணவருக்கு ஏற்ற வராகவும் எல்லா இடத்திலும் நேர் மறை சிந்தனை கொண்டவராகவும் இருப்பார்கள். மருண்ட விழிகளில் சில அமைப்புகள் உண்டு.

உருண்ட விழி யோகம்; மருண்ட விழி கணவருக்கு நல்ல தாக இருக்கும். பரந்த விழிகள் பிறரை எளிதில் கவரக்கூடிய தாகவும் பெரிய துறையில் பெரிய பதவியில் அமரக்கூடிய வராகவும் இருப் பார்கள். விழிகளைவிட விழித்திரை ரொம்ப முக்கியம். விழித்திரை வெள்ளையாக இருக்கிறதா அல்லது மஞ்சளாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். உருண்ட விழியின் பின்னணி வெள்ளையாக இருந்தால் அவர்கள் திருட்டுத்தனம் செய்பவர்களாக இருப்பார்கள்.

சிவந்த விழித்திரையைக் கொண்ட பெண்கள் பிழைக்கத் தெரியாதவர்கள் என்று சொல்வார்களே அதுபோல இருப் பார்கள். மஞ்சள் பின்னணியில் பரந்த விழியைக் கொண்டி ருப்பது கொஞ்சம் பயங்கரமானது. வாழ்க்கையில் பெரிய ஏற்ற இறக்கங்களை சந்திப்பார்கள்.

விழி மற்றும் விழிப்பின்னணி இமைகள் போன்றவை பற்றி சொல்லப்படுகிறது. இமையில் இருக்கும் முடிகள் அடர்த்தியாக இருக்கக்கூடாது. அவ்வாறு இருந்தால் ஆயுள் குறைவு ஏற்படும். அடர்த்தி இல்லாமல் பரவலாக இருந் தால் ஆயுள் நிறைந்து இருக்கும்.

வளையக்கூடிய புருவங்கள் மிகப்பெரிய பதவியில் உட்காருவார்கள். இசையில் ஆர்வம் இருக்கும். முண்டக்கண்ணி என்று சொல்லப்படும் கண்கள் உள்ளவர்களுக்கு தாய் தந்தையில் யாராவது ஒருவர் இருக்கமாட்டார்கள். சிறிய வயதிலேயே பெற்றோரில் ஒருவரை இழந்துவிடுவார்கள்.

உள்ளுக்குள் இருக்கும் கண்கள் கொண்டவர்கள் ரொம்ப அப்பாவியாக இருப்பார்கள்; பின்னர் செழிப்பாக இருப்பார்கள். 30 வயது வரை காசை செலவுசெய்துவிட்டு பின்னர் பணத்தை சரியாக கையாள்வார்கள்.

**4. மூக்கு :**

மூக்கு உயர்ந்து காணப்படுவது நலம். மூக்கின் நுனி அமைப்பு தான் முக்கியமாக சொல்லப்படுகிறது. மூக்கின் நுனி கூராக இருந்தால் அதிபுத்திசாலி அரசாளும் யோகம் அமைச்சராதல் போன்ற யோகம் உண்டு.

எலியைப் போன்ற மூக்கு அதாவது லேசாக தூக்கிய படி இருந்தால் காம உணர்வு அதிகமாக இருக்கும் என் பார்கள். ஒரு சிலருக்கு மூக்கின் நுனிப் பகுதி உருண்டு காணப்படும். அவர்கள் புத்திசாலியாக இருப்பார்கள். பயன்படுத்திவிட்டு தூக்கி எறியும் குணம் இருக்கும் சந்தைப்படுத்துதல் துறையில் சிறந்து விளங்குவார்கள்.

**5. கூந்தல் :**

பெண்களின் கூந்தல் நீண்ட கருங்கூந்தலாக இருக்க வேண்டும். பெண்களின் கூந்தலில் மலர் மணம் வீசவேண்டும். கோர முடி குடி யைக் கெடுக்கும்; சுருட்டை சோறு போடும் என்று சொல்வார்கள்.

அதாவது, சுருட்டை முடி கொண்டவர்கள் எல்லோரையும் வைத்து சோறு போடுபவர்களாக வும் சுற்றுத்தார், நண்பர்களை மிகவும் நேசிப்பவர்களாகவும் இருப்பார் கள். அரவணைக்கும் தன்மை கொண்டவர்களாக இருப்பார்கள்.

கோரை முடி கொண்டவர்கள் தாய் தந்தையை துன்பப்படுத்து பவர்களாகவும் குடும்பத்திற்கு கெட்ட பெயரை கொடுப்பவர்களா கவும் இருப்பார்கள்.

கலப்பினத்தில் திருமணம் முடிப்பார்கள். ரோமக் கால்கள் எந்த அளவிற்கு மென்மையாக இருக்கிறதோ அந்த அளவிற்கு வாழ்க்கை மென்மையாக இருக் கும். ரொம்ப துன்பப்படாமல் அமைதியாக வீட்டிலேயே இருந்த படி வாழ்க்கை நடத்தும் யோகம் கிட்டும்.

கடினமான மொரமொரவென்று இருக்கும் தலைமுடி உள்ளவர் களுக்கு கடினமான வாழ்க்கையாக இருக்கும். உழைத்து சாப்பிட வேண்டிய நிலை ஏற்படும். அவர் களது முடி போன்றுதான் வாழ் க்கையும் அமையும்.

**6. கைவிரல் :**

பெண்ணின் கைகள் கொழுத்த மீன் போல் சிவப்பாக இருத்தல் வேண்டும். கைவிரல்கள் பயித்தங் காய் போல் அழகாக காட்சிதர வேண்டும்.

**7. கழுத்து :**


பெண்ணின் முகம் முழு நிலவுபோல ஒளிமிக்கதாக விளங்க வேண்டும். பெண்ணின் உதடுகள் உருண்டு திரண்டு பவளம் போலிருந் தால் அழகு. பெண்ணின் பல் வரிசை முத்துக்களைக் கோர்த்தது போல வரிசையாக இருக்க வேண்டும். ■



# கோபுர தரிசனம் கோடி புண்ணியம்



# தென்னிந்திய தெய்வ தரிசனம்



## ( கோயில்கள் சுற்றுலாத்தலங்கள் உள்ளடக்கம் )



மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார், மதுரை மீனாட் சியம்மன், அழகர் கோயில், ஆயிரம்கால் மண்ட பம், சுசீந்திரம், கன்னியாகுமரி, பகவதியம்மன், திருச்செந்தூர், இராமேஸ்வரம், இராமநா தசுவாமி கோயில், அக்கினி தீர்த் தம், 22 புனித கிணறுகளில் நீராடல், பிள்ளையார்பட்டி விநாயகர், திருச்சி, ஸ்ரீரங்கம், சமயபுரம் மாரியம்மன், ஆடிகும் பேஸ்வரர், சாரங்கபாணி கோயில், தஞ்சை பெரிய கோயில், திருவாரூர், கும்பகோணம், சீர்காழி, சிதம் பரம், நடராஜர், காஞ்சிகா மாட்சி, ஏகாம்பரேஸ்வரர் கோயில், வரத ராஜப் பெருமாள் கோயில், திருவண்ணாமலை அரு ணாசலேஸ்வரர், மாங்காடு மாரியம்மன், திருவேற்காடு கருமாரியம்மன், பெங்களூர் சிவன்கோயில், மைசூர் மகாராஜா அரண்மனை, பொருட்காட்சியகம், பிருந்தாவனத் தோட்டம், நந்திக்கோயில், சாமுண்டேஸ்வரி கோயில், ஊட்டி தாவர வியல் பூங்கா, ஊட்டி ஏரி, திருக் கடையூர் அபிராமி, திருப்பதி, ஐம்பூதஸ்தலங்கள், ஆறுபடைவீடுகள், நவக்கிரக கோயில்கள், சென்னை சீரடி பாபா, அண்ணா, எம்.ஜி.ஆர். நினைவு சதுக்கங்கள், மெரினா கடற்கரை மற்றும் சுற்றுலாத் தலங்கள்.

## சென்னையில் ஒருநாள் பொருட்கள் கொள்வனவு செய்ய ஒதுக்கப்படும் உள்ளடக்கப்பட்டவைகள்

1. இருவழி விமானக்கட்டணம்.
   (Return Air Ticket all taxes)
2. உயர்தரத்திலான மூன்றுநேர சைவ உணவு, காலை, மாலை தேநீர் மற்றும் குளிர்பானங்கள்.
3. சுத்தமான குடிதண்ணீர்.
   (Minaral water)
4. குளியலறை இணைந்த தங்குமிட வசதி
   (Attached Bathroom, Colour TV)
5. முழு சுற்றுலாவுக்கும் குளிரூட்டப்பட்ட சொகுசு பேரூந்து.
6. திருப்பதியில் VIP வரிசையில் சென்று சுவாமி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்துதரப்படும்.
7. இருவழி விமான நிலையத்திற்கான கட்டணம்.
   (Airport transport )

**ik tourism**
**Tel: 077 101 0104**

தரிசனம் 15 நாட்கள் புறப்படும் திகதி 19/10/2014
கருணாகர பிள்ளையார் கோயில் வீதி (இளந்தாரி கோவிலடி) இணுவில்கிழக்கு இணுவில்

## Study in Latvia


**(Schengen Visa Vaild for 27 countries)**

ஐரோப்பிய நாடான Latvia வில் குறைந்த செலவில் படிக்க, உழைக்க

- No IELTS
- G.C.E A/L 3 Pass only
- Very low course fee
- High Visa Success rate
- English Medium
- 20 Hours Part time Allowed



**Spot Admission on 11th Oct, 2014**



**ICS Study Overseas**

107 B 1/1, Galle Road, Colombo - 06
77 மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் அருகாமையில்)
Tel: 021 4926222, 0773013060

## நித்தியா ஜுவலர்ஸ்

## Nithiya Jewellers

Jewellery & Gem Merchants...

"Unleash Your Sensuality For Gold.
A creation of Golden Craving For Gold.
Wxquity Jewellery For Ecstasy."



NO: 169, Sea Street, Colombo - 11.
Tel: 0114 - 89 6983

இல்லத்தரசிகளின்
தோழியாய், சகல குடும்பங்களின்
ஒளி விளக்காக "ஒளி அரசி"
வளர்ச்சி பெற எமது வாழ்த்துகள்

BSN
TRADERS

## Sole Agent For

TechNova **PS PLATES** Technova Imaging System (P) Ltd - India,

O/M/M
HAMMONDS CHEMICALS

**PRESSROOM CHEMICALS**
Hammond Services - UK,
OMM Graphics - Malaysia,
Printers Planet Ltd. - Hong Kong,

DONGHU OFFSET INK

**OFFSET PRINTING INKS**
Suzhou Kings Wood Printing Ink Co Ltd-China

PCS GRAPHIC ART PRODUCTS SL

**CUTTING STICKS**
PCS Graphic Art Products - Spain

SCHOELLERSHAMMER

**TRACING PAPERS**
Sehoellers Shammer - Germany

FUJIKURA GRAPHICS

**BLANKETS**
Fujikura Rubber Ltd. - Japan

abezeta

**BLACK COVERING SPRAY**
Abezeta - Spain

# Be Es En Traders

**Suppliers of Offset Plates, Chemicals, Printing Ink, Machinary & All Other Printing Requisites**

No. EG1, Central Road, Colombo 12, Sri Lanka.
Tel : +94 11 2348418, 2348419, 2387924, 2330297
Fax : +94 11 2449809
E-mail : bees@sltnet.lk

# விக்கல் வருவது ஏன்?

சாதாரணமாக நாம் சுவாசிக்கும்போது காற்றை உள் இழுக்கிறோம். அப்போது மார்புத்தசைகள் விரிகின்றன. மார்புக்கும் வயிற்றுக்கும் இடையில் நுரையீரலை ஒட்டியுள்ள உதரவிதானமும் அப்போது விரிகிறது.

உடனே, தொண்டையில் உள்ள குரல்நாண்கள் திறக்கின்றன. அப்போது நுரையீரலுக்குள் காற்றின் அழுத்தம் குறைகிறது. அதேநேரம் நுரையீரலுக்குள் காற்று செல்ல அதிக இடம் கிடைக்கிறது. இதனால் நாம் சுவாசிக்கும் காற்று, திறந்த குரல்நாண்கள் வழியாகத் தங்கு தடையின்றி நுரையீரல்களுக்குள் நுழைந்துவிடுகிறது. இதுதான் இயல்பாக நிகழும் சுவாச நிகழ்வு.




சில நேரங்களில், மார்புப் பகுதியில் உள்ள நரம்புகள் உதரவிதானத்தை எரிச்சல்படுத்தினால், அது மூளைக் கட்டுப்பாட்டை மீறி, தன்னிச்சையாகத் திடீர் திடீரென்று சுருங்க ஆரம்பித்துவிடும். அப்போது குரல் நாண்கள் சரியாகத் திறப்பதில்லை.

அந்த மாதிரி நேரங்களில் நாம் சுவாசிக்கும் காற்று குரல்நாண்களின் குறுகிய இடைவெளி வழியாகத்தான் நுரையீரல்களுக்குள் சென்று திரும்ப வேண்டும். அப்போது அந்தக் காற்று, புல்லாங்குழலில் காற்று தடைபடும் போது இசையொலி உண்டாவதைப் போல, தொண்டையில் ''விக்... விக்...'' என்று ஒரு விநோத ஒலியை எழுப்புகிறது. இதுதான் ''விக்கல்'' என்கின்றோம்.

### என்ன காரணம்?

வேக வேகமாக உணவைச் சாப்பிடுவது, மிகச் சூடாக சாப்பிடுவது, தேவையான அளவுக்குத் தண்ணீர் அருந்தாதது போன்றவை விக்கலுக்கு முக்கியக் காரணங்கள். வலிநிவாரணி மாத்திரைகளைச் சாப்பிட்டாலும் விக்கல் வரும்.

இரண்டு நாட்களுக்கு மேல் விக்கல் தொடர்ந்தால், அது நோய்க்கான அறிகுறி. உதாரணத்துக்கு, இரைப்பையில் அல்சர் இருக்கும்போது, சிறுநீரகம் பழுதாகி ரத்தத்தில் யூரியா அளவு அதிகரிக்கும்போது விக்கல் வரும். உதரவிதானத்தில் நோய்த்தொற்று, கல்லீரல் கோளாறு, நுரையீரல் நோய்த்தொற்று, குடல் அடைப்பு, மூளைக் காய்ச்சல், கணைய அழற்சி, பெரினிக் நரம்புவாதம் போன்றவற்றாலும் விக்கல் வரும்.

### நிறுத்த என்ன செய்வது?

மூச்சை நன்றாக உள்ளிழுத்து அடக்கிக்கொள்ளுங்கள். 20 எண்ணும் வரை மூச்சை வெளியில்விட வேண்டாம். பிறகுதான் மூச்சை வெளியில்விட வேண்டும். இப்படி 5 முறை செய்தால் விக்கல் நின்றுவிடும்.

வேகமாக ஒரு சொம்பு குளிர்ந்த தண்ணீர் குடித்தால், விக்கல் நின்றுவிடும். ஒரு தேக்கரண்டி சர்க்கரையை நாக்கில் வைத்து அதைத் தானாகக் கரையவிட்டால், விக்கல் நிற்கும். ஏதேனும் ஒரு வகையில் தும்மலை உண்டாக்கினால், விக்கல் நிற்கும்.

அடுத்த வழி இது. ஒரு காகிதப்பைக்குள் மூச்சை விடுங்கள். பிறகு அந்தக் காற்றையே மீண்டும் சுவாசியுங்கள். இவ்வாறு 20 முறை செய்தால், ரத்தத்தில் கார்பன்டை ஒக்சைடு அதிகரித்து, விக்கல் நின்றுவிடும். அடிக்கடி விக்கல் ஏற்பட்டாலோ, 2 நாட்களுக்கு மேல் விக்கல் நீடித்தாலோ மருத்துவரை ஆலோசிப்பது நல்லது.

சில நிமிடங்கள் நீடிக்கும் விக்கலுக்கே நாம் பயந்துபோகிறோம். அமெரிக்காவில் சார்லஸ் ஆஸ்பார்ன் என்பவர் 68 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து விக்கல் எடுத்துக் கின்னஸ் ரிக்கார்டு செய்திருக்கிறார். அம்மாடியோவ்! ■

# மாவிட்டபுரக் காங்கேயமூர்த்தி



இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தின் அதி வடக்கே உள்ள புனித தலங்களில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயமும் மாவிட்டபுரம் கந்தசாமிக் கோவிலும் வரலாற்று சிறப்புமிக்கதாகும். யாழ்ப்பாண சரிதத்தோடு பின்னிப்பிணைந்த மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் பற்றிய பல்வேறு வரலாற்றுக் கதைகள் சொல்லப்படுகிறன.

சுவர்க்க லோகத்துள்ள சந்தானம், அரிச் சந்தானம், மந்தாரம், பாரிஜாதம், கற்பகம் என்னும் ஐந்து தருக்களின் தழைகளை உண்ணுதற்குக் கைநீட்டி முறித்து முழங்கும் யானைச் சேனைகளையுடைய கலிங்க தேயத்து அரசன் ஒருவன் இருந்தான். அவன் அரிய தவத்தால் பெற்ற புத்திரி பேரழகினையுடைய கனகசுந்தரி என்னும் பெயருள்ளாள். அவள் தல, தீர்த்த, மூர்த்த சேவையை விரும்பப் பல தலங்களைத் தரிசித்தும், தீர்த்தங்களில் தோய்ந்தும் மூர்த்திகளைப் பூசித்தும் வருவாளாயினள்.

செந்தமிழ் வளர்த்த அகத்திய முனிவர் வசிக்கும் பொதியமலைச் சாரலிலுள்ள தாம்பரவன்னி நதித்துறையிலே ஆடுவதற்கு வந்தாள். அங்கு பஞ்சாக்கினி நடுவினின்று அரிய தவத்தைச் செய்யா நின்ற அயக்கிரீவ முனிவரைப் பார்த்து நகைத்தாள். அது கண்ட முனிவனார், ''மங்கையே! நம்மை அவமதித்து நகைத்தனை. அதனால் நீ வரும் ஜனனத்திற் பலரும் இகழவருங் குதிரை முகத்தைக் கொள்ளுதி. இதுவே நின்னகைக்குப் பிரதிபலனாகும்''

என்று சாபமிட்டார்.

**கனகசுந்தரி** முனிவர் சாபத்தைக் கேட்டு வருந்தி, அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, திருப்பரம் பொருளாகிய சண்முகக் கடவுளை நினைத்து இரவு, பகல் என்னும் இரு காலத்தும் காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக் குற்றமும் அகற்றி மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்னும் நாற் கரணத்தையும் அடக்கி ஐந்தக்கினி நடுவினின்று, ஆறெழுத்தையும் உச்சரித்து ஏழ் பாற்கடலையுஞ் சுவற்றி இமயம், நியமம், பராணாயாமம், பரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனும் எட்டுறுப் புடைய சிவயோகத்தினால் ''நவ பெரும் புவனரும் வந்து தொழ வீற்றிருக்கும் தசகாரியத் தாபதரே! நுண்ணறிவுடையராய் நூலொடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே'' என்றமை தேவரீர் அறிந்ததேயன்றோ? அடியேன் தெரியாதுரைத்த குற்றத்தைப் பொறுத்துச் சாபம் நீங்கும் வழியை அருள்கவென்று பிரார்த்தித்தாள். முனிவரும் மனமிரங்கி, ''மடநல்லாய் கடல் துறைத் தீர்த்தம் ஆடுங்காற் கந்தப்பெருமான் திருவருளால் அகலும்'' என்றார்.

பின்னர், கனகசுந்தரி இறந்து, மறுபிறப்பிலே உலகமெல்லாவற்றையும் பொதுவறத்துறந்த மதுரை மன்னவன் உக்கிரப்பெருவழுதிக் குப் புத்திரியாகப் பிறந்தாள். அக் காலத்தில் மிக்க அழகுடன் விளங்கினாலாதலின் அவளுக்கு அங்கசுந்தரி எனப் பெயரிட்டுத் தாய், தந்தையர் அருமையாக வளர்த்தனர். சிறிது காலம் செல்லவும் முனிவரிட்ட சாபந் தொடுதற்கு ஆரம்பித்தது. புழுக்கள் வேட்டுவனாகவும், வண்டுகள் மயிர்க்குட்டிகளாகவும் மாறினாற்போல் அங்கசுந்தரி குதிரைமுகங் கொண்டாள். தாய், தந்தையர்களாகிய அரசனும், அரசியும் வருந்தி துக்க சாகரத்தில் மூழ்கினர். அப்போது அசரீரித் தெய்வம், ''உங்கள் மகள் குதிரை முகத்தை விட்டு நல்ல முகம் பெற வேண்டுதலாயின் கடலிலும், நதியிலும் மூழ்கி வருபவளாக'' என்று முழங்கிக் கூறியது. அது கேட்ட அரசனும், அரசியும் மன முவகையுற்றிருந்தனர். சில வருடங்கள் கழிந்ததும், மந்திரிகளையும் சேனைகளையும் சேர்த்துத் தோழியர்களுடன் தன் மகளைத் தீர்த்தமாடுமாறு அரசன் அனுப்பினார்.

அங்கசுந்தரி பாண்டி நாடு, சோழ நாடு, தொண்டை நாடு, சேர நாடு முதலிய தேசங்களிலுள்ள தீர்த்தங்களிலாடி, ஈழ நாட்டிற்குச் சென்று இந்து சமுத்திரம் என்னும் மகேந்திரக் கடலில் குளித்து பக்கத்திலே ஏமகூடம் எனப் பெயரிட்ட சுப்பிரமணிய துவாத சாந்தத் தலமாகிய கதிர்காமத்திற்குச் சென்று அங்குள்ள மாணிக்க கங்கையில் முழுகி கதிரை வேற்பெருமானை அன்புடன் துதித்துக் கண்ணீர் விட்டாள்.

''வடகோடியில் திவ்விய தீர்த்தமொன்றுள்ளது. அங்கு சென்று காங்கேயனை அன்புடனிணைந்து முழுகுவையேல் அகலும்'' என்று அசாரீ கூறிற்று. அங்கசுந்தரி அன்புடன் மகிழ்ந்து வடகடல் துறையடைந்து யாழ்ப்பாணத்திலுள்ள நகுலகிரியின் அருகே கடற்கரையிலூறிப் பெருகுந் தீர்த்தத்திற்கு கந்தக்கடவுளை எண்ணி முழுகினாள். உடனே குதிரை முகம் நீங்கிற்று. அரசகுமாரியும் மந்திரிமார்களும் சேனைகளும் தோழியர்களும் யாவரும் பெருமிதமும் உவகையும் அடைந்தனர். அவள் தந்தையாகிய உக்கிரம்பெருவழுதிக்கு அறிவித்து கந்தக்கடவுளின் திருவருளினாலே நீங்கினமையால் சுப்பிரமணியப் பிரதிட்டை செய்ய விரும்பி கந்தராலயமொன்று செய்வித்து மதில் முதலியனவும் வகுப்பித்து அவ்வூருக்குக் குதிரைமுகம் விட்டபுரம் என்னுங் காரணம் விளங்குமாறு மாவிட்டபுரம் எனச் பெயருஞ் சூட்டி சுப்பரமணியத் திருவுருவம் ஒன்று சிற்பலக்கணம் வல்லாராற் செய்வித்து, அங்கு கடல் வழியாக வருவித்து இறக்கப்பட்டமையால் அக்கடல் துறைக்குக் காங்கேயன்துறையெனப் பெயருமிட்டனர்.

அத்திருவுருவத்தைச் சுபவேளையிலே பிரதிட்டை செய்வித்து, பூசித்தல், தொண்டு செய்தல் முதலியவற்றிற்குத் தன் னாட்டினின்றும் ஆதி சைவப் பிராமணர்களையும், சைவ வேளாளர்களையும் குடியேற்றிக் கந்தன் திருவருள் பெற்று அங்கசுந்தரி கட்டழகுடையவளாய் மதுரை சென்றாள். இது போலும் மாவிட்டபுரத்திலுள்ள அத்தீர்த்தம் தன்னின் மூழ்கினாரது கொடுநோய்களைப் பரிகரித்து வரல் கண்கூடே. தக்கிணகைலாய மான்மியமும் இதற்குப் சாட்சியமாகும்.

இத்தகைய சிறப்புவாய்ந்த கோயில் பதினாறாம் நூற்றாண்டில் அன்னியர் ஆட்சியின்போது இடித்து அழிக்கப்பட்டது. இக்கோயிலை இடிக்கும் போது அதைக்கண்டு துன்புற்ற ஆதின பூசகர்கள் ஆதிமூல உருவச் சிலையை கயிற்றில் கட்டி கிணற்றுக்குள் இறக்கி மறைத்து வைத்தனர் என வரலாறுகள் கூறுகின்றனர். 19 ஆம் நூற்றாண்டிளவில் அன்னியராட்சி விலக ஆலயம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு சிறப்புற்று விளங்கியது. ஆயினும் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் மீண்டும் இவ்வாலயம் தாக்கியழிக்கப்பட்டதுடன் தற்போது அது படிப்படியாக மறுசீரமைக்கப்பட்டு வருவதைக் காணலாம்.

இந்துக்களின் பழம் பெரும் வரலாற்று சிறப்பு வாய்ந்த மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் பலமுறை இடித்தழிக் கப்பட்டாலும் மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படுவது அதன் சிறப்பை காட்டி நிற்கிறது எனலாம்.



# மறக்க முடியா மழை நாள்

மழை மேகம் சூழ்ந்த மாலை
வெயிலின் உக்கிரம் கரைந்து
மழையின் வாசம் நுகர்ந்த காற்று...
கருமேகம் கண்டு பயந்தோடி
இருப்பிடம் விரையும் பறவைகள்...

காற்றோடு காதல் கொண்டு
சந்தோஷமாய் தலையாட்டும் நெல்மணிகள்...
லேசான தூறலுக்கே வீடு நோக்கிப்
பாய்ச்சலெடுக்கும் பசுக்கள்...
கனமழை வந்தாலும் மேய்ச்சலை
விடமாட்டோமென மேயும் எருமைகள்...

மழையில் நனையாமல் காத்துக்கொள்ள
கொங்காணிகளுக்கும் உடலை
மறைக்கும் மாடு மேய்க்கும் மனிதர்கள்...
தண்ணீரில் விழும் மழைத்துளியோடு
மல்லுக்கு நிற்கும் மீன்குஞ்சுகள்...
குதிக்கும் மீன்களைக் குறிவைத்து
தூறலில் தவமிருக்கும் கொக்கு...

இருண்ட ஈசானிய மூலையில்
ஒளிரும் மின்னலைத் தொடர்ந்து
இடிக்கும் இடியின் வெடியோசை...
தூறல் வருமுன்னே தூரமாய்
ஓடி ஒளியும் மின்சாரம்...
மழையின் வேகம் சடசட
பெருக்கெடுத்து ஓடும் நீரின் சலசலப்பு...

எல்லாம் பார்த்துப் பழகிப்போன
மழை வேகமெடுத்துப் பேய்மழையாய்
சோவென்று கொட்டினாலும்
சன்னலோரத்தில் அமர்ந்து சாயந்திர
மழையை ரசிக்கும் மனசுக்குள்...
ஓடும் தண்ணீரில் விட்ட கத்திக்கப்பலும்...
மழையில் நனையும் ஆசையும்...
இன்னும் மரிக்காமல் மாம்பூவின் வாசமாய்...

# அனுமன் செய்த தியாகம்!

## தெரிந்த புராணம்... தெரியாத கதை!

இறைவனிடம் செலுத்தும் பக்தியின் பரிமாணத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 'கடவுள் நம் கண்களுக்கும் புலன்களுக்கும் எட்டாத நிலையில் எங்கோ வியாபித்திருக்கிறார். அவர் என்னைக் காத்து ரக்ஷிக்கிறார். அவருக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்' என்று கருதி, அவரைச் சரணடைந்து பக்தி செலுத்துவது முதல் வகை.

'கடவுள், உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளிலும் ஒவ்வொரு அணுவிலும் வியாபித்திருக்கிறார்;



உயிர்களிடம் காட்டும் அன்பின் மூலம் இறைவனுக்குச் சேவை செய்யலாம்' என்று கருதி, கடவுளை வழிபடுவது இரண்டாவது வகை. 'கடவுள் என்னுள்ளேயே இருக்கிறார். அவரை வேறெங்கும் தேடத் தேவையில்லை. என்னுள்ளே இருந்து என்னை இயக்கும் இறைவனே என்னை வழிநடத்துகிறான்' என்று கருதி, தன்னைத் தூய்மைப்படுத்திக்கொண்டு, தன்னுள்ளே வாழும் இறைவனிடம் சரணாகதி அடைந்து சேவை செய்வது மூன்றாவது வகை.

அனுமனின் பக்தி, இந்த மூன்றாவது வகையைச் சேரும். ராமாயண காவியத்தில் ராமனுக்கு அடுத்தபடியாகப் பேசப்படுபவன் அனுமன். நம் தேசத்தில் பல வகையான ராமாயணங்கள், பல்வேறு காலகட்டத்தில், பல்வேறு மொழிகளில் எழுதப்பட்டுக் காலம் காலமாகப் பேசப்பட்டு வருகின்றன. சம்ஸ்கிருத மொழியில் வால்மீகி எழுதிய மூல ராமாயணம், இந்தியில் துளசிதாசர் எழுதிய ராமசரித மானஸ், தமிழில் கம்பர் எழுதிய கம்பராமாயணம், தெலுங்கில் பக்த போத்தன்னா எழுதிய போத்தன்னா ராமாயணம் ஆகியவை மட்டுமின்றி, அத்யாத்ம ராமாயணம், ஆனந்த ராமாயணம், ஹனுமத் ராமாயணம் எனப் பல்வேறு ராமாயணக் காவியங்கள் உலகெங்கும் பன்னெடுங்காலமாகப் போற்றிப் பூஜிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் 'ஹனுமத் ராமாயணம்' என்பதை ஹனுமானே அருளியதாகச் சொல்லப்படுகிறது. இந்த ஹனுமத் ராமாயணத்தில் பின்வரும் காவிய நிகழ்ச்சி ஒன்று இடம் பெறுகின்றது.

ஸ்ரீராமனின் பட்டாபிஷேகம் நடந்து முடிந்த பின்னர், ஒருநாள் இமயமலைச் சாரலில் ஒரு சிகரத்தின் மீது ஏறி நடந்து கொண்டிருந்தார் வால்மீகி. சிகரத்தின் சரிவுகளில் இருந்த பாறைகளின் மீதும், கற்களின் மீதும் கல்வெட்டுக்களாகச் சில வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவற்றைப் படிக்க ஆரம்பித்தார் வால்மீகி. அவருக்கு மெய்சிலிர்த்தது. அந்த வாசகங்கள் எல்லாம் ஸ்ரீராமனின் வாழ்க்கைச் சம்பவங்களைச் சித்திரிப்பதாக அமைந்திருந்தன. அவை, தான் எழுதிய ராமாயண வரிகளைவிட, கவிதை நயமும் கருத்து நயமும் மிக்கவையாக இருப்பதை உணர்ந்து பிரமித்தார் வால்மீகி. இந்தக் கல்வெட்டுகளில் ஸ்ரீராமனின் கதையை யார் உருவாக்கியிருப்பார்கள் என்று எண்ணியபடியே, இமயத்தின் சிகரத்தை அவர் அடைந்தபோது, அங்கே மற்றோர் ஆச்சரியம் காத்திருந்தது.

அங்கே, அனுமன் யோகநிஷ்டையில் இருந்தபடி ஸ்ரீராம நாமத்தை ஜெபித்துக் கொண்டிருந்தார். அவரது யோக நிஷ்டையைக் கலைக்க விரும்பாத வால்மீகி மஹரிஷி, தானும் ராம நாமம் ஜெபிக்க ஆரம்பித்தார். அந்த நாம ஜெபத்தைக் கேட்ட

அனுமன் நிஷ்டையிலிருந்து விழித்தெழுந்து, வால்மீகியை வணங்கி நின்றார். அவரிடம், ராம காவியம் கல்வெட்டுக்களாக அமைந்த வரலாற்றைப் பற்றிக் கேட்டார் மஹரிஷி.

அதற்கு அனுமன் மிகுந்த விநயத்துடன், ''ஸ்ரீராமனின் கல்யாண குணங்களையும் அவரது பெருமைகளையும் இங்கே காணும் கற்களில் நான்தான் எனது நகத்தால் செதுக்கி வைத்தேன். யுகம் யுகமாக ஸ்ரீராமனின் கதை பேசப்பட வேண்டும் என்பதற்காக இந்தக் காரியத்தைச் செய்தேன். ஸ்ரீராமனை ரிஷ்யமுக பர்வதத்தில் நான் சந்தித்தது முதல், பட்டாபிஷேகம் வரை எனக்குத் தெரிந்த ராம கதையை உருவாக்கினேன். ஆனாலும், தங்களின் ராமாயணத்துக்கு இது ஈடாகாது!'' என்றார்.

அப்போது வால்மீகி மஹரிஷியின் கண்களில் நீர் கசிந்ததை அனுமன் கவனித்தார். அதற்கான காரணத்தை மஹரிஷியிடம் பணிவோடு கேட்டார். மேலும், தான் கல்லில் செதுக்கிய ராமாயண காவிய வரிகளில் தவறேதும் இருந்தால், எடுத்துச் சொல்லும்படியும் வேண்டினார். வால்மீகியின் கண்களில் மேலும் நீர் பெருகியது. 'எத்தகைய சிறப்பான காரியத்தைச் செய்துவிட்டு, எவ்வளவு தன்னடக்கத்துடன் அனுமன் இருக்கிறார்' என்பதை எண்ணிப் பெருமிதம் அடைந்தார்.

''ஹனுமான்! நீ ஸ்ரீராமனின் சிரேஷ்டமான பக்தன். உன்னால் கல்லில் பொறிக்கப்பட்ட ராமாயணத்தில் தவறு இருக்க முடியுமா? நீ எழுதிய காவிய வரிகளில் காணும் பக்திப் பரவசம் என்னை நெகிழ வைத்துவிட்டது. இது, என் ஆனந்தக் கண்ணீர்தான். நான் எழுதிய ராமாயணம் இதற்கு ஈடு இணையாகாது. உன்னுடைய ராமாயணத்தை உலகோர் படிக்கும்போது, என் ராமாயணம் காலப் போக்கில் மறைந்துவிடும்'' என்றார்.

அதைக் கேட்ட மாத்திரத்தில், அனுமனின் கண்களில் தாரை தாரையாக நீர் சுரந்தது. உணர்ச்சிவசப்பட்ட அனுமன், பாறைகளில் தான் செதுக்கியிருந்த ராமாயண காவிய வரிகளை எல்லாம் தனது வாலால் துப்புரவாக அழித்துவிட்டார். பின்னர் வால்மீகியை வணங்கி, ''தாங்கள் எழுதிய ஸ்ரீராம காவியமே மிகச் சிறப்பானது! காலத்தால் அழியாதது! நான் செதுக்கியது வெறுமே என் உணர்ச்சிகளின் பிரதிபலிப்புதான். தாங்கள் உருவாக்கியதுதான் ஸ்ரீராமனே பாராட்டிய காவியம். அதற்கு ஈடு இணை எதுவும் இருக்காது'' என்று அமைதியுடன் கூறினார்.

அனுமனின் பக்தியைப் பற்றி வால்மீகி ஏற்கெனவே தெரிந்துகொண்டிருந்தார். அவரது தியாகத்தை இப்போது புரிந்துகொண்டார். அனுமனை மனமார வாழ்த்தினார். ''ஹனுமான்! நீ எழுதிய ராமாயண எழுத்துக்களை அழித்து விட்டாய். ஆனால், அந்தக் கருத்துக்கள் என் மனதில் ஆழப் பதிந்துவிட்டன. எனது ராம காவியத்தில் நீ செதுக்கிய ராம கதையும் இடம் பெறும்'' என்று கூறி, வாழ்த்திச் சென்றார்.

அதன்படி, வால்மீகி ராமாயணத்தின் ஒரு பகுதியாக அமைந்தது ஹனுமத் ராமாயணம். அனுமன் கண்ட ராமனை இந்தக் காவிய வரிகளில் இன்றும் நாம் தரிசிக்கிறோம். அனுமன் வாயுபுத்திரன். சிவபெருமானின் அம்ஸாவதாரம். சூரியனைக் குருவாகக் கொண்டு நான்கு வேதங்களையும், சாஸ்திரங்களையும் கற்றவர். எளிமையே உருவானவர். அடக்கமானவர். அவரது திறமையும் வலிமையும் அவருக்கே தெரியாது. ராமாயண காவியத்தில் எங்கேயும் எப்போதும் கோபப்படாதவர், அனுமன்தான். இலங்கையை எரித்ததுகூட கோபத்தினால் அல்ல; ராவணனுக்கு புத்தி கற்பிக்கவேதான்.

சீதாபிராட்டியால் சிரஞ்ஜீவி என்று ஆசிர்வதிக்கப்பட்ட அனுமன், இன்றைக்கும் சிரஞ்ஜீவியாக நம்மிடையேதான் உலவிக்கொண்டிருக்கிறார். அனுமன் இருப்பது, 60 அடி உயர சிலையிலோ, அல்லது அற்புதமாகக் கட்டப்பட்ட ஆலயத்திலோ மட்டுமல்ல; ஸ்ரீராம நாமம் ஒலிக்கும் இடமெல்லாம் அனுமன் இருக்கிறார்.

யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ர தத்ர க்ருதமஸ்த காஞ்சலிம்
பாஷ்பவாரி பரிபூரண லோசனம்
மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம்

- என்று அனுமனைப் பற்றிய ஸ்லோகம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'எங்கெல்லாம் ஸ்ரீராம நாமம் ஒலிக்கிறதோ, அங்கெல்லாம் பக்திப் பரவசத்துடன் கண்களில் நீர் மல்கக் காட்சி தந்துகொண்டிருப்பவர் எவரோ, அவரே அனுமன் என்று தெரிந்துகொள்' என்பது இதன் பொருள்.

கடைசி வரியில் உள்ள 'ராக்ஷஸாந்தகம்' என்பது, 'அவர் உன் உள்ளத்தில் தேங்கி நிற்கும் ஆணவம், அஹங்காரம், கோபம், த்வேஷம் போன்ற ராக்ஷஸ குணங்களை அழிப்பவர்' என்பதைக் குறிக்கும்.

அனுமனை உபாஸித்து அருள் பெற, 'ஸ்ரீராம ஜெய ராம ஜெய ஜெய ராம' என்று ராம நாமத்தின் பெருமையைச் சொன்னாலே போதும்; அனுமன் அந்த பக்தர்களுக்கும் சேவகனாகி அருள்புரிவார். அஞ்சனை மைந்தனாம் அனுமனை வழிபடுவதால் நமது உள்ளத்தில் நேர்மை, தூய்மை, தியாகம், பக்தி, எளிமை, அடக்கம் போன்ற உயர்ந்த குணங்கள் உருவாகி, நம்மை உயர்த்துகின்றன என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ■

# மறக்கமுடியாத சித்திரங்கள்!



சாப்பிளின் எனும் மகா கலைஞனின் எந்தப் படைப்பையும் குறைத்து மதிப்பிட முடியாது. என்றாலும் சாப்ளின் என்றதும் ஒவ்வொரு வருக்கும் சில படங்கள் பொதுவாக நினைவு களில் அலைமோதும். அவற்றில் மார்டன் டைம்ஸ், சிட்டிலைட்ஸ், க்ரேட் டிக்டேட்டர் ஆகிய படங்களுக்குத் தனியிடம் உண்டு.

மௌனப் படங்களின் காலம் முடிந்து, பேசும்படங்களின் யுகம் தொடங்கிய பிறகு பிடிவாதத்துடன் வெளிவந்த திரைப்படம் சாப்ளினின் மாடர்ன் டைம்ஸ். சினிமாவில் எத்தனையோ நவீனங்களைப் பார்த்துப் பழகிவிட்ட பார்வையாளர்களுக்கு இன்னும் அலுக்காத நகைச்சுவைக் காவியமாக மாடர்ன் டைம்ஸ் திகழ்கிறது.

மாடர்ன் டைம்ஸ் தன் பெயருக்கு ஏற்ப, சமகாலத்தன்மையுடையதாகவே இருக்கிறது. படத்தின் முதல் காட்சியி லேயே மந்தை மந்தையாக ஆடுகள் செல்வது காண்பிக்கப்படும். அந்தக் காட்சி மெதுவாக மறைந்து புறநகர் ரயில் நிலையத்தில் இருந்து கூட்டம் கூட்டமாகத் தொழிலாளர்கள் போவது காண் பிக்கப்படும். முதலாளித்துவ உலகில் வேலை என்பது மந்தைத்தனமாக மாறுவதை விமர்சிக் கும் அக்காட்சி இன்றைய காலத்திற்கும் பொருத்தமானதே.

எந்திர யுகத்தைக் கவலையுடன் எதிர்நோக் கும் படைப்பாக மாடர்ன் டைம்ஸ் திகழ்கிறது. உலகளாவிய அளவில், நவீன மாற்றங்கள் மனிதத்தன்மையை இல்லாமலாக்குவதை சாப்ளின் எந்திரத்தில் சிக்கிக்கொள்ளும் காட்சி அழகாகச் சித்திரித்திருக்கும்.

நல்ல பண்புள்ள, ஆனால் சமூகத்தோடு முழுமையாக ஒன்ற இயலாத, சிறிய சாகசங்கள் செய்து தோல்வி அடையக்கூடிய லிட்டில் ட்ராம்ப் கதாபாத்திரம் வசனம் பேசினால் படத்தின் மர்மமும், கனவுத்தன்மையும் குலைந்துவிடும் என்று சாப்ளின் நினைத்தார். ஆங்கிலம் பேசாத இடங்களில் அவரது ரசிகர்களைக் கவர முடியாது என்றும் கருதினார்.

திரைப்படம் என்பதைத் தாண்டியும் நவீன காலம் குறித்த மிகப்பெரிய அங்கதப் படைப்பாக ''மாடர்ன் டைம்ஸ்'' காலம் கடந்து நிற்கிறது.

சார்லி சாப்ளின் படங்களில் நகைச்சுவை, சோகம், பொழுதுபோக்கு என அனைத்து அம்சங்களையும் கொண்ட படம் ''சிட்டி லைட்ஸ்.'' இந்தப் படத்தில் நாயகன் சாப்ளினைப் பொருட்படுத்தாத, மதிக்காத நபர்களே அவருக்கு நண்பர்களாக இருப்பார்கள். இரவுக் குடியின்போது மட்டும் மாளிகைக்கு அழைத்துச் சென்று உபசரித்துவிட்டு, காலையில் துரத்திவிடும் கோடீஸ்வர நண்பர் கதாபாத்திரம் சினிமா உள்ள காலம் வரை மறக்க முடியாத கதாபாத்திரம்.



நாயகன் காதலிக்கும் பூ விற்கும் பெண்ணோ பார்வை இழந்தவள். அவளுக்குப் பார்வை தெரியும்போது, அவனை அங்கீகரிக்க இயலவில்லை. சமூகத்தோடு தொடர்ந்து இயைந்து செல்ல விரும்பினாலும் தொடர்ந்து அந்நியனாகத் துரத்தப்படும் லிட்டில் டிராம்ப் கதாபாத்திரம் தான் இதிலும்.

சாப்ளினின் சிட்டி லைட்ஸ் படத்தின் மூலக்கதை தமிழில் வெவ்வேறு காலகட்டங்களில் திரைப்படங்களாக எடுக்கப்பட்டுள்ளன. ஏழை படும் பாடு தொடங்கி மூன்றாம் பிறை வரை பல படங்களைச் சொல்லமுடியும். ஏழை படும் பாடு படத்தின் நாயகியும் பூ விற்பவள்தான். மல்லிகைப் பூ ஜாதி ரோஜா, முல்லைப் பூ வேண்டுமா என்ற பாடலை யூட்யூப்பில் கேட்டுப்பார்க்கலாம். சிட்டி லைட்சின் வெளிச்சம் தெரியும்.

ஹிட்லரின் சர்வாதிகாரத்தையும், இனவாதத்தையும் நகைச்சுவையாகவும் அதேவேளையில் ஆழமாகவும் விமர்சித்த திரைப்படம் கிரேட் டிக்டேட்டர். சார்லி சாப்ளினின் முதல் பேசும் படம் இதுவே ஆகும். கலையம்சம், பிரசாரம், சக்தி வாய்ந்த திரை வெளிப்பாடு, நகைச்சுவை அனைத்தும் இணைந்த இந்தப் படைப்பு, உலகையே தன் அதிகாரத்தால் உலுக்கிக் கொண்டிருந்த ஹிட்லரின் ஆளுமை உலகையே அதிரவைத்த காலத்தில் நாசிசத்தைக் கடுமையாக விமர்சித்தது. "கிரேட் டிக்டேட்டர்" படத்தின் இறுதிக் காட்சியில் சர்வாதிகாரியின் வேடத்தில் இருக்கும் முடிதிருத்தும் கலைஞனான சாப்ளின் ஆற்றும் உரை, பெரிய இலக்கியமாக இன்றளவும் உலக மக்களால் வாசிக்கப்படுகிறது. மனித குலத்தின் சமாதானம் மற்றும் சகோதரத்துவத்தை வேண்டும் உரை அது. தி கிரேட் டிக்டேட்டர் படத்தில் யூத இனத்தைச் சேர்ந்த முடிதிருத்தும் கலைஞராகவும், சர்வாதிகாரி அடினாய்ட் ஹெய்ங்கெல்லாகவும் இரண்டு வேடம் சாப்ளினுக்கு. நற்பண்பும், நேரெதிரான தீமையும் வெளிப்படும் இரண்டு வேடங்களில் நடித்திருப்பார் சாப்ளின்.

ஹிட்லருக்கும் சாப்ளினுக்கும் ஒற்றுமைகள் அதிகம். இரண்டு பேருமே 1889, ஏப்ரல் மாதம் பிறந்தவர்கள். இரண்டு பேரின் குழந்தைப் பருவமும் வறுமைமிக்கது. இருவருமே பெரியவர்களான பிறகு மிகப் பெரிய புகழைச் சம்பாதித்தவர்கள். ஒருவர் உலக மக்களைச் சிரிக்க வைத்தார். இன்னொருவர் வெறுக்கக் கற்றுத்தந்தார். சாப்ளினின் முதல் பேசும்படம் தி கிரேட் டிக்டேட்டர்தான் என்பது கவனிக்கத்தக்கது. ஏனெனில், ஹிட்லரின் கொடுங்கோன்மையை எதிர்க்க அவர் ''பேச'' வேண்டியிருந்தது.

# NPH


## நியு பயனியர் வைத்தியசாலை

# NEW PIONEER HOSPITAL

## எமது சேவைகள்

கல்முனையிலும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- விசேட வைத்திய நிபுணர்கள் சேவை
- வெளி நோயாளர் பிரிவு
- பல் வைத்தியர் நிபுணர் சேவை
- மின் ஒலி இதய வரைபு (எக்கோ)
- மீயொலி நோட்டம் (அல்ட்ராசவுண்ட் ஸ்கேன்)
- அவசர சிகிச்சைப் பிரிவு
- சிறு சத்திர சிகிச்சைப் பிரிவு
- X - கதிர் பரிசோதனை
- ஈ.சி.ஜி பரிசோதனை
- நோயாளர் ஊர்தி சேவை (அம்புலன்ஸ்)
- மருந்தகம்
- இயன் மருத்துவம்
- ஆய்வுகூட பரிசோதனைகள்
- பூரண வைத்திய பரிசோதனை
- வைத்திய பரிசோதனை அறிக்கை
- கருத்தரிப்புப் பரிசோதனை
- மருத்துவச் சான்றிதழ்
- குடும்பத் திட்டமிடல் சேவை







**202 A, Main Street, Kalmunai.**
**202 A, பிரதான வீதி, கல்முனை.**
**Tel: 067 2226672, 067 2226673**
**sriaroggiyaa@gmail.com**

# பயனுள்ள வீட்டுக்குறிப்புகள்

❁ தேங்காயில் உள்ள இளநீரை வீணாக்காமல் ரசத்தில் சேர்த்தால் ரசம் மிகவும் ருசியாக இருக்கும்.

❁ எந்த கறை ஆடையில் பட்டாலும் சிறிது வினிகர் போட்டு துவைத்தால் கறை இருந்த இடம் தெரியாது.

❁ அப்பசட்டியில் எப்பொழுதும் எண்ணெய் தடவியே வைத்திருக்க வேண்டும். அப்பொழுது தான் அப்பம் செய்யும்போது எளிதாக செய்யலாம்.

❁ கொதிக்கவைத்து ஆறிய நீரில் சீரகப் பொடியை போட்டு 12 மணி நேரம் ஆகி குடித்தால் இரத்த கொதிப்பு சீராகும்.

❁ மண்பாத்திரம் புதிதாக வாங்கினால் அதில் சிறிது எண்ணெய் தடவி அடுப்பில் சற்று நேரம் சூடேற்றி பின் கழுவினால் மண்வாசனையும் வராது விரிசலும் விடாது.

❁ தக்காளி சட்னி செய்யும்போது அதில் சிறிது எள்ளை வறுத்து பொடி செய்து போட்டால் ருசி அதிகமாக இருக்கும். தயாரிக்கும் போது அதில் சிறிது எலுமிச்சை சாற்றை கலந்து குடித்தால் ருசி அதிகமாக இருக்கும்.

❁ பொரித்த அப்பளம் மீதமாகிவிட்டால் அதை பொலிதீன்பையில் நன்றாக சுற்றி ஃபிரிஜ்ஜில் வைத்துவிட்டால் ஒரு வாரம் ஆனாலும் மொறு மொறுப்பு மாறாமல் இருக்கும்.

❁ வாஷ் பேசினில் இரண்டு அல்லது மூன்று ரசகற்பூரம் போட்டு வைத்தால் எந்தவித துர்நாற்றமும் வராது.

❁ அடைக்கு அரைக்கும்போது அரிசி பருப்புடன் இரண்டு வேக வைத்த உருளைக் கிழங்கு போட்டு அரைத்தால் ருசியாக இருக்கும்.

❁ இளம் காலை வெயிலிலும் மாலை வெயிலிலும் பிறந்தகுழந்தையை சிறிது நேரம் படுக்க வைத்தால் அந்த குழந்தைக்கு விற்றமீன் D கிடைக்கும்.

❁ கோடை காலத்தில் தாகம் எடுத்தாலும் எடுக்காவிட்டாலும் அவ்வப்போது தண்ணீர் குடிக்க வேண்டும் இது சரும வறட்சியை நீக்குவதோடு சிறுநீரகம் மலக்குடல் சிறப்பாக செயல்பட உதவும்.

❁ பழைய டூத்பிரஷ்களை தூக்கி எறிந்து விடாதீர்கள்! மரக்கதவு கிரீல் கேட் போன்றவற்றின் இடுக்குகளில் உள்ள தூசிகளை அகற்ற இதை விட சிறந்த பொருள் வேறு எதுவும் கிடையாது.

❁ மீன்தொட்டியில் உள்ள பழைய தண்ணீரை மாற்றும்போது அதை கீழே கொட்டி விடாமல் செடிகளுக்கு ஊற்றினால் செடிகள் செழித்து வளரும்.

❁ சாப்பாட்டு மேஜையை துடைக்கும் துணியில் சிறிதளவு உப்போ கற்பூரமோ வைத்து துடைத்தால் ஈ மற்றும் பூச்சிகள் உட்காராது.

❁ பழைய சென்ட் பாட்டில்களில் சிறிது தண்ணீர் விட்டு நன்கு குலுக்கி வைத்துக் கொண்டால் கைக்குட்டைகளை மணக்க செய்யலாம்.

❁ உங்கள் வீட்டு குளிர்சாதனப்பெட்டியிலிருந்து துர்வாடை வந்தால் ஏதாவது ஒரு எசன்ஸை ஒரு துண்டு பஞ்சில் தோய்த்து குளிர்சாதனப்பெட்டியில் உள் மூலையில் போட்டு விடுங்கள். இனி குளிர்சாதனப்பெட்டி திறந்தால் ஒரே கமகமதான்.

❁ ஊதுவத்தி பாக்கெட்டுகள் காலியானதும் அவற்றை துணிவைக்கும் பீரோவில் போட்டு வைத்தால் பீரோவை திறக்கும்போது கம கமக்கும்.

❁ துணிகளை துவைத்து முடித்தபின் கடைசியாக அலசும்போது அந்த தண்ணீரில் சில சொட்டு கிளிசரின் கலந்துவிட்டால் துணிகள் சுருக்கம் இல்லாமல் இருக்கும்.

❁ நைலான் கயிரை வாங்கியவுடன்சோப்பு நீரில் நனைத்து உபயோகித்தால் நீண்ட நாள் உழைக்கும்.

❁ தரையில் எண்ணெய் கொட்டிவிட்டால் அதன்மீது கோலப்பொடியை தூவிவிட்டு துடைத்தால் எண்ணெய் பசை நீங்கிவிடும்.

❁ ஏலக்காயை பொடித்து அதன் விதைகளை உபயோகத்திற்கு எடுத்தபிறகு தோலை எறிந்து விடாமல் குடிக்கும் நீரில் போட்டு வைத்தால் தண்ணீர் மிகுந்த ருசியாக இருக்கும்.

❁ நிறம் மங்கிய வெள்ளைதுணிகளை வினிகர் கலந்த நீரில் ஊற வைத்து துவைத்தால் துணி பளிச்சென்று இருக்கும்.

❁ மெழுகுவர்த்திகளை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து தேவைப்படும்போது உபயோகப்படுத்தினால் சீக்கிரத்தில் உருகாது அதிக நேரம் எரியும்.

சந்திரமுகியின் மனப்பிரமை பேய், முனி, காஞ்சனாவின் பழிவாங்கும் பேய், யாமிருக்கப் பயமே-வில் சிரிக்கவைக்கும் பேய் போன்ற வரிசையில் ஹன்சிகா, ராய்லட்சுமி, ஆண்ட்ரியா - இவர்களுடன் கவர்ச்சியாக பயங்காட்டி திகிலுடன் சிரிக்கவைக்கும் மற்றுமோர் பேய் படைப்புத்தான் சுந்தர்-சியின் 'அரண்மனை'.

படத்தின் முன்பாதியில் வினய் தனக்குச் சொந்தமான ஓர் அரண்மனையை விற்பதற்கு அவரது மனைவி ஆண்ட்ரியா மற்றும் உறவினர்களுடன் வருகிறார். ஆனால், அவர்கள் அனைவர்க்கும் அங்கே பல விரும்பத்தகாத பயங்கர சம்பவங்கள் நடக்கின்றன. பின்பாதியில் ஆண்ட்ரியாவின் அண்ணன் கதாபாத்திரமாகவும் படத்தின் இயக்குநராகவும் வரும் சுந்தர்-சி அதற்கான காரணத்தையும் தீர்வையும் கண்டுபிடிக்கிறார்

அரண்மனை படத்தில் ஒரு புது முயற்சியாக பயங்கர திகிலையும் நகைச்சுவையையும் கவலைவயாகக் காட்டப்பட்டுள்ளது இப்புது முயற்சிக்காக இயக்குனரை பாராட்டினர்.

சுந்தர்-சி அண்ணன் கதாபாத்திரத்தை ஏற்று பொறுப்பான அண்ணனாக நடித்திருக்கிறார். அதைவிட மற்றொரு கதாநாயகனாக வரும் வினய் கொடுத்த பாத்திரத்தை சிறப்பாகச் செய்திருக்கிறார். இரண்டு கதாநாயகர்கள் இருந்தாலும் நாயகிகளின் இராஜ்யமே படத்தில் மேலோங்கி நிற்கின்றன. நாயகியாக வரும் ஆண்ட்ரியா படத்தில் பேயாட்டம் ஆடுகிறார். இவரின் உடம்பில் பேய் புகுந்தவுடன் இவர் செய்யும் செய்கைகள் அருமை. ஹன்சிகா படத்தில் இடைவெளிக்கு சற்று முன்பு சிறிது நேரமே வந்தாலும் ஒரு கிராமத்துப் பெண்ணாக கவர்ச்சி உடை மற்றும் ஒப்பனை எதுவும் இல்லாத அழகுடனும் நடிப்புடனும் பார்வையாளர்களின் மனத்தில் நிற்கிறார்.

சந்தானம் வழக்கம்போல் அவரது கலாய்த்தல் நகைச்சுவையில் கோவை சரளா, மனோபாலாவுடன் வயிறு வலிக்கும் அளவுக்கு நகைச்சுவைச் சிரிப்பை வழங்கியிருக்கிறார். பரத்வாஜ் இசையில் பாடல்கள் அனைத்துமே கேட்கும் வகையில் உள்ளன. பின்னணி இசையிலும் கலக்கியுள்ளார். செந்தில்குமாரின் ஒளிப்பதிவு பிரமாண்டம். மொத்தத்தில் அரண்மனை கலகலப்பான திகில்வீடு.

**நாயகன்கள்**
சுந்தர்-சி,
வினய்


**நாயகிகள்**
ஹன்சிகா,
ராய்லட்சுமி
ஆன்ட்ரியா.

**இயக்குனர்**
சுந்தர்-சி

**இசை**
பரத்வாஜ்

**ஒலிப்பதிவு**
செந்தில்குமார்.






இன்றைய திகதியில் ஒட்டுமொத்த தமிழ் திரையுலகத்தின் கவனமும் தீபாவளிக்கு வெளி வருகின்ற 'ஐ' படத்தின் மீதே உள்ளது. விக்ரம், எமிஜக்சன் மற்றும் பலரின் நடிப்பில் சங்கரின் இயக்கத்தில் ஏ.ஆர். ரகுமானின் இசையமைக்க பி.சி. சிறிராம் இன் ஒளிப்பதிவில் வெளிவர இருக்கின்ற 'ஐ' படத்தின் இசை வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் காண்பிக்கப்பட்ட முன்னோட்டத்தை (டிஸர்) பார்த்து தமிழ்த் திரையுலகம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியத் திரையுலகமுமே பிரமித்துப்போயுள்ளது.

'ஐ' படம் தொடர்பாக நாளுக்குநாள் வெளிவருகின்ற செய்திகள் படம் பற்றிய எதிர் பார்ப்பை மேலும் அதிகரித்துக்கொண்டிருக் கிறது. இப்படத்தின் முன்னோட்டம் இதுவரை இந்திய திரையுலகில் எந்தப்படமும் சாதிக்காத ஒரு சாதனையைச் செய்துள்ளது. அதாவது, வெளியான ஒரே வாரத்தில் 57 இலட்சத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் பார்த்துள்ளனர். அதுமட்டுமன்றி, இந்தியாவிலேயே அதிக செலவில் தயாரான படம் என்ற பெருமை கொண்ட இப்படம், உலகம் முழுவதிலும் இந்திய மதிப்பில் 5,000 கோடி ரூபாவுக்கு வியாபாரம் ஆகும் என எதிர்பார்க்கப்படுவதாக அப்படத்தைத் தயாரித்த நிறுவனம் கூறியுள்ளது.

இவ்வாறு அனைவரினதும் எதிர்பார்ப்பை எகிற வைத்துள்ள 'ஐ' படம் ரசிகர்களைத் திருப்திப்படுத்துமா என அறிந்துகொள்வதற்கு தீபாவளி வரும்வரை பொறுத்திருப்போம்.

# சர்ச்சைக்குள்ளான 'கத்தி'

தீபாவளிக்கு வெளிவருகின்ற மற்றுமொரு படம் இளைய தளபதி விஜய், சமந்தா மற்றும் பலரின் நடிப்பில் முருகதாஸ் இன் இயக்கத்தில் வெளிவர இருக்கின்ற 'கத்தி.' ஆரம்பத்தில் இருந்தே இப்படம் பல சர்ச்சைகளில் சிக்கிவந்துள்ளது. இப்படத்தின் தயாரிப்பாளர் தொடர்பான எதிர்மறையான கருத்துகள் வெளிவந்த நிலை யில் இப்படத்தை வெளியிடக்கூடாது என தமிழ் நாட்டைச் சேர்ந்த பல்வேறு அமைப்பினராலும் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. ஆயினும், இவற்றையெல் லாம் சமாளித்தவாறு இப்படம் தீபாவளிக்கு வெளிவருவது உறுதியாகியுள்ளது.

இப்படத்தின் இசை வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றுள்ளது. அதில் கலந்துகொண்ட இளையதளபதி விஜய், தான் தியாகியும் அல்ல துரோகியும் அல்ல என ஓர் உருக்கமான உரையை ஆற்றியிருந்தார்.

அடுத்த சுப்பர் ஸ்டார் விஜய்தான் என செய்திகள் அடிபட்டுக்கொண்டிருக்கும் இவ் வேளையில், அதை நிரூபிக்கும் வகையில் 'கத்தி' படம் பெருவெற்றியைப் பெற்றுக் கொடுக்குமா என்பதைக் காண தீபாவளிவரை காத்திருப்போம்.



PUBLIC LIBRARY JAFFNA

# கணவன் மனைவியானால்...

ஒரு கணவன் கடவுளிடம் மண்றாடி வேண்டினான், "நாள் முழுவதும் நான் கடுமையாக உழைக்கிறேன். அலுவலகம் செல்ல வேண்டியுள்ளது. அங்கு மேலதிகாரி, சக ஊழியர்கள் என எல்லோருடனும் மல்லுக்கட்ட வேண்டியுள்ளது. அதுபோக அலுவலகம் போகும்போதும் திரும்பி வரும்போது தெருவிலும் பஸ்ஸிலும் பலருடன் சிரமப்பட வேண்டியுள்ளது. ஆனால் என் மனைவி வீட்டில் ஒரு சிரமமும் இல்லாது மகிழ்ச்சியாக இருக்கிறாள். போதாக்குறைக்கு என்னிடம் வேறு குற்றம் குறை காண்கிறாள்.

எனவே, என்னை பெண்ணாக்கி என் மனைவியை ஆணாக்கிவிடுங்கள். அப்போதுதான் அவளுக்கு ஆண்களின் துன்பமும் சிரமமும் புரியும் என்றான்.

"கடவுளும் அவனது வேண்டுகோளை ஏற்று மறுநாளே அவர்கள் இருவரையும்; கணவனை மனைவியாகவும் மனைவியைக் கணவனாகவும் மாற்றிவிட்டார்.

மனைவி ஆணானவுடன் வேலைக்கு சென்றாள். பெண்ணான கணவன் காலை எழுந்து வீடு வாசல் சுத்தம் செய்து, அடுப்படி வேலைகளை முடித்து பிள்ளைகளை பள்ளிக்குத் தயார் செய்து அனுப்பிவிட்டு, கடைக்கு சென்று காய்கறிகள் வாங்கி வந்து சமையல் முடித்து, இப்படியாக இரவு நெடுநேரம் வரை வேலை இருந்தது.

மறுநாள் எழுந்ததும் முதல் வேலையாகக் கடவுளிடம்,

"ஐயோ கடவுளே! பெண்களுக்கு இவ்வளவு துன்பங்கள் இருப்பதை உணராது இருந்து விட்டேனே! என்னால் இந்த பொறுப்புகளை எல்லாம் சுமக்க முடியாது.


தயவுசெய்து என்னை மறுபடியும் ஆணாக்கி, என் மனைவியைப் பெண்ணாக்கிவிடுங்கள்" என்று அழுது மண்றாடி வேண்டினான்.

கடவுள் சொன்னார்,

"உன் வேண்டுகோளை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அதற்கு நீ நாற்பது வாரங்கள் காத்திருக்க வேண்டும்." என்றார் அவன் ஒன்றும் புரியாமல் விழிக்க,

கடவுள் சொன்னார்,

"இப்போது நீ கருவுற்றிருக்கிறாய்."



# Happy Birth day to you ஒக்டோபர் 2014


ஹரனி கேதீஸ்வரன்
01 ஆம் திகதி


ஜெ.அபிஷா
02 ஆம் திகதி


செ. துவாரகன்
03 ஆம் திகதி


டி. பாஷிக்கா
04 ஆம் திகதி


ஏ.ஆர். அப்துல் ரகுமான்
05 ஆம் திகதி


எம். தனுக்ஷன்
05 ஆம் திகதி


சபரினா மகேஸ்வரன்
06 ஆம் திகதி


அஞ்சனா விமலராஜன்
07 ஆம் திகதி


வி. லிந்துஜன்
08 ஆம் திகதி


வா. அன்ரனி
08 ஆம் திகதி


எஸ். சுஜீவன்
11 ஆம் திகதி


ஜெ. அபிலாஷினி
11 ஆம் திகதி


வாசுதேவன் ஹம்சத்வனி
12 ஆம் திகதி


ஜோ.யூட்.ஹெரோன்
14 ஆம் திகதி


பி. பவீனா
14 ஆம் திகதி


டெனிலியா கிறிஸ்ரபெல்
15 ஆம் திகதி


அஜினி அஜ்ஜிதன்
18 ஆம் திகதி


அபிசனா செல்வன்
19ஆம் திகதி


ஜெசோன் ஜேசுநேசன்
24 ஆம் திகதி


ஐசாயினி சந்திரபிரகாஸ்
28 ஆம் திகதி


ப. கிஷாளி
29 ஆம் திகதி


சகானா கஜேந்திரன்
29 ஆம் திகதி


பெ. பிறிஜோன்
29 ஆம் திகதி


வ.கவிவரதா
30 ஆம் திகதி


ச. அஷ்வினி
30 ஆம் திகதி

# தரம் 4,5 மாணவர்களுக்கான பல்திறன் அறிவுப்போட்டி 02

வழமையாக இப்பகுதியில் இடம் பெற்றுவந்த கணிதப்புதிர், விடுகதை போட்டி நிறைவுப்பெற்று இம் மாண வர்களின் பல்வேறுப்பட்ட திறன் களை விருத்தி செய்யும் பொருட்டு தமிழ் மொழி, சுற்றாடல், கணிதம், பொதுவிவேகம் ஆகிய நான்கு துறைகள் உள்ள டங்க ளாக இப்போட்டி அமைகின்றது. இலங்கையின் பிரபல்யமான ஆசிரியர்களி னால் இவ் வினாக்கள் தயாரித்து வழங்கு வது இதன் சிறப்பம்சமாகும். இப்பகு திக ளில் இடம்பெறும் வினாக் களுக்குரிய சரியான விடைகளுக்குரிய இலக் கத்தை அருகில் உள்ள விடைக் கூப்ப னில் நிரப்பி மூன்றாம் பக்கத்தில் காணப் படும் எமது முகவரிக்கு இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். தெரிவு கள் குலுக்கல் முறையில் இடம்பெற்று மாணவர்களுக்குரிய பரிசுகள் குறிப்பிட்ட காலப் பகுதிற்குள் அனுப்பி வைக்கப்படும்.


## விடைக்கூப்பன் போட்டி - 2

| தமிழ் | சுற்றாடல் |
|---|---|
| 1. ........ | 1. ........ |
| 2. ........ | 2. ........ |
| 3. ........ | 3. ........ |
| 4. ........ | 4. ........ |
| 5. ........ | 5. ........ |

| கணிதம் | பொதுவிவேகம் |
|---|---|
| 1. ........ | 1. ........ |
| 2. ........ | 2. ........ |
| 3. ........ | 3. ........ |
| 4. ........ | 4. ........ |
| 5. ........ | 5. ........ |

**1ஆம் பரிசு 2000/=** **2ஆம் பரிசு 1500/=** **3ஆம் பரிசு 1000/=**

### தமிழ்மொழி



வி. அன்பழகன்
யாழ்ப்பாணம்

1. வயது என்பதன் ஒத்தபதம் யாது?
   1. ஆண்டு 2. அகவை 3. மாதம் 4. மணிவிழா
2. பதட்டம் என்பதன் திருத்தமான வடிவம் யாது?
   1. பதற்றம் 2. பதட்றம் 3. பதற்டம் 4. பதடம்
3. யானை/தேர் செலுத்துவோரை எவ்வாறு அழைக்கலாம்?.
   1. சாரதி 2. வாலன் 3. இடையன் 4. பாகன்
4. தே.க.நி. என்பதன் விரிவாக்கம் யாது?
   1. தேயிலை கலக்கும் நிலையம் 2. தேசிய கல்வி நிலையம்
   3. தேசிய கல்வி நிறுவகம் 4. தேசிய கலைஞர் நிறுவனம்
5. ''வாடிவதங்கி'' என்பது எவ்வகையான சொல்?
   1. அடுக்குமொழி 2. இரட்டைக்கிளவி
   3. இணைமொழி 4. உவமைத்தொடர்

### சுற்றாடல்



பி.எம். புண்ணியாமீன்
கண்டி

1. கரப்பந்தாட்ட விளையாட்டில் ஒரு அணியில் இடம்பெறும் வீரர்களின் எண்ணிக்கை ?
   1.7 2.6 3.4 4.11
2. தாவரமொன்றில் காய் காய்ப்பதற்கு உதவுவது
   1.தேனீ 2.குருவி 3.மண்புழு 4.எறும்பு
3. நுகர்வுக்கான வர்த்தகப் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் இலங்கையின் இலச்சினை?
   1.SLS 2.SOS 3.ISO 4.ISBN
4. தேசப்படங்களில் பெருந்தெருக்களை காட்டுவதற்காக பயன்படுத்தும் நிறம் எது?
   1.கறுப்பு 2.நீலம் 3. பச்சை 4.சிவப்பு
5. ''பிரித் ஓதிய நீர் தெளித்தல்'' இச்சமய சடங்கு காணப்படும் மதம்
   1. பௌத்தம் 2. இஸ்லாம் 3. இந்து 4. கிறிஸ்தவம்

1. 1.5ml தைலத்தை 25ml கொள்ளத்தக்க சிறிய போத்தல்களில் அடைப்பதாயின் எத்தனை சிறிய போத்தல்கள் தேவை?
1.40 2.50 3.60 4.80

## கணிதம்



கே. சுதர்சன்
கொழும்பு

2. 9பேர் 8 நாட்களில் செய்யும் வேலையை 4 பேர் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்?
1.18 நாட்கள் 2.72நாட்கள்
3.16 நாட்கள் 4.20நாட்கள்

3. 1l பெற்றோலில் 35km ஓடக்கூடிய கார் 700km ஓட எத்தனை லீற்றர் பெற்றோல் தேவை?
1. 200ட்l 2.20l 3.10l 4.5l

4. லீப்வருடத்தில் மட்டுமே ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப் படுகின்றன 2008 ஆம் ஆண்டு 29ஆவது ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன. 2016 ஆம் ஆண்டு எத்தனையாவது ஒலிம்பிக் விளையாட்டு நடைபெறும்?
1. 31வது 2.30வது 3.33வது 4.32வது

5. பிற்பகல் தளவாடியில் பார்க்கும் போது 7.00 மணிகாட்டியதாயின் அக்கடிகாரத்தின் உண்மையான நேரத்தை நியம நேரத்தில் எழுதுக?
1.19:00h 2.6:00h 3.05:00h 4.17:00h

## பொதுவிவேகம்




பி.அம்பிகைபாகன்
கொழும்பு

1. A என்னும் நாட்டில் மாலை 3.00 மணியாக இருக்கும் போது B எனும் நாட்டில் அதேநாள் 8.00 மணியாக இருக்கும். B எனும் நாட்டில் மாலை 3.00 மணியாக இருக்கும் போது A எனும் நாட்டில் என்ன நேரமாக இருக்கும்?
1. மாலை 1.00 மணி 2. காலை 8.00மணி
3. இரவு 10.00மணி 4. இரவு 10:30 மணி


2. EAT என்பதை 5,1,20 எனவும் ATE என்பதை 1,20,5 எனவும் குறித்தால் TEA என்பதை எவ்வாறு குறிக்கலாம்?
1. 20,5,1 2. 20,1,5, 3. 1,5,20 4.20,1,5


3. ஒரு பால் போத்தலின் விலை ரூபா 10 ஆகும். போத்தலின் விலையை விட பாலின் விலை ரூபா 6 அதிகமாகும். ஆகவே பாலின் விலை யாது?
1. ரூபா. 6.00 2. ரூபா 8.00 3. ரூபா 9.00


4. 



என்கோலத்தின் வினாக்குறி இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய எண் யாது?
1. 6 2.12 3.9 4.4

5. இச்சதுரமுகி ஆக்கப்பட்ட அட்டைக்கீலம் எது?




1. 



2. 


3. 


அனுசரணை:
BOOKVIN
www.bookvin.com

### சென்ற மாத பல்திறன் போட்டிக்கான விடைகள்

| தமிழ் | | | | கணிதம் | | | | சுற்றாடல் | | | | பொதுவிவேகம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 3 | 2. | 2 | 1. | 3 | 2. | 1 | 1. | 3 | 2. | 1 | 1. | 3 | 2. | 3 |
| 3. | 1 | 4. | 1 | 3. | 2 | 4. | 3 | 3. | 3 | 4. | 1 | 3. | 2 | 4. | 2 |
| 5. | 2 | | | 5. | 1 | | | 5. | 2 | | | 5. | 2 | | |


Mogan's
Jewellery Mart
மோகன்ஸ்
116A, Sea Street,
Colombo-11
Tel:- 0112439213,
0777789794


SR Thangamalikai
78
J/ மஹாலக்ஷ்மி
எஸ்.ஆர். தங்கமாளிகை
அசல் 22 கரட் நகைகள்
No. 78, Sea Street, Colombo - 11
Tel : 2330937 Fax : 2458581 Res: 2449792



SHAYEE
PRINTERS
Typesetting, Scanning Plate making, Offset Printing ,
Die Cutting, Screen Printing, Foiling and Binding Dealers
in all kinds of paper & Board. wedding cards,
Invitation Cards.
Tel: 0777 271 478 Email. jeyaoffset@gmail.com
No: 29, St. Sebastian Street, Kesalwatha
(Gunasingapura), Colombo - 12.


அனைவருக்கும் தீபாவளி
வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்
DANA LUXMIE BANKERS
AND TRADERS
29, Main Street,
Haputale.
T.P :- 0572268205


அனைவருக்கும் தீபாவளி
வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்
V. S. Agencies
Newspaper and Advertisement Agency
239/D/6, Lower Street,
Badulla.
T.P:-055 3053255
077 9942876

# "ஒளி அரசி" குறுக்கெழுத்துப்போட்டி

## "ஒளி அரசி" குறுக்கெழுத்துப் போட்டி இல. 11



**போட்டி முடிவு திகதி 25.10.2014**

### இடமிருந்து வலம்

1) வாதாபிஎன்று அழைப்பட்ட மன்னன்?
2) கேள்வி மாறியுள்ளது.
3) மனதுக்கு இதமளிப்பது.
5) நாற்பது திருடர்களை சமாளித்தவர்!
7) கல்லில் இது உரிக்க இயலாது. (மாறியுள்ளது)
12) தன் வாயால் கெடும்.
13) காப்பு

### மேலிருந்து கீழ்

1) சர்பத்தில் கலக்கும் பொருள் அது?
2) அசாத்திய திறமை உள்ளவரை இப்படி சொல்லலாம்.
4) வாசனை தரும் ஒரு மலர்
6) ஈழத்தில் உள்ள ஒரு நகரம்.
7) வரண்ட பிரதேசத்தில் வளரும் தாவரம்
8) சோகம்
9) அரைவாசி'
11) மருதம்
14) மரத்தின் பகுதி






**குறுக்கெழுத்துப் போட்டி**
**இல: 09 பரிசு பெறும்அதிர்ஷ்டசாலிகள்**

**முதல் பரிசு ரூபா 1,500**

வி. செல்வநாயகம்.
சிவன்கோயில் வீதி,
புத்தூர்.

**இரண்டாம் பரிசு ரூபா 1,000**

கே. கந்தசாமி
கே/அசோகா வித்தியாலயம்
கண்டி.

**மூன்றாம் பரிசு ரூபா 500**

கனகசபை நாகேந்திரன்
11 - 3/1, நெல்சன் இடம்,
வெள்ளவத்தை. கொழும்பு - 06.

**சரியான விடைகளை எழுதி பாராட்டு பெறுபவர்கள்**

1. திருமதி. வஸந்தா பாலேந்திரா
இல: 21, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.
கொழும்பு - 06.
2. சதா தஷாரிகன்
25/3, மாரியம்மன் கோவில் வீதி,
கல்லடி. மட்டக்களப்பு.
3. செல்வி. வி. தாரங்கனி
63/7, புதுமுகத்துவார வீதி, கல்லடி.
மட்டக்களப்பு.
4. திருமதி. சாந்தி கிருஷ்ணா
10ஆம் வட்டாரம்,பிரதான வீதி,
மட்/கொக்கட்டிச்சோலை.
5. கே.எப். மில்ஹானி
14, புளியடி குறுக்கு வீதி,ஏறாவூர் - 06.
6. ஐ. தாஜுடீன்
மென்ஸ் வீதி,அட்டாளைச்சேனை.
7. செல்வி. ரங்கநாதன் லோஸ்னியா
செட்டிபாளையம் - வடக்கு,செட்டிபாளையம்.
மட்டக்களப்பு. (கி.மா)
8. மொஹமட் உமைர்
301/ஏ, துனுவில ரோட்,வரகஸ்சின்ன.
அக்குரண.
9. திருமதி: எஸ். பாக்கியநாதன்
பிரதம நூலகர், கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல.
7, சங்கம் ஒழுங்கை. கொழும்பு - 06.
10. ஏ.றஜப்டீன்,
73/ஏ, தவ்ரு வீதி,பாலமுனை - 02.

"ஒளி அரசி" குறுக்கெழுத்துப்போட்டி இல.08




7STORIES
Ranjanas
0%
my
wedding plan
It completes
your special
moment
Find us on:
facebook
www.7stories.lk
No.318, Galle Road, Colombo 4.
Hotline 011 2 590 070

NEW

# ANU Beauty Clinic & Hand Work Centre

**Ladies only**

அனைத்து விதமான மணப்பெண்
அலங்காரங்களும் Cake Order களும்
மிக சிறப்பாக செய்துத்தரப்படும்

இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறும்
அனைத்து விதமான மணப்பெண் அலங்கார
Order களும் சிறப்பான
முறையில் செய்துத்தரப்டும்.

## Our Courses

- Self Grooming - Level 1 - 15000/-
  Level 2 - 25000/-
- Certification in Bridal Makeup - 25000/-
- Diploma In Hair Care
- Diploma In Skin Care
- Diploma In Bridal Care
- Advanced Treatment Courses
- Cake Icing, Structure
- Sugar Flower Making
- Varierty Cakes
- Short Courses Also Available

**Special Pack**

Normal Facial
Threading
Oil massage
Foot massage
Pedi Cure
} 3400/- only

வாடிக்கையாளர்
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!



## Our Service

- கன்னம், நாடி போன்ற இடத்தில் தோன்றும்
- தேவையற்ற உரோமங்களை நிரந்தரமாக நீக்கல்.
- ஆரம்ப வழுக்கையை நிரந்தரமாக இல்லாமல் செய்தல்.
- Oxy Peel Water Treatment மூலம் Bright face
- இனை பெற்றுக்கொள்ளல்.

குறைந்த செலவில்
எம்மிடம் கிடைக்கும்
பிரதிபலன் நிரந்தரம்
என்பது எமது
சிறப்பம்சமாகும்

**Bridal Budjet Package - 45000/-**

(02 Sarees, Jadainagam, Jewelaries, Boquet, Facial, Threading, Bleaching, Pedi Cure, Bridal Makeup)

Branch : No. 13, Jempettah Street, Colombo - 13
Tel: 0777 408443, 0115752618.

No. 11, Collingwood Place, Colombo - 06
Tel: 0772099546, 0777408443